செப்டெம்பர் 16 - 22, 2007 September 16 - 22, 2007

# சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
THE SUDAR OLI ஸுடர் ஒளி வார மலர்

40.00

## மு.காவின் தெருவிளக்கு அரசியல்



## மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு: இலங்கை தப்பிப் பிழைக்குமா?

# மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு: இலங்கை தப்பிப் பிழைக்குமா?

இலங்கையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்று மோதலில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுக்கும் இடையில் நடைமுறையில் இருக்கும் நிலையில் -

கடந்த வருடம் முதல் தொடரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான விடயம் தற்சமயம் ஜெனிவாவில் நடக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆறாவது கூட்டத் தொடரில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.







இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக கண்காணிக்க சர்வதேச கண்காணிப்புக் குழுவொன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இக்கூட்டத்தில் வலுப்பெற்று நிற்கின்றது.

மஹிந்தர் தலைமையிலான அரசு 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதவியேற்ற பின் இலங்கையில் பெருகி வரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் சர்வதேசத்தை ஈர்த்து நிற்கின்றன.

மோதல்கள் இடம்பெற்றுவரும் வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி, நாடு முழுவதும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

ஆள்கடத்தல்கள், கைதுசெய்து காணாமல்போதல், கப்பம் பெறுதல் ஆகியன சர்வ சாதாரணமாக அரங்கேறிக் கொண்டிருக்கின் றன.

இந்தச் சம்பவங்களின் பின்னணியில் அரசும் அரசு சார்ந்த குழுக்களும் இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் சர்வதேசமட்டத்தில் முன்வைக்கப்பட்டபோதும் இவற்றைத் தடுத்து நிறுத்த உருப்படியான நடவடிக்கை எவையும் அரசுத் தரப்பில் இருந்து வரவில்லை.

பதிலாக சம்வங்களுடன் தொடர்புடையவர்களைப் பாதுகாப்பதற்கே அரசு முனைந்து நிற்கின்றது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான சம் பவங்களில் சம்பந்தப்பட்டவர்களின் விவ ரங்களை சர்வதேச அமைப்புக்கள் வெளிப்படுத்தியபோதும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்து, ஆணைக்குழுக்களை அரசு நியமித்துக்கொண்டிருக்கின்றது.

ஆணைக்குழுக்கள், சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு பரிந்துரைகளைச் செய்தபோதும் அவற்றை நடைமுறைப்படுத்தவோ - கவனத்தில் எடுக்கவோ - அரசுத்தரப்பு தயாரில்லை என்பது தான் வரலாறு.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்று தனியான அமைப்பு ஒன்று சட்ட வரம்புக்குள் செயற்படுகின்றது.

அந்த அமைப்பு காணாமல் போனவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவுசெய்வதுடன் தனது பணியைப், பூர்த்திசெய்து வருகின்றது.

கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க அந்த அமைப்பு தவறியதால், இன்று யாழ். குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

குடாநாட்டில் விடுக்கப்படும் கொலை அச்சுறுத்தல் காரணமாக மக்கள் மத்தியில் அச்சநிலை ஒன்று உருவாகியுள்ளது.

யார், எவர் என்று தெரியாமல் சுட்டுத்தள்ளும் கலாசாரம் யாழ்ப்பாணத்தில் ஓங்கியுள்ள நிலையில், உயிர் அச்சுறுத்தல் காரணமாக அந்த அமைப்பில் சரண் அடைவோரும் அதிகரித்துக்கொண்டு போகின்றனர்.

குடும்பம் குடும்பமாக, தனி ஆள்களாக சரணடைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத் தப்பட்டு, யாழ். சிறைச்சாலையில் வைக்கப் படுகின்றனர்.

ஏதும் அறியாத அப்பாவிகள் கொலை அச்சுறுத்தல் என்ற காரணத்தால் குடும்பங்களைப் பிரிந்து யாழ்.சிறைச்சாலையில் வாழும் - இன்னல்களை அனுபவிக்கும் சூழலே காணப்படுகின்றது.

வசதிகள் குறைந்த நிலையில் - கொள்ளை - கசிப்பு போன்ற சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் தடுத்து வைக்கப்படும் சிறைச்சாலையில் இவர்கள் பெரும் சிரமங்களுடன் காலத்தைக் கழிக்கின்றனர்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைவோரை யாழ். நீதிமன்றத்துக்கு சமீபமாக ஓர் இடத்தில் வைக்குமாறு - பாதுகாக்குமாறு - பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா யாழ். நீதிமன்றத்துக்கு பல தடவைகள் உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார்.

சரண் அடைவோருக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டிய - அவர்களை வைத்துப் பராமரிக்கவேண்டிய - புனர்வாழ்வுத் திணைக்களம் எந்தவித நடவடிக்கையும் இன்றி வாளாவிருக்கின்றது.

எந்தவொரு குற்றங்களும் செய்யாமல், கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள தமக்கு எப்போது விடிவு வருமென இவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் கடந்த மாதம் வரை 490 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 900 பேர் கைதாகி, கைதாகாமல் காணாமல்போயுள்ளனர்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக இதுவரை சரண் அடைந்துள்ள 95 பேரும் மேற்கண்ட இரண்டில் ஒரு பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பார்கள்.

1995 - 96 ஆம் ஆண்டுகளில் காணாமற் போன 600 இற்கு மேற்பட்டவர்கள் தொடர்பான தகவல்கள் இன்னமும் புதைகுழிக்குள் கிடக்கின்றமை போன்று, இந்த 95 பேரின் கதியும் கேள்விக்குறியாகவே இருந் திருக்கும்.

இந்நிலையில் -

காணாமற்போதல்,கொலைகள்,கப்பம் கோரல்,உயிர் அச்சுறுத்தல் போன்ற சம்பவங்களை நேரில் அவதானிக்க சர்வதேச கண்காணிப்பு குழு ஒன்றை இலங்கையில் இயங்கச் செய்வது அவசியம் என்று எழும் குரல் நியாயமானதே என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

மோதலில் சம்பந்தப்பட்ட ஒருதரப்பான - விடுதலைப் புலிகளும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர். தமிழ் மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் வலியுறுத்தி நிற்கின்றனர்.

இக்கோரிக்கை தொடர்பாக - ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு கூடும் நேரத்தில் விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளனர், தெளிவாக்கியுள்ளனர்.

''கொழும்புக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்துலக நாடுகளின் பிரதிநிதிகள் வருகைதருகின்றபோது தமிழர் தாயகப் பிரதேசத்துக்கும் வருகைதந்து யதார்த்த நிலைமைகளை அறியவேண்டும்.

தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களைப் பல தசாப்தங்களாக இலங்கை அரசு இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தி வருகின்றது. இலங்கை இராணுவத்தினரால் படுகொலைகள், கடத்தல்கள், ஷெல் தாக்குதல்கள், வான்குண்டுத் தாக்குதல்கள், கிளைமோர் தாக்குதல்கள், கடற்பரப்பில் கடற்தொழிலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரச தலைவராக கடந்த 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்னர், அனைத்து வகையான மனித உரிமை மீறல்கள், தாக்குதல்கள், அனைத்துலக மனிதாபிமான சட்ட மீறல்கள் அதிகரித்துள்ளன.

கடந்த 21 மாத காலத்தினுள் இலங்கை இராணுவத்தினராலும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினராலும் 1,974 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதே குழுவினரால் 842 பேர் கடத்தப்பட்டு அல்லது கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போயுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையினாலும் இதர அமைப்புகளாலும் இக் கடத்தல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்பாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டபோதும், இலங்கை அரசு தனது தவறுகளை திருத்தும் என்ற அறிகுறிகள் தென்படவில்லை.

தமிழர் தாயகத்தில் தமது சொந்த வீடுகளில் வாழும் மக்கள் கூட பொருளாதாரத் தடைகளாலும், ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்டமையாலும் பெருந்துயருக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தமிழர் தாயகத்தின் மீதான இலங்கை இராணுவத்தினரின் வலிந்த தாக்குதல்களினால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பலவந்தமாக இடம்பெயர நேரிட்டுள்ளது. இதனால் சிறார்களின் கல்விச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாய செயற்பாடுகளை அப்படியே கைவிட்டு திடீரென இடம்பெயர்வதால் சொத்து இழப்பும் ஏற்பட்டுள்ளது. இடம் பெயர்ந்த பலரும் அடிப்படை வசதிகள் அற்ற நலன்புரி மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்குப் பிராந்தியத்தில் இலங்கை அரசு தெரிவுசெய்யப்பட்ட பகுதியில் இடம்பெயர்ந்தோர் வலுக்கட்டாயமாக மீள் குடியேற்றத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இடம்பெயர்ந்த மக்களை தமது சொந்த வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கவில்லை. அந்த மக்கள் பிளாஸ்ரிக் கொட்டகைகளில்தான் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

மூதூர் கிழக்கு மற்றும் சம்பூர்ப் பகுதிகள் அதி உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு, அந்தப் பிரதேச மக்கள் காலங்காலமாக பாரம்பரியமாக வாழ்ந்த அப்பிரதேசங்களில் வாழ அனுமதிக்கப்படவில்லை''. விடுதலைப் புலிகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செல்வி இப்படிக் கூறியுள்ளார்.

இதுவரை நடந்த கொலைகள், காணாமற்போதல் தொடர்பான பட்டியலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

திருகோணமலை 277, மன்னார் 122, யாழ்ப்பாணம் 607, மட்டக்களப்பு 577, முல்லைத்தீவு 74, அம்பாறை 70, வவுனியா 243, கிளிநொச்சி 04.

காணாமல் போகச் செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

திருமலை 30, மன்னார் 45, யாழ்ப்பாணம் 624, மட்டக்களப்பு 102, முல்லைத்தீவு 04, அம்பாறை 13, வவுனியா 24.

இதே காலப் பகுதியில் 16 வயதுக்கும் குறைந்த 69 சிறார்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 150 க்கும் மேற்பட்ட சிறார்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் பாதுகாப்புக் கோரி சரணடைந்துள்ளனர்.

இலங்கை இராணுவத்தினராலும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினராலும் 45க்கும் மேற்பட்ட மனிதாபிமானப் பணியாளர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 11 ஊடகப் பணியாளர்களும், 4 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் விடுத்துள்ள புள்ளி விவரங்களுக்கு மேலாக சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு, மனித உரிமைகள் அவதானிப்பகம், ஜெனிவா அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புக்களும் புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளதுடன் இலங்கையில் மோசமடைந்து வரும் நிலையை சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளன.

தற்சமயம் நடைபெற்று வரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் உலக நாடுகளுடன் சேர்ந்து இலங்கைப் பிரச்சினையும் முக்கிய இடம்பெறப் போகின்றது.

மனித உரிமை களுக்கான ஐ.நா. தூதுவரின் அறிக்கை குறித்து விவாதித்து, பாது காப்புக் கவுன்ஸிலின் கவனத்துக்கு எடுத்துச் செல்லவேண்டிய மனித உரிமை விவகாரங் கள் குறித்த தீர்மானம் எதிர்வரும் 24ஆம் திகதி எடுக்கப்படவிருக்கின்றது.

இலங்கை விவகாரமும் அதில் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாக இருக்கும் என மனித உரிமைகள் அமைப்புகள் கூறுகின்றன.

இந்த நிலையை தடுப்பதற்காக இலங்கை பகீரதப் பிரயத்தனம் செய்கிறது.

இலங்கையின் இடர் முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, சட்டமா அதிபர் ஸி.ஆர்.டி.சில்வா, இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க, ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கைத் தூதர் தயான் ஜெயதிலக கொண்ட குழுவினர் ஜெனிவாவில் முகாமிட்டுள்ளனர்.

இலங்கை எதிர்நோக்கும் பாரிய சவா லுக்கு முகங்கொடுக்க - அதைத் தடுத்து நிறுத்த - அக்குழு பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் இடம்பெறும் நாடுகளின் பிரதிநிதிகளுடன் இக்குழு பலசுற்றுப் பேச்சுக் களை நடத்திவருகின்றது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற அல்பிரட் துரையப்பா கொலை, கதிர்காமர் கொலை, தெற்கு கிளைமோர் தாக்குதல்கள் போன்ற விடயங்களை துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகள் மீது குற்றத்தைச் சுமத்தும் பாணியிலான கருத்துக்களை இக்குழு முன்வைப்பதாக தகவல்கள் கசித்துள்ளன.

எப்போதோ நடந்த விடயங்களையிட்டு கவ னம் செலுத்தாது, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்தே இம்முறை மனித உரிமை ஆணைக் குழுக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்குழுவுக்கு புறம்பாக ஜனாதிபதி தலைமையிலான உயர் மட்டக் குழு ஒன்றும் ஜெனிவா கூட்டத் தொடரில் பங்குபற்றப் போகின்றது.

**யாழவன்**

இலங்கை அரசு விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டும் வகையில் எந்த விதமான விடயங்களை முன்வைத்தாலும் -

இலங்கை விவகாரங்களை முழுமையாக அறிந்த மனித உரிமைகள் அமைப்புக்கள், ஆணைக்குழுவின் அங்கம் வகிக்கும் நாடுகள் முன்வைக்கும் கருத்துக்களே முதன்மைப்படுத்தப்படும் என்று கூறப்படுகின்றது.

சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டில் இருந்து இலங்கை தப்பிப் பிழைக்குமா? அல்லது ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலுக்கு பதில் கூற வேண்டிய நிலைக்கு தள்ளப்படுமா? அதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ★

# நரேன் முரளிதரன் பேசும் வயதில் இருந்தால்...
# இப்படிக் கூறுவார்...!




எனது தந்தை உலகப் பிரசித்திப் பெற்றவர். எப்போதும் கிரிக்கெட் விளையாட வெளியில் செல்வாராம்.

ஆனாலும் தந்தை எப்போதும் போல என்னுடன் இருப்பதால் நான் அதை உணர்வதில்லை.

எவ்வளவு பிரசித்தி பெற்றாலும் எனக்கென்றால் என்னை பாதுகாக்கும், அன்பு செலுத்தும் தந்தை மட்டும்தான்.

செ லி ங் கோ லை .:. ப்

**செலிங்கோ இன்சுவரன்ஸ்**

*சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ*

134, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: (011) 2 461 461 இணையத்தளம்: www.ceylincolife.com

பதிவுசெய்த காப்புறுதியாளர்



# விஜயகாந்த்

## காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி?

## தமிழகத்தில் புதிய அணி!



நடிகர் விஜயகாந்த் தனது தே.மு.தி.க. கட்சியை ஆரம்பித்த நாளிலிருந்து அவரது கட்சி எந்தக் கட்சியுடன் கூட்டணி சேரப்போகிறது என்பது குறித்த ஊகங்கள் பல வெளியிடப்பட்டு வந்துள்ளன. எனினும், இரு பாரிய திராவிட கட்சிகளுடனும் சேருவதை விரும்பாதவர் போலவே விஜயகாந்த் காட்டிக்கொண்டார். குறிப்பாக தி.மு.க.வுடன் கடும்மோதல் போக்கே கடைப்பிடிக்கப்பட்டது. தி.மு.க.வும், விஜய்காந்த் மீது கடுமையான பல நடிவடிக்கைகளை எடுத்தது.

விஜயகாந்த் மீது வருமானவரி சோதனை, அவரது திருமண மண்டப இடிப்பு என அதிகாரிகள் மூலம் அவரது கட்சி குறிவைக்கப்பட்டது. இதுகுறித்து அவர் தி.மு.க.வை கடுமையாக விமர்சிக்கவும் செய்தார். புதிய அரசியல்வாதிகளுக்கும், திராவிடன் என்ற அடையாளம் தேவைப்படுகிறது என கலைஞர் கிண்டலடித்தது விஜய்காந்தின் கோபத்தைக் கிளறியது.

இதேவேளை ஜெயலலிதாவுடன் இவ்வாறு கடுமையான மோதல் இருக்கவில்லை. ஆயினும், இவரது அரசியல் பிரவேசம் அ.தி.மு.கவுக்கே அதிக அச்சுறுத்தல் என கருதப்படுகிறது.

காரணம் நகர்ப்புற படித்த வாக்காளர்களும், சிறுபான்மையினரும் தி.மு.க.வுக்கே வழக்கமாக வாக்களிக்கின்றனர். நகரங்களில் படிப்பறிவற்ற பாமர மற்றும் கிராமப்புற மக்களே அ.தி.மு.கவை ஆதரிப்பது வழக்கம். சினிமாக் கவர்ச்சி வாசகங்களிகளால் ஈர்க்கப்படுவோர் இவர்களே! இதனால் விஜயகாந்த் பிரவேசம் அ.தி.மு.க.வின் வாக்கு வங்கியில் கணிசமானதை கபளீகரம் செய்துவிடும் வாய்ப்பு இருக்கவே செய்கிறது.

இதனை உணர்ந்தே தே.மு.தி.க.வை தனது அணியில் சேர்க்க அம்மா உத்தேசம் கொண்டுள்ளாராம்.

எனினும், காங்கிரஸ், பி.ஜே.பி என தன்னை நம்பியவர்களையும், ஆதரித்தோரையும் எடுத்தெறியும் அம்மாவின் அகம்பாவம் விஜய்காந்துக்கு நெருடலாக உள்ளது. வேறுவழியின்றியே வைகோ அம்மாவுடன் இணைந்துள்ளார். எதிர்காலத்தில் அம்மா பதவிக்கு வருவார் என கணக்கிட்டே பா.ம.க. அம்மாவை நெருங்குகிறது. மற்றப்படி அம்மாவின் நம்பகத் தன்மையினால் அல்ல என்பது விஜய்காந்துக்கு விளங்கியுள்ளது.

எனவே அவர் அ.தி.மு.க. அணியில் சேர

பக்கத்து வீடு

விரும்பவில்லை. தி.மு.க.வுடனும் மோதல். ஆனால் அணிசேராமல் எதனையும் சாதிக்கமுடியாது என்பது இன்றைய தமிழக அரசியலின் யதார்த்தம். எனவே பி.ஜே.பி. அல்லது காங்கிரஸுடன் கைகோப்பது அவசியமாகிறது.

பி.ஜே.பியை விட காங்கிரஸுக்கு வாக்குப்பலம் அதிகம். எனவே விஜயகாந்த் காங்கிரஸ் பக்கம் சாய உள்ளார் என்கின்றனர் நோக்கர்கள்.

இந்தப் பின்னணியில்தான் சமீபத்தில் நடந்த மூப்பனார் பிறந்த நினைவுவிழாவில் விஜயகாந்த் கலந்து கொண்டுள் ளார்.

மூப்பனாரின் மகனும் மத்திய அமைச்சருமான வாசனுடன் கலந்துரையாடியும் உள்ளார். மூப்பனார் உயிருடன் இருந்திருந்தால் தனது அரசியல் பாதை வேறு விதமாக இருந்திருக்கும் என்று வேறு கூறியுள்ளார். இவையெல்லாம் காங்கிரஸ் பக்கம் 'கப்டன்' சாய்கிறார் என்பதை சோடி காட்டுகின்றன என கூறப்படுகிறது.

சமீபத்தில் நடந்த மதுரை மேற்கு சட்டசபை இடைத்தேர்தலில் அ.தி.மு.கவுக்கு 29 ஆயிரம், தே.மு.தி.கவுக்கு 21 ஆயிரம், காங்கிரஸுக்கு 60 ஆயிரம் என வாக்குகள் கிடைத்தன. அ.தி.மு.கவின் கோட்டையான மதுரையில் கப்டனுக்கு இவ்வளவு அதிக வாக்குகள் கிடைத்தது ஜெயலலிதாவுக்கு அதிர்ச்சியே! தவிரவும் தனது அணியில் அவரைச் சேர்ப்பதற்கு ஆட்களை தேடிக்கொண்டி ருக்கும் ஜெயலலிதா, புதிதாக கட்சிகளை இணைக்க விருப்பத்துடனேயே உள்ளார். எனினும் புதிய கட்சி ஒன்றுக்கு உடனடியாக அங்கீகாரம் வழங்க ஜெயலலிதா விரும்பவில்லை. மேலும் பா.ம.க. அல்லது விஜயகாந்த் இருவரில் ஒருவர் தான் அம்மாவின் அணியில் இருக்கலாம். காரணம் பா.ம.கவின் வெளிப்படையான சினிமா எதிர்ப்பாகும்.

விஜயகாந்த் இன்னும் நடித்து வரும் நடிகர் என்பதால் பா.ம.கவுடன் ஒரே அணியில் இருப்பது கடினம்.

ஜெயலலிதாவும் நடிகர் தான்; என்றாலும் அவர் முன்னாள் நடிகர் என்பதால் பா.ம.கவின் சினிமா எதிர்ப்பு அவ்வளவாக பாதிக்காது: மேலும் அம்மா அரசியலில் தன்னை நிலை நிறுத்திக்கொண்ட ஒரு சக்தி. விஜயகாந்தோ இன்று இன்னும் வளர்ந்து வரும் அரசியல்வாதி. இந்தக்காரணத்தால் அ.தி.மு.க வின் அணி யில்

**என்.விரேந்திரஜித்**

பா.ம.க, தே.மு.தி.க. இரண்டும் இணைவது சாத்தியமல்ல. இதனால்தான் காங்கிரஸ் அணிக்கு தாவ விஜயகாந்த் முயல்கிறார் எனக் கூறப்படுகிறது.

---

# கிழக்கில் தமிழ்மக்கள் எதிர்நோக்கும்-பிரச்சினைகள் எப்போது தீர்க்கப்படும்?









திருகோண மலையை அண்டிய பகுதிகளான பாலையூற்று, அன்புவழிபுரம், சாம்பல்தீவு, லிங்கநகர், 3ஆம் கட்டை, அலஸ்தோட்டம், உப்புவெளி, செல்வநாயக புரம் போன்ற இடங்களில் படையினரும் பொலிஸாரும் இணைந்து அடிக்கடி சுற்றிவளைப்பு தேடு தலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், அப்பகுதித் தமிழ்மக்கள் மத்தியில் அச்சமும், பீதியும் நிறைந்துபோயுள்ளது. மாணவர்களும், இளைஞர்களும் அங்கு படையினரால் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். இதனால், பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்து மிகுந்த கவலையும், ஏக்கமும் கொண்டவர்களாகத் தாய்தந்தையர்கள் காணப்படுகின்றனர். அத்துடன், இப்பகுதிகளில் வயது வித்தியாசமின்றி ஆயுதபாணிகளினால் படுகொலைச் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

20-08-2007 திங்கட்கிழமை அதிகாலையிலிருந்து அன்று நண்பகல் 12மணிவரை பாலையூற்றுப் பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்புத்தேடுதலில் 36 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மேலதிக விசாரணைக்காக திருகோணமலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். விசாரணையின்போது வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னர் பலர் திங்களன்று மாலை விடுவிக்கப்பட்டனர். ஏனையவர்கள் மீதான விசாரணை நள்ளிரவுக்கு மேலும் தொடர்ந்ததால், அவர்களது உறவினர்கள் பொலிஸ் நிலையம் முன்பாக இரவு முழுவதும் காத்திருந்தனர். இதனால், அவர்கள் கண்ணீர் விட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தனர். கைதானவர்களில் சிலர் தொடர்ந்தும் பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே, இந்த நிலையில் திருகோணமலையிலும் அரசபடையினர் பாதுகாப்பு என்ற் போர்வையில் ...தமிழ்மக்கள் மீது பெரும் நெருக்கடி களை ஏற்படுத்தி வருகின்றனர். திருகோணமலை நகரசபை எல்லைக்குட்பட்ட முக்கிய வீதிகள் மற்றும் சந்திகளில் இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார் என வீதிச்சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருகின்றனர். அத்துடன், போக்குவரத்துச்சேவை பஸ்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களும் முக்கிய இடங்களில் வழிமறிக்கப்பட்டு தீவிரசோதனைக்குட்படுத்தப்படுகின்றன. பயணிகளும் சோதனைகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். இதனால், பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதால் படையினர் மீது அவர்கள் அதிருப்தியடைந்து வருகின்றனர்.

இதேநேரம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பாரிய தமிழ்ப் பிரதேசம், தமிழ்மக்கள் செல்லமுடியாத பகுதியாக மாற்றப்பட்டுள் ளது. புலிகளிடமிருந்து தமிழ்மக்களை விடுவிப்பதாக கூறிய அரசாங்கம் இன்று அதேமக்களை மீளக் குடியமர்த்த மறுத்துள்ளது. கட்டுநாயக்காவிலும், கொலன்னாவையிலும் உயர்பாதுகாப்பு வலயமுள்ளது. அங்கு சிங்களமக்கள் வசிக்கின்றனர். ஆனால், மூதூர் கிழக்கில் இவ்வாறான வலயத்துக்குள் தமிழ்மக்கள் வசிக்கமுடியாதது ஏன்? இது தமிழ்மக்களுக்கு பாரிய சந்தேகங்களை கிழக்கில் ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பில் அண்மையில் படையினரால் கைப்பற்றப்பட்ட படுவான்கரைப் பகுதிக்கு மக்கள் செல்வதற்கு பலத்த கட்டுப்பாடுகளையும் பாஸ்நடைமுறைகளையும் படையினர் கடைப்பிடித்து தமிழர்களை வேதனைக்கு உள்ளாக்கி வருகின்றனர். படுவான்கரைப் பகுதிக்குச் செல்லும் நுழைவாயில்களான வவுணதீவுப் பாலம், மண்முனைத்துறை, அம்பிளாந்துறை, பட்டிருப்புப்பாலம் மற்றும் செங்கலடி கறுத்தப்பாலத்திலுள்ள இராணுவச் சோதனை நிலையங்களில் படையினரின் பாஸ்களைப் பெற்றே செல்லமுடியும். அதேபோல் படுவான் கரையிலிருந்து எழுவான் கரைக்கு வருவோரும் இந்தச் சோதனை நிலையங்களில் தங்கள் முழு விவரங்களையும் பதிவுசெய்யவேண்டும். இவ்விரு பகுதிகளும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன என்றால் படையினர் ஏன் பாஸ்(பதிவு) நடைமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும்? இது மக்களை பெரும் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உட்படுத்தும் ஒரு நடவடிக்கை யாகும்.

இதனால், மக்க்ள் குறிப்பிட்ட நேரஇடைவெளிக்குள் அவசரஅவசரமாகத் தங்கள் புகுதிகளுக்குத் திரும்பவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது எனவும் கருதப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இடம்பெயர்ந்த தமிழ்மக்களில் கூடுதலானவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டாலும், அவர்களால் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பக்கூடிய வழிவகைகள் இல்லாதிருப்பதாகக் கூறப்படுகின்றது. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த அவர்கள் தம்வசமிருந்த பொருட்கள், பண்டங்கள், கால்நடைகள் என அனைத்தையும் கைவிட்டும், இழந்துமே சென்றனர். தற்போதைய சூழலில் தங்கள் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பி முன்னைய நிலைக்கு மேம்படுத்துவது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. குறைந்த பட்சம் அவர்களின் இழப்புகளுக்கு உரிய நிவாரணம் வழங்கினாலாவது மீண்டும் முன்னைய நிலைக்குத் திரும்பக்கூடியதாக இருக்கும் என அந்தத் தமிழ்மக்கள் தெரிவிக்கின்றனர். இடம்பெயர்ந்த அப்பகுதித் தமிழ்மக்களை மீள்குடியேற்றி விட்டதாக பெருமையாகக் கூறிக்கொள்

**மூதூர்கிழக்கான்**

ளும் அரச அதிகாரிகளுக்கு மீள்குடியேற்றப் பட்ட மக்களை எந்த நிலையில், என்ன வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து மீள்குடியேற்றியுள்ளோம் என்பது பற்றித்தெரியாமல் உள்ளது. எனவே, அவர்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றிக் கொடுக்க அரச அதிகாரிகள் முன்வரவேண்டும்.

கிழக்கின் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இந்த அரசாங்கம் யுத்தப்போர்வையில் மூடி மறைக்க முற்படுகின்றது. இது பாரிய மனித உரிமை மீறல்களாகும் என பொதுமக்கள் பலராலும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

# அதிகார வர்க்கத்தின் அரூபக கரங்களை அம்பலப்படுத்தியவர்





**து**ணிச்சலான ஓர் இளம்பெண்ணின் மனஉறுதியுடன் கூடிய மனிதநேயப் பணியால் கலங்கிப்போய் இருக்கின்றது இலங்கை அரசு.

தற்போது சுவிட்ஸர்லாந்தின் ஜெனிவா நகரில் இடம்பெற்றுவரும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆறாவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கண்டனக் குரல்கள் எழுந்துள்ள சூழ்நிலையில் அவற்றை எதிர்கொள்ள முடியாது விழிபிதுங்கித் தவிக்கின்றது கொழும்பு.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசின் கடந்தகாலச் செயற்பாடுகள் மிக மோச மானவைதான் என்றாலும் அவை பற்றிய உண்மை நிலைமை இப்போது அம்பலமானது போல முன்னர் எப்போதும் வெட்ட வெளிச்சமாகியதில்லை.

படுகொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமல்போகச் செய்தல்கள், கப்பம் அறவிடல் போன்றவை தொடர்பான மோசமான மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகத் தின சரி புள்ளிவிவரங் கள் சர்வதேச ரீதி யில் உடனுக்குடன் அம்பலமாகியே வந் தன. இந்தக் கொடூரங்களின் பின்புலத்தில் அரசுத் தரப்பின் ஆசீர்வாதம் இருப் பது ப்ற்றிய விவகா ரம் சர்வதேச சமூகத்துக்குச் சாடைமாடையாகத் தெரிந்திருந்தாலும் கூட, உறுதியாக அதை நிரூபிக்கும் ஆதாரங்கள் இருக்க வில்லை.

மூதூரில் சர்வ தேச மனித நேயத் தொண்டர் அமைப் பின் பதினேழு பணியாளர்கள் கொல் லப்பட்ட விவகாரத்தில் கூட, அரசுத் துருப்பு கள் மீது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு குற்றம் சுமத்தியதோடு, விவகாரம் சரி. இன்றும் உண்மைக்குற்றவாளிகள் யார் என்பது தெரியவர வில்லை என்ற மன நிலையே சர்வதேச சமூகத்தின் மட்டத்தில் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றது.

திருகோணமலை நகரப்பகுதியில் கடந்த ஆண்டு முற்பகுதியில் ஐந்து தமிழ்மாணவர்கள் தலையில் துப்பாக்கி வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமாகட்டும், வவுனியாவில் விவசாயபீட மாணவர்கள் ஐவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகட்டும் கொலையாளிகள் யார் என்பது நிரூபிக்கப்படாத விவகாரமாகவே சர்வதேசத்துக்கு அவை தென்பட்டன.

அதுமட்டுமல்ல. தற்போது வடக்கு - கிழக்கில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் தினசரி தொடரும் மோசமான படுகொலைகள், ஆட்கள் பலவந்தமாகக் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்தல் போன்ற பல்வேறு அட்டூழியங்களுக்கான குற்றப்பொறுப்பு இனந்தெரியாத குழுக்கள் அல்லது தரப்புகள் மீது சுமத்தப்பட்டு விவகாரம் தட்டிக் கழிக்கப்படுகின்றது.

இந்த நிலைமையை முறியடித்திருக் கிறார் துணிச்சலான ஓர் இளம்பெண். அரசின் தட்டிக்கழிக்கும் போக்குக்கு ஆப்புவைத்து உண்மையை அம்பலப்படுத்திய அப்பெண் மீது மிகக் கடுப்பாக இருக்கிறது அரசுத்தலைமை.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் - சர்வதேசப் புகழ்பெற்ற - முக்கிய அமைப்பு 'மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch)'. அதன் தலைமையகம் நியூயோர்க்கில் உள்ளது.

அந்த அமைப்பின் ஆசியப் பிராந்தியத்துக்கான ஆய்வாளர் - அல்லது தகவல் திரட்டும் புலனாய்வாளர் - சாறு ஹெறாக் என்ற இளம் பெண். இந்தியாவைச் சேர்ந்த இவர் லண்டனை மையமாக வைத்து இயங்கிவருகிறார்.

அவரே சத்தம் சந்தடியின்றி

**- நவின் -**

இலங்கைக்கு வந்து வடக்கு , கிழக்கு எங்கும் சுற்றி அலைந்து, கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்படப் பலரையும் தனித்தனியே சந்தித்துப்பேசி, உண்மைகளைக் கண்டறிந்து இலங்கை நிலைமை குறித்து சந்தேகத்துக்கு இடமின்றி சகலதையும் சர்வதேசத்துக்கு போட்டுடைத்திருக்கின் றார்.

அவரது அனுபவப் பட்டறிவு சாட்சியத்தை ஆதாரமாக வைத்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்தமாதம் இலங்கை குறித்து வெளியிட்ட - சுமார் 130பக்கங்களைக் கொண்ட - அறிக்கை, ஒருபுறம் இலங்கை குறித்து உலகின் கண்களைத் திறக்க வைக்க, மறுபுறம் அந்த ஆய்வாளரான இளம்பெண் மீதும், அவரோடு உரையாடி தகவல்களையும், உண்மைகளையும் அவருக்கு வெளி யிட்ட தரப்புகள் மீதும் இலங்கை அரசைச் சீற்றமுற வைத்திருக்கின்றது.

வெறும் 'உல்லா சப்பயணி' என்று தம்மைப் பிரகடனப் படுத்தி, சுற்றுலாப்

(27 ஆம் பக்கம் பார்க்க)

---

மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை பற்றிய தனது அறிக்கையில் இலங்கை அரசை ஒரு பிடி பிடித்திருந்தாலும் புலிகளையும், கருணா குழுவினரையும் அது விட்டுவைக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்க விடயம்.

வெளிநாடுகளில் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் மத்தியில் அச்சுறுத்தி நிதிசேகரிக்கும் வேலையில் புலி கள் ஈடுபடுகின்றார்கள் என்று சாறு ஹெறாக் உட்பட்ட ஆய்வாளர்கள் கொடுத்த தகவல்களை மனித உரிமை கள் கண்காணிப்பகம் ஒன்று திரட்டி அவ்வப்போது அம்பலப்படுத்திவந்தது.

அந்த அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களையே விடுதலைப் புலிகளைப் பல்வேறு மேற்கு நாடு களில் பயங்கரவாத இயக்கமாகப் பட்டியலிட்டு, அறிவிக்கவைத்து, அதற்கு எதிராகத் தடை விதிக்கவைப்பதற் குத் தனது மூல ஆதாரமாக இலங்கை அரசு பயன் படுத்தியது. இன்னும்கூட புலிகளின் சர்வதேச நிதி சேகரிப்புத் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்ட புள்ளி விவர அறிக்கையையே இலங்கை அரசின் சமாதானச் செயலகம், சர்வதேச ரீதியில் தனது புலி எதிர்ப்புப் பிரசாரப் பணிக்கு அடிப்படை மூல ஆவணமாகப் பயன்படுத்தி வருகிறது.

ஆனால், அதே கண்காணிப்பகம், இலங்கை அரசுத் தரப்பின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத் தியதும் இலங்கை அரசு சீறுகின்றது.

இதைத்தான் 'தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்று அடிக்குமாம்' என்று கூறுகின் றார் களோ...!

---


அன்புடன் அழைக்கிறது
சேமமடு
Sept 8-16
சேமமடு பொத்தகசாலை
சர்வதேச புத்தகக் கண்காட்சி-2007
BMICH-D-181-182
அன்புடன் அழைக்கின்றது
சேமமடு பொத்தகசாலை
Tel: 0777 345666

BE A DOCTOR
Eastern Europe
SPOT Admissions
Doctor of medicine MD
English Medium
Conducted by:
Prof. Igor Generalov
Head of the Department – Microbiology
COLOMBO - PATHE Academy 16th sep @ 10.00 a.m.
KANDY - Queens Hotel 18th sep @ 10.00 a.m.
COLOMBO - PATHE Academy 22th sep @ 02.00 p.m.
Recognized by SRI LANKA MEDICAL COUNCIL
உள்நுழையும் அனுமதி உத்தரவாதம்
அழைப்புக் கடிதம், அனுசரணைக் கடிதங்கள், வங்கிக் கணக்குக் கூற்று, விசா நேர்முகப் பரீட்சை எவையும் அவசியமில்லை
- PATHE ACADEMY அனுமதிக்கு விண்ணப்பித்த நாளிலிருந்து 20 நாட்களுக்குள் கற்கைநெறி அனுமதியும் விசா அனுமதியும் பெற்றுத்தரப்படும்.
- கல்விக்கான கடன்வசதி 5 நாள்களுக்குள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- தங்குமிட வசதி, இணையத்தள வசதி, பொழுதுபோக்கு வசதி, நூலக, ஆய்வுகூட வசதிகள், செயல்முறைக்கல்வி மற்றும் பரீட்சைக் கட்டணம் யாவும் இலவசம்.
- போக்குவரத்து, உணவு கட்டணங்கள், விசேட சலுகை அடிப்படையில்.
- இலங்கையிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் 200 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்றபின் தொழில் பார்க்கிறார்கள்.
- இலங்கைக்கான பிரதிநிதிகள் குழு உங்களுக்கு உதவவென 24 மணிநேரமும் காத்திருக்கின்றனர்.
- வெளிநாட்டவர்களுக்கு ஐரோப்பிய நாட்டில் கற்க மிகவும் பாதுகாப்பான இடம். (ஆசிய சிநேக சுற்றாடல்
- பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜேர்மனி மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உட்பட உலகின் ஏனைய பல நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்டது.
- ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பருவகால விடுமுறை வேளையில் சென்று பகுதிநேர தொழில் பார்க்கும் வாய்ப்பு.
- பட்டம் பெற்ற பின்னர் ஐரோப்பாவில் குடியேற வாய்ப்பு.
- வருடாந்தக் கட்டணம் இரு தவணைகளில் செலுத்தும் வாய்ப்பு.
PATHE ACADEMY மூலம் அனுமதி பெற்ற மாணவர்கள் விபரம், ஏனைய தகவல்களை எமது இணையத்தள முகவரியிலும், அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.
VITEBSK-MEDICAL UNIVERSITY
NOW 0% INTEREST INSTALMENT PLAN BY MAJOR CREDIT CARDS
The programme is executed in par with ACT16 Exams syllabus
Transfer from other universities
Engineering | IT | Other courses also available
இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்! உடன் பயணம்! அனுமதிக்கும் மேலதிக தொடர்புக்கும் தமிழில் தொடர்பு கொள்ள: 773017883
PATHE ACADEMY
Overseas Student Placement Department
37, School Lane(Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271. www.patheacademy.org

STUDY IN MALYASIA, SINGAPORE, AUSTRALIA, LONDON & CANADA
Minimum Qualification G.C.E(O/L)
For Septemper 2007 Intake
100% VISA Guaranteed
For Malaysia & Singapore:
- IELTS, TOEFL & Bank balance are not necessary.
- 100% Transeferable Degree Programme (UK, USA, CANADA & AUSTRALIA)
- Free (Malaysia One Month Accommodation, Food & Transport)
- 5 நாட்களுக்குள் பயணம்.
- சிங்கப்பூரில் நீங்கள் செலவழித்த பணத்தை நான்கு மாதங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
Guaranteed
தங்குமிட வசதி
பகுதி நேர வேலைவாய்ப்பு
Guidance by a Professional with 7 years Experience
Available Courses
- Business Administration
- Computing & IT
- Law
- Hotel Management
- Engineering
- Medicine
- Shipping Courses
All Courses are available in any field.
FOR MORE INFORMATION PLEASE CONTACT
Sahana - 0773 946474
Anu - 0773 946466
We assure the best return
OPEN INSTITUTE OF COLOMBO
OIC City Campus,
No: 40-3\1A, Galle Road, 3rd Floor
(adjoining HSBC Bank )
Wellawatte,
Colombo-06.
Tel: 011 5752747, Fax: 011 5755235.
Web: www.oiccitycampus.com
E-mail: info@oiccitycampus.com

சுடர் ஒளி
செப்.16 - செப்.22. 2007
85, ஜெயந்த மல்லிமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0114734401—6
பாக்ஸ் : 011 4734404
E-mail: editorial@sudaroli.com

## இந்தியாவின் சுயநல அரசியல்

1987 ஆம்ஆண்டு யாழ்ப்பாணத்தில் அல்லல்படும் தமிழ்மக்களுக்கு உதவுவதாகக் கூறி, இலங்கை அரசின் அனுமதியின்றி, படகுகளில் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பிவைப்பதற்கு ராஜீவ்காந்தி நடவடிக்கை எடுத்தார். இலங்கையின் கடற்படை நடுக்கடலில் வைத்து இந்தியப் படகுகளை தடுத்தபோது, இலங்கையின் இறைமைக்கு சவால் விடுக்கும் வகையில் இந்திய விமானங்களை அனுப்பி யாழ்ப்பாணத்தில் உணவுப்பொட்டலங்களைப் போடுவித்தார்.

ராஜீவ்காந்தி, ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்கும், அமைதிப்படை என்ற பெயரில் இந்தியா இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு படைகளை அனுப்புவதற்கும் ராஜீவ் காந்தியின் இந்த உணவுப்பொட்டல ராஜதந்திரமே வழிவகுத்தது. இந்தியப்படைகள் புலிகளுடனான யுத்தத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களை இழந்து அவமானத்துடன் இந்தியா திரும்பியது வேறு கதை. இந்தியாவுக்கு ஒருபாடமாகவும் அது கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து தற்பொழுது இருபது வருடங்கள் கழிந்துவிட்டன.

1987 இல் இருந்ததைவிட மிகவும் மோசமான நிலையில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் அல்ல்ல்களை எதிர்நோக்கி வருகின் றனர்.

யாழ்ப்பாணத்துக்கான பிரதான பாதை யான ஏ-9 மூடப்பட்டு ஒருவருடத்திற்கு மேலாகி விட்டது. கப்பல்மூலம் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதாகவும், யாழ்ப்பாணத்தில் போது மான உணவுப் பொருள்கள் இருப்பதாகவும் அரசு கூறுகிறது.

ஆனால், யாழ்ப்பாண மக்கள் அத்தியாவசிய உணவுப்பொருள் தட்டுப்பாட்டினால் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின் றனர். கொழும்பு விலையை விட பல மடங்கு விலையில் பொருள்கள் விற்கப்படுவதால் அவற்றை வாங்க முடியாத நிலையில் பெரும்பாலான குடும்பங்கள் பட்டினிக்குள் தள்ளப்பட்டுள்ளன. உயிரைத் துச்சமாக மதித்து அகதிகளாக பலர் தமிழ்நாடு செல்வதற்கும் கடத்தல்கள், கொலைகளுக்கு அப்பால் பட்டினி நிலைமையும் ஒரு காரணம் ஆகும்.

அதாவது 1987 இல் இருந்த நிலைமையை விட யாழ்ப்பாணம் தற்போது மோசமான நிலைமையில் இருப்பது நன்கு புலனாகிறது.

இப்படியான நிலைமையிலேயே யாழ்ப்பாணத்துக்கு படகுகள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களையும், மருந்துப்பொருட்களையும் கொண்டு செல்லப் போவதாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறன் 'குண்டு' ஒன்றைத் தூக்கிப் போட்டார். சொன்னபடியே கடந்த 12ஆம் திகதி தனது நூற்றுக் கணக்கான ஆதரவாளர்கள் சகிதம் நாகப்பட்டினம் வந்தார்.

தமிழ்நாடு பொலிஸார் அவரைக் கைது செய்து திருப்பி அனுப்பிவிட்டனர். யாழ்ப்பாணத்துக்கான பொருட்களை எடுத்துச் செல்ல ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த படகுகள் கூட அங்கு காணப்படவில்லை. புதுக்கோட்டையில் இருந்து இராமேஸ்வரம் வரை உள்ள அத்தனை மீனவர் கிராமங்களுக்கும் முதல் நாள் சென்ற பொலிஸார், நெடுமாறனுக்கு படகுகளை விடக்கூடாது என்று எச்சரித்திருந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. நெடுமாறனின் முயற்சி புஸ்வாணமாகியது. அத்துடன் இந்தியாவின் சுயநல அரசியல் மீண்டும் அம்பலமானது.

இந்த சம்பவம் ஒன்றைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இந்தியாவுக்கு அதன் நலனே முதன்மை. இந்தியாவை நம்பி தமிழ் மக்கள் எதனையும் செய்ய முடியாது.

1987 இல் இலங்கையில் தலையிட வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு இருந்தது. இலங்கையின் ஆகாயப் பிராந்தியத்துக்குள் சட்ட விரோதமாக நுழைந்து இந்திய விமானங்கள் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்களைப் போட்டன. ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இன்று இலங்கை அரசின் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு நாடாக இந்தியா மாறி வருகிறது. விடுதலைப் புலிகளின் போராட்டத்தை நசுக்குவதற்கு கங்கணம் கட்டி நிற்கிறது. நெடுமாறனின் படகுப் பயணம் தடைப் பட்டதற்கு இதுதான் காரணம். இலங்கைப் பிரச்சினையில் இந்தியா எப்பொழுது தலையிட்டாலும் தனது அரசியல் ஆதாயம் கருதியே தலையிடுகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

# மு.கா.வின் தெருவிளக்கு அரசியல்

அஸ்லம் எஸ்.மௌலானா



முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனிநபர்களுக்குப் பதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு கம்பனியாக மாறியுள்ளது என்று அதன் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சமீபத்தில் கூறியிருந்தார்.

முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் தொடர்பில் ஓரிரு கோரிக்கைகளையாவது முன்வைத்து - அவற்றை வென்றெடுப்பதற்கான ஓர் ஏற்பாட்டுடன் அல்லாமல், கட்சியைக் காப்பாற்ற வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் காரணமாக அரசிடம் சரணாகதியடையும் சூழ்நிலையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து கொண்டது என்பதைச் சுட்டிக்காட்டியே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

### மாற்றுக் கட்சியினரின் அதிரடி அரசியல்

அரசுடன் சேர்ந்து கொள்வதற்கு தலைமைத்துவம் முன்வராவிட்டால் அவரைப் புறக்கணித்து விட்டுத் தாமே போய் அரசில் இணைந்துகொள்வோம் என்ற மிரட்டலுக்கு அணிபணிந்தே தலைவர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸை அரசில் இணைத்துக் கொள்வதற்கான தீர்மானத்தை மேற்கொண்டிருந்தார்.

அதனால், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், தாமும் அரசில் செல்லாக்காசாக இருந்து வருவது குறித்த கவலையும், வேதனையும் தலைவர் ஹக்கீமை வெகுவாகப் பாதிக்கச் செய்திருக்கிறது. அதன் வெளிப்பாடாகவே கூட்டங்களில் இத்தகைய கருத்துகளை அவர் வெளியிட்டு வருகிறார்.

தமது கட்சியை உடைத்து வெளியேறிச் சென்று அரசில் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்து வருகின்ற போட்டித் தலைவர்களின் அதிரடி நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்க முடியாமல் தலைவர் ஹக்கீம் தடுமாறித் திரிகிறார்.

பெரிய எதிர்பார்ப்புகளுடன் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்ற முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் ஏனைய முஸ்லிம் அமைச்சர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பல்லைக் கடித்துக்கொண்டு காலம் கடத்தி வருகின்றனர்.

### வீரவசனம் பேசும் தலைமைகள்

முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஆறு எம்.பிக்களும் இந்த அரசில் அமைச்சுப் பதவிகளை வகித்து வருகின்றபோதிலும் அடையாளத்துக்குக் கூட ஒரு அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்க முடியாமல் வீரவசனங்களையே பேசி வருகின்றனர்.

அமைச்சர்கள் றிஷாத் பதியுதீன், அதாவுல்லா, அன்வர் இஸ்மாயில், அமீர் அலி, நஜீப் ஏ.மஜீத் போன்றோர் மேற்கொண்டு வருகின்ற அபிவிருத்தி வேலைகள் போன்று முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர்களினால் எதுவும் செய்யமுடியவில்லை என்கின்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் உருவாகிவருகின்றது.

அரசில் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொள்வதற்கு முன்பு, 'எமக்கு அபிவிருத்திப் பணிகள் அவசியமில்லை- அவை வெறும் சலுகைகளே அன்றி உரிமைகளல்ல- நாம் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் தொடர்பிலேயே கவனம் செலுத்தி வருகின்றோம். அபிவிருத்திப் பணிகளுக்காக பேரினவாத வெறிகொண்ட அரசுடன் இணைந்து கொள்ள முடியாது' என்றெல்லாம் பேசி வந்த அதன் தலைவர்கள் அரசுடன் சங்கமித்த பின்னர் நாமும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கப் போகிறோம் - மாற்று முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்களை வீட்டுக்கு அனுப்பப் போகின்றோம் - கிழக்கின் அரசியல் அதிகாரம் இனி முஸ்லிம் காங்கிரஸுக்கே என்றெல்லாம் மார்தட்டிக் கொண்டனர்.

### உப்புச் சப்பற்ற அமைச்சுப் பொறுப்புக்கள்

கிணறு வெட்டப் பூதம் வெடித்த கதையாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இன்றைய நிலை அமைந்திருக்கிறது. அரசில் இணைந்து ஒன்பது மாதங்கள் கடந்து விட்டபோதிலும், சொல்வதற்கு ஒரு வேலைத் திட்டத்தைத் தானும் செய்ய முடியாமல் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர்கள் தட்டுத் தடுமாறி- தலையைப் பிய்த்துக் கொண்டு திரிகின்றனர்.

ஐ.தே.க. எம்.பிக்கள் 18 பேர் அரசில் சேர்ந்து கொள்வதற்கு முன்வந்தபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஜனவரி மாதம் அமைச்சரவையை மாற்றியமைத்தார். அதன் போது அரசில் இணைந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுக்கு அதிகாரம் மற்றும் இலாகா எதுவும் இல்லாத - முஸ்லிம் மக்களுக்கு என எதுவும் சாதிக்க முடியாத- அமைச்சுப் பதவிகளே கிடைக்கப் பெற்றன. அவை தனிப்பட்ட அந்தஸ்து, சலுகைகள், சுகபோகங்களை அனுபவிப்பதற்கே உதவி வருகின்றன. அதேவேளை ஏலவே அமைச்சுப் பதவிகளை வகித்து வந்த முஸ்லிம் காங்கிரஸின் பரம எதிரிகளுக்கு முன்பு இருந்ததை விட பொறுப்பு வாய்ந்த அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன. குறிப்பாக அமைச்சர் றிஷாத் பதியுதீனுக்கு அமைச்சரவை அந்தஸ்து மிக்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்ட தோடு அமைச்சர்கள் அதாவுல்லா, அன்வர் இஸ்மாயில், அமீரலி போன்றோருக்கு மக்களுடன் உறவை வளர்த்து- தமது வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்வதற்கேற்ற அமைச்சுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

### அதாவுல்லா சாதிக்கிறார்

மீள்குடியேற்றம், அனர்த்த நிவாரண சேவைகள், நீர்வழங்கல், வடிகாலமைப்பு, நீர்ப்பாசனம், கூட்டுறவு அபிவிருத்தி, வீடமைப்பு உள்ளிட்ட முக்கிய பொறுப்புக்கள் முஸ்லிம் காங்கிரஸின் எதிரிகளிடம் இருக்கும் போது தபால், கால்நடை, உபபயிர்ச்செய்கை, மக்கள் தோட்டம் என்பவற்றை வைத்துக் கொண்டு மு.கா. அமைச்சர்களினால் எதைத்தான் சாதிக்க முடியும் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

கடந்த 2001 தொடக்கம் 2004 ஆண்டு வரையான காலப் பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் அவரது வலதுகரமாக இருந்து கொண்டு கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சைத் தம்வசம் வைத்திருந்தும் கூட மு.கா.தலைவர் ஹக்கீம் எந்தவொரு அபிவிருத்தி திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

பின்னர் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து இந்த அமைச்சுப் பதவி, தேசிய காங்கிரஸ் தலைவரான அதாவுல்லாவுக்குக் கிடைத்தது. மிகக் குறுகிய காலமே அவரிடம் இந்த அமைச்சுப் பொறுப்பு இருந்தது. அதற்குள் பாரிய அபிவிருத்திப் பணிகளைச் செய்து - மக்கள் மனதை அமைச்சர் அதாவுல்லா வென்றுவிட்டார் என்பதும், அதுவே அவரது அரசியல் ஸ்திரத்தை வலுப்படுத்திக் கொள்வதற்குக் கால்கோளாக அமைந்திருக்கிறது என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்ட வழிமுறைகளைப் புறந்தள்ளிவிட்டு - முஸ்லிம்களின் அபிலாஷைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு வெறும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை வரவேற்பதும் - அவற்றை முன்னெடுக்கும் அமைச்சர்களைப் புகழ்பாடுவதும் இக்கட்டுரையின் நோக்கமல்ல.

### மு.கா.கைசேதம்

இன்று அந்த வழியில் சென்றிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் அதிலும் தோற்றுப் போய் கைசேதப்பட்டு நிற்கிறதே என்ற கவலையை வெளிப்படுத்துவதற்காகவே சில விடயங்களைச் சுட்டிக்காட்டி வருகின்றோம்.

ஏனைய முஸ்லிம் அமைச்சர்கள் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை அங்கீகரிக்கவும் முடியாமல் - தடுக்கவும் முடியாமல் - செய்யவும் தெரியாமல் கீழ்த்தரமான அரசியல் வழிமுறையொன்றைக் கைக்கொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முனைந்திருப்பது போல் தெரிகிறது. மாற்று அமைச்சர்கள் மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளைத் தடுத்து நிறுத்துவதில் கடும் பிரயத்தனம் எடுத்து வருகின்ற முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் சிலர் தங்களுக்குள் மோதிக் கொள்ளும் அவலமும் காணப்படுகின்றது.

கல்முனைத் தொகுதியில் இடம்பெற்று வருகின்ற சில அரசியல் நிகழ்வுகள் இதற்கு நல்ல உதாரணமாகும். அம்பாறை மாவட்டத்தில் மாற்று முஸ்லிம் அமைச்சர்கள் செய்வது போன்ற அபிவிருத்திப் பணிகளைச் செய்து விழாக்களை அரங்கேற்ற முடியாத நிலையிலுள்ள முஸ்லிம் காங்கிரஸ், வீதிகளுக்கு மின் குமிழ் பொருத்துவதை பெரியதோர் விழாவாக நடத்தி முடித்திருக்கிறது.

### மு.கா. உட்பூசல்

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது நகரில் பிரதான வீதியின் நடுவே சுமார் நூறு யார் தூரத்துக்குட்பட்ட மிகக் குறுகிய ஒரு பகுதிக்கு வீதி மின் விளக்கு பொருத்தும் வேலைத் திட்ட அங்குரார்ப்பண விழா என்ற மகுடத்தில் அது நடத்தப்பட்டது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.கா.தலைவர் ஹக்கீமின் பங்குபற்றுதலுடன் இடம்பெறவிருந்த அந்த விழா மு.காவின் ஒரு கோஷ்டியினரின் எதிர்ப்புக் காரணமாக இறுதி நேரத்தில் கைவிடப்பட்டு மீண்டும் கடந்த செவ்வாயன்று நடத்தப்பட்டது.

எனினும் கட்சித் தலைவர் ஹக்கீம் அதில் கலந்து கொள்ளவில்லை. பிரதி அமைச்சர்கள் ஹஸனலி, நிஜாமுதீன், பைஸல் காஸிம் ஆகியோர் பங்கு பற்றினர்.

கட்சியின் உள்ளூர் அரசியல் பிரமுகர்களுக்கிடையிலான உட்பூசல் காரணமாகவே தலைவர் விழாவுக்கு வருகை தர வில்லை எனக் கூறப்படுகின்றது. எவ்வாறா யினும் கூச்சல், குழப்பங்களுக்கு மத்தியில் ஒருவாறு அந்த விழா நடந்து முடிந்து விட்டது.

அங்கு இதன்போது ஆதவாளர்களி டையே ஏற்பட்ட கைகலப்பு காரணமாக சிலர் காயமடைந்துள்ளனர். அடிதடியில் ஈடுபட்டோர் மீது பொலிஸாரும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் இன்றைய நிலைஇதுதான். அப்படியென்றால், அமைச்சர் அதாவுல்லா போன்றோரை முஸ்லிம் காங்கிரஸ் வீழ்த்துவதென்பது கனவாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.

# குடாநாட்டில் குடும்பப் பதிவு! கொள்ளை இலாபம் அடிக்கும் சூரர்கள் பாடு கொண்டாட்டம்!

**யாழ்.** குடாநாட்டு மக்களுக்கு கடந்த சில வாரங்களாகப் புதியதொரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

தற்போது இராணுவத்தினரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள குடும்பப் பதிவு மற்றும் விசேட அடையாள அட்டை வழங்குதல் ஆகிய செயற்பாடுகளி னாலேயே இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே நொந்து நூலாகிப் போயுள்ள குடாநாட்டு மக்களின் வாழ்க்கை நிலையில் மேலும் சுமையை அதிகரிப்பதாக அமைந்துள்ள இந்தச் செயற்பாடுகள் காரணமாக மக்கள் ஒரு விரக்தியான நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள்.

இராணுவத்தினர் ஒன்று கூற இடையில் நிற்பவர்கள் இன்னொன்று கூறி மக்களை நாயாய் அலைய வைக்கும் நிலைமுடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்ப்பார்ப்பு.

மக்களுடைய அவலங்களை அனைத்துத் தரப்பினரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும், அவற்றுக்கான மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண் டும் என்ற நல்நோக்கத்திற்காகவுமே இவற்றை நாம் வெளிக்கொண்டு வருகின்றோம்.


தற்போது யாழ். குடாநாட்டு மக்களில் பொருளாதார நிலையை படைத்தரப்பினர் முதல் சிவில் அலுவலகர்கள் வரை உணர்ந்து கொள்ளவில்லை என்பதை இங்கு சுட்டிக் காட்டியாக வேண்டும்.

யாழ். குடாநாட்டு மக்களில் சுமார் ஐம்பது வீதத்திற்கும் அதிகமானோர் அன்றாடம் காய்ச்சிகளாகவே காணப்படுகின்றார்கள்.

இன்று குடாநாட்டில் சில இடங்களில் மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை படைத்தரப்பினர் வழங்கி வருகின்றார்கள்.

மறுபுறத்தே மருந்துவமுகாம்களையும் நடத்தி வருகின்றனர்.

சிவில் அலுவலர்கள், கிராம மட்டத்தில் மக்களுக்கு வறுமை நிவாரணம் வழங்க வேண்டும், உதவிகள் வழங்கவேண்டும் என்றெல்லாம் அறிக்கைகள் எழுதிக் கொண்டு இருக்கின்றார்கள். மேலதிகாரிகளுக்கு அறிக்கைகளாகவும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பட்டியல்களாகவும் அனுப்பிக்கொண்டு



இருகின்றார்கள்.

இவ்வாறு படைத் தரப்பினரும் சிவில் அலுவலர்களும் செயற்படுகின்றார்கள். ஆனா லும், கூட மக்களின் பொருளாதார ரீதியான செயற்பாடு களில் அவர்கள் கூடிய கவனம் எடுக்காமை வருத்தத்திற்குரியது.

எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பதுபோல, சில கிராமசேவையாளர் களின் செயற்பாடுகள் காணப்படுகின்றன எனப் பலரும் கூறு கின்றார்கள். மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கூறும் அவர்கள் தமது பணிகளில் ஏன் முன்னுக்குப்பின் முரண்பாடாகச் செயற்படுகிறார்கள் என்பது தான் புரியவில்லை.

படை உயர் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையே தொடர்புகள் எவையும் இல்லை. இடையே அரச சிவில் அலுவலர்களே தொடர்பாடல் பணியை மேற்கொண்டு வருகின்றார்கள்.

குடும்பப் புகைப்படங்களை எடுத்து, குடும்ப விவரம் அடங்கிய விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, தருமாறு கிராம அலுவலர்கள் ஊடாகப் படைத் தரப்பினர் மக்களுக்கு அறிவு றுத்தல்களை வழங்கினார்கள்.

இந்த நடவடிக்கையின்போது சில கிராம அலுவலகர்கள் மற்றும் புகைப்படப்பிடிப் பாளர் கள் மக்களின் பணத்தைச் சூறையாடுவதில் நடந்துகொண்ட விதம் பலரையும் விசனத்துக்குள்ளாக்கி இருக்கின்றது. தமக்கு வேண்டியவர்களை கிராம அலுவலர்கள் புகைப்படப்பிடிப் பாளர்களாக நியமித்ததும், படிவங்களை கணினியில் வடிவமைப்பதற்கு சில பதிப்பகங்கள் நியமிக்கப்பட்டதும், இந்த ஏற்பாடுகளின் மூலம் பெரும் தொகைப் பணம் மக்களிடம் இருந்து அறவிடப்பட்டதும் சுட்டிக் காட்டப் படவேண்டியதே.

இந்த நடவடிக்கைகளின் போது, பொதுமக்களின் வசதி வாய்ப்புகள் கருத்தில் எடுக்கப் படாததுடன், அவர்களது பொருளாதாரநிலையும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இந்தக் குடும்பப் பதிவு, விசேட அடையாள அட்டை வழங்கும் செயற்பாடுகள் சில புகைப்படப்பிடிப் பாளர்களுக்கு கொள்ளை இலாபம் சம்பாதிக்கும் ஒரு வர்த்தகமாக மாறி

## நொந்து நூலாகிப் போயுள்ள மக்களை மேலும் சுரண்டுவது நியாயமானதா?

யது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. குடும்பப் புகைப்படத்திற்கான கட்டணம் 80 ரூபா முதல் 225 ரூபா வரை அறவிடப்பட்ட தன் மூலம், இந்தக் கொள்ளை இலாப முயற்சியை கண்டு

**வில்லவன்**

பிடிக்க முடிந்தது.

நியமிக்கப்பட்ட புகைப்படப் பிடிப்பாளர்களைத் தவிர வேறு படப்பிடிப்பாளர்களிடம் புகைப்படங்களை பிடித்து எடுத்துச் சென்ற குடும்பங்களை கிராம அலுவலர்கள் திருப்பி அனுப்பிய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இதன் காரணமாக இரண்டாம் தடவையும் புகைப்படம் பிடிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டமையை யார் அறிவார்? குறித்த தினத்தில் புகைப்படங்களை கிராம அலுவலர்கள் குறிப்பிடுபவரிடம் சென்று எடுப்பதற்கு பண வசதியும் அல்லவா அந்த நேரத்தில் மக்களிடம் இருக்கவேண்டும்? இது அந்தக் கிராம அலுவலர்களுக்குப் புரியவில்லையா?

புகைப்படங்களுக்கு இவ்வாறான பெரும் தொகைக் கட்டணம் அறவிடப்பட்டமைக்கான காரணம் என்ன என்பது இப்போது பொது மக்களுக்குத் தெரியும். இதில் சிலர் தமது இலாப நோக்கத்தையும் பண வசூலிப்பையும் கருத்தில் கொண்டு செயற்பட்டுள்ளார்கள் என்பது தான் அந்த உண்மை.

ஆயினும் எதையும் வெளிப் படையாகப் பேசுவதற்கு திராணி யற்றவர்களாகக் குடாநாட்டு மக்கள் இப்போது இருக்கிறார்கள்.

குடும்பப் பதிவுப் பத்திரத்தை நிரப்பும் விடயத்திலும் இந்த வியாபார நோக்கம் கையாளப் பட்டுள்ளது. படிவங்கள் அனைத்தும் கைகளால் நிரப்பப்படக் கூடாது எனவும் அவை கணினியில் பொறிக்கப்பட்ட படிவத்தில் அச்சிடப்படவேண்டும் எனவும் தெரிவித்து அதற்கு 65 ரூபா முதல் 125 ரூபா வரை கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. கிராம அலுவலர்களால் நியமிக்கப்பட்ட கணினி பதிப்பாளர்களிடமே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதும் கட்டாயம்.

மக்களின் நலனை மறந்து தமது வசதிகளை மட்டும் கருத்தில கொண்டு அவர்கள் செயற்பட்ட விதம் பலரையும் விசனத்துக்குள்ளாக்கி இருக்கின்றது. பொது மக்களை சற்று ஆறுதலாக, தமக்கு வசதியாக குறிப்பிட்ட ஒரு காலத்தில் இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்ள படைத் தரப்பினரும் சிவில் அலுவலர்களும் கால அவகாசம் கொடுப்பதே மனிதநேயம்மிக்க செயலாகும். புகைப்படங்கள், படிவங் களை எந்த வகையான நிபந்தனைகளும் இன்றி சுதந்திரமாக மேற்கொள்ள அனுமதித்திருந்தால், பொது மக்கள் குறைந்த கட்டணத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்திருக்க முடியும்.

சில கிராம அலுவலர்களின் பணிமனைகளில் பொது மக்களுக்கான அறிவுறுத்தல் கள் காணப்பட்டன. 'யாரும் வெளியில் புகைப் படங்கள் எடுக்கவோ, படிவங்கள் நிரப் பவோ கூடாது. அப்படி நிரப்பி இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பிடப்படும் பிரதிநிதியிடமே இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவேண்டும்' என்று அறிவுறுத்தும் வாசகங்கள் அதில் காணப்பட்டன.

தற்போது விசேட அடையாள அட்டை எடுக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. இதிலும் கூட மக்களின் நலன் கருத்தில் கொள்ளப்படவில்லை. இந்தப் புகைப்படங்களுக்கான கட்டணமாக 50 ரூபா முதல் 125 ரூபாவரை அறவிடப்படுகின்றது.

இதே போன்று விசேட அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் கூட 40 ரூபா முதல் 75 ரூபா வரை கணினியில் பொறிப்பதற்கென அறவிடப்பட்டுள்ளது.

சரியான விவரங்கள், தகவல்களை பெறாது இலாப நட்ட கணக்குப் பார்த்துக்கொண்டு கடமையாற்றினால், இறுதியில் கிடைப்பது கெட்ட பெயரும், மக்களின் பிரச்சினை களைத் தீர்க்கமுடியாது திண்டாடும் நிலையும் தான்.

மக்களுடைய உண்மையான நிலையைக் கருத்தில்கொண்டு அவர்களின் பொருளாதார வசதிகளையும் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டியது அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

இந்த வகையில் சில இடங்களில் மக்கள் தமது விருப்பத்தின் பேரில்

(27ஆம் பக்கம் பார்க்க)

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

**இளம் வயதில் வாலிபத் தூண்டுதலால் புரியாமல் செய்யும் தவறுகளால் ஆளுமைக் குறைவு, சக்தி குறைவு, ஞாபக மறதி ஏற்படுதல் மற்றும் பயம், நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மை போன்ற நோய்களுக்கும்**

- ஆரம்ப மன நோய்களை உடனே குணமாக்கலாம்.
- ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப்பேறு இன்மைக்கும் பெண்களுக்கும், வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் **Dr.P.ஆறுமுகம்**

**SEXUAL DISORDERS** (ஆண்மைச் சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. இதற்காக வெட்கப்படவோ வேதனைப்படவோ தேவையில்லை. (பிறவியிலேயே ஆண்மையற்றவர்கள் தவிர) இதற்குப் பல காரணங்கள் உண்டு.

- அளவுக்கதிகமாக விந்தை வீணாக்கியது.
- கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது.
- உடல்பலவீனம், நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சிகுறைந்து உறுப்பு சிறுத்து விடுவது.
- உறவின் போது விந்து விரைந்து வெளியேறுதல்
- முதல் தடவையாக உறவுகொள்ளும் போது ஏற்படும் பயத்தினால் உறவில் திருப்தியின்மை.

இக்குறைகளாலும், தோல்வி அவமானத்தாலும் இனி நமக்கு வாழ்வே இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை வளர்ந்து முற்றாக ஆண்மை குன்றலாம். பயப்படாதீர்கள் எமது மனோதத்துவ வைத்திய முறையிலும், திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**டாக்டர் ஆறுமுகம்** அவர்களை சந்திக்கும் இடங்கள்

**வவுனியாவில்...**
2007 செப்டெம்பர் 01முதல் 04 வரை
**Vanni Inn,**
2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா,
Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**கொழும்பில்...**
2007 செப்டெம்பர் 20 முதல் 28 வரை
**New Ahmed Tourist Inn,**
BangBang Building
2-2/2, Bankshall Street,
Colombo - 11.
Tel No. 5368426, 5368427
**Hot Line: 0777 569205**

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்திய முறை செய்யப்படும்**

வெளிநாட்டில் உள்ளவர்கள் தபால் மூலம் (தயவு செய்து முத்திரை ஒட்டிய கடித உறையுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய முறையில் ஓடியோ கசட் பெற்று அத்துடன் திறமான மூலிகை மருந்தும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

கடிதத் தொடர்புகளுக்கும் ஏனைய நாட்களில் சந்திப்பதற்கும்

**Dr. P. Arumugam,**
51/5, Koolavady Road
Batticaloa, Srilanka.
Resident Tel No. 065 2224019,
Hot Line: 0777 569205.

**தயவு செய்து ரூபா.250/= செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.**

**ஐரோப்பிய நாடுகளுக்கான விசா**


Visitors/ Sponsors/ Business/ Student/ Work Permits/ Permanent Residence/ Holiday Makers மற்றும்
உங்களுக்குக் கிடைக்கும் Sponsor களை
எம்பசிக்கு சமர்ப்பிப்பதற்கு முன்பு எமது பல வருட அனுபவமுள்ள சட்டத்தரணிகளால் சரிவர அமைத்துக் கொடுக்கப்படும்.
நிராகரிக்கப்பட்ட விசாக்களை உடனே மீளப் பெறும் வகையில் விண்ணப்பப்படிவங்கள் நிரப்பிக் கொடுக்கப்படும்.

**IELTS** ஆங்கில கணினி வகுப்புக்கள் நடைபெறுகின்றன

**STUDY ABROAD**

U.K/ USA/ CANADA/ AUSTRALIA
JAPAN/ SWISS/ ITALY/ GREECE/ NETHERLAND/ NEW ZEALAND/ CYPRUS
DEGREE- HND-DIPLOMA CERTIFICATE COURSES
**HOTEL MANAGEMENT (HND) IN UK**
6 மாதம் இலங்கையில் 6 மாதம் UKயில் பயின்றபின் தொடர்ந்து UKயில் பணியாற்றலாம்.
இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்

**ELIZABETH**
INSTITUTE OF HIGHER STUDIES
No. 89 A1/1, Hospital Road, Kalubowila, Dehiwela.
Tel: 0114867744, 0725282195
E-mail: elizabethh@sltnet.lk



# உயரதிகாரிகளின் துள்ளாட்டம் ரோகித்தவுக்கு தள்ளாட்டம்

ஒரு நாட்டின் கொள்கைகள் உத்தியோக பூர்வ அறிவித்தல்கள் மற்றும் பிரகடனங்கள் என்பன உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் படும்போது அவை ஜனாதிபதி செயலகம் அல்லது அரசாங்க தகவல் திணைக்களம் இல்லையேல் பிரதமரின் அலுவலகம் என்பனவற்றின் மூலம்தான் வெளிவர வேண்டும்.

அதேபோன்று அயல்நாடுகள் சம்பந்தப்பட்ட இராஜதந்திர தொடர்புகள் மற்றும் இணக்கப்பாடுகள் தொடர்பான விடயங்களை ஜனாதிபதி செயலகத்தின் அங்கீகாரத்துடன் வெளிவிவகார அமைச்சு வெளியிடும்.

இதுதான் நியதியும் பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கடப்பாடும் ஆகும்.

இவ்வாறு வெளிவரும் அறிக்கைகளும், பிரகடனங்களும் ஓர் நாட்டினதும் அங்கு பதவியில் இருக்கும் அரசுகளினதும் குரலாக ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆனால், அண்மைக்காலங்களில் இவ்வாறு வெளிவரும் அறிக்கைகளும் கருத்துகளும் நம்பகத்தன்மையற்றவை யாகவே காணப்படுகின்றன.

அமைச்சர்கள் ஒன்றைக் கூறுகின்றனர். அதேவேளை, அதிகாரிகள் அதற்கு நேர்மாறான வேறு எதையோ கூறுகின்றனர். யார் அறிக்கை விடுவது, எவர் கருத்து தெரிவிப்பது என்பதில் விவஸ்தையே இல்லாமல்போய்விட்டது.

இவ்வாறு அரசியலில் முக்கிய இடத்தைப் பிடித்து மிகவும் விமர்சனத்திற்கு உள்ளானது இலங்கை - இந்திய கூட்டுப் பாதுகாப்புக் குழு அமைப்பது தொடர்பான விவகாரம்.

இலங்கையும் இந்தியாவும் பாதகாப்புத் தொடர்பாக இணைந்து ஒரு குழுவை அமைத்துள்ளன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுக்க தலைமையிலான உயர்மட்டக்குழு இந்தியா சென்று அங்கு நடத்திய பேச்சுகளின் பயனாகவே இலங்கை இந்திய அதிகாரிகளைக் கொண்ட உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று கூறியதோடு நின்றுவிடாமல் குழுவில் இடம்பெறுபவர்களின் பெயரையும் வெளியிட்டுவிட்டது.

கெட்டிக்காரன் புழுகு எட்டுநாளில் தெரியும் என்பது போல் ஜனாதிபதி செயலகம் விட்ட புருடா 24மணிநேரத்துக்குள் அம்பலமாகிவிட்டது.

இவ்வளவு காலம் ஊரையும் ஊர்மக்களையும் மட்டும் ஏமாற்றிக்கொண்டிருந்த அரசாங்கம் இப்பொழுது உலகையும் ஏமாற்ற முனைந்து மூக்குடைபட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் எந்தவிதமான உண்மையும் இல்லை.

அப்படியான ஒரு பேச்சு நடக்கவும் இல்லை. கூட்டுக்குழு எதுவும் அமைக்கப்படவும் இல்லை. இலங்கை ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கை எழுத்துக்கு எழுத்து பொய்யானது என்று இடித்துக் காட்டியதுடன், இப்படி இல்லாத ஒருவிடயத்தை இருப்பதுபோல் திரித்துக் காட்டியதையும் கண்டித்துள்ளது.

இதுஎப்படி இருக்கின்றது என்றால், கலியாணம் பேசவும் இல்லை. கலியாணம் நடக்கவும் இல்லை. ஆனால், ஜனாதிபதி செயலகம் பிள்ளையும் பிறந்து அதற்குப் பெயரும் வைக்கப்பட்டுவிட்டதாகப் பம்மாத்துக் காட்டிவிட்டது.

இப்படி அப்பட்டமான ஒரு பொய்க் கதையை அறிவித்துவிட்டு, வம்பில் மாட்டிக்கொண்டது மட்டுமல்லாமல் மூக்குடைபட்டும் விட்டது.

தாங்கள் செய்தது தவறு என இந்தியாவிடம் ஒப்புக்கொண்டதோடு, மன்னிப்பும் கேட்டுவிட்டது அரசு.

ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கை தனிப்பட்ட முறையில் அந்த அறிக்கையை விடுத்த அதிகாரியை மட்டுமல்ல நாட்டின் ஜனாதிபதிக்கும் அரசுக்குமே ஒரு மாறாத தலைகுனிவை ஏற்படுத்திவிட்டது.

ஜனாதிபதி செலயகத்திலும் பாதுகாப்பு அமைச்சிலும் உள்ள அதிகாரிகள் வழமையாக மிரட்டல் விடுவது வழக்கம். அதாவது பயங்கரவாதத்தை ஒழிக்க இந்த நாடு ஆயுதம் தருகின்றது. இந்த நாடு ஆலோசனை வழங்குகின்றது. இவர்கள் பாதுகாப்பு வழங்க முன்வந்துள்ளனர். கூட்டு ரோந்து புரிகின்றனர் என்றெல்லாம் கூறி தென்பகுதி பெரும்பான்மை இன மக்களை சந்தோசப்படுத்தி வருவது வழக்கம்.

இம்முறை வழமைக்கு மாறாக புலிகளுக்குப் பூச்சாண்டி காட்டுவதற்காக கூட்டு நடவடிக்கை குழு என்று ஒரு கதையை இலங்கை சோடித்துவிடப்போய் தனது கையாலாகாத தனத்தை தானே காட்டிக்கொடுத்துவிட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கையே நம்பகத்தன்மையை இழந்துவிட்டது என்றால் ஏனைய அமைச்சர்களினதும் அரசினதும் வார்த்தைகளை எப்படி நம்புவது என்று நாட்டுமக்கள் கேள்வி எழுப்ப ஆரம்பித்துவிட்டனர்.

ஜனாதிபதி செயலகம்தான் இப்படி என்றால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ன செய்கின்றார் என்று பார்ப்போம்.

அடிப்படை மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் முண்டியடித்துக்கொண்டு முதலிடத்திற்கு வந்துகொண்டிருக்கின்றது இலங்கை.

இப்படியான நிலையில் கிழக்குமாகாணத்தைப் புலிகளிடமிருந்து இராணுவ நடவடிக்கைகளின் மூலம் மீட்டதுபோல் வடக்கிலும் பாரிய யுத்தநடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு வடக்கையும் கைப்பற்றுவோம் என்று சூளுரைக்கின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு மட்டும்தான் அறிக்கைவிட முடியுமா, என்னால் முடியாதா? என்று சவால் விடுவதுபோல், சமாதான செயலகத்தின் தலைவர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கவும் ஒன்றைக் கூறிவைத்தார்.

அதாவது, ஏன் இந்த 'அக்சன் பார்ம்' தொண்டு நிறுவனத்தினர் தமது தொண்டர்களை மூதூரில் வைத்திருந்தனர்? தொண்டு நிறுவன ஊழியர்கள் 17பேர் இறப்புக்கு அந்த நிறுவனத்தின் அக்கறையீனமே காரணம் என்பதுபோல் குற்றம்சாட்டிவிட்டார்.

இந்த இரண்டு பெரிய மனிதர்களும் இங்கேயிருந்து கொண்டு வாய்கிழியக் கத்திவிட்டனர். ஆனால், வம்பில் மாட்டிக்கொண்டவர் வெளிவிவகார அமைச்சர் ரோகித்த போகொல்லாகம.

இந்த மனிதர் பிச்சா பாத்திரத்துடன் ஊர் ஊராகச் சென்று கையேந்திக்கொண்டு திரிகின்றார்.

தனக்கு அமைச்சுப் பதவியை வழங்கிய ஜனாதிபதிக்கும் அவரது சகோதரர்களுக்கும் வேண்டிய அதிகாரிகளுக்கும் வக்காலத்து

**இரா.புத்திரசிகாமணி**

வாங்கவேண்டிய கட்டாயம் இந்த மனிதருக்கு ஏற்பட்டுள்ளது.

மலேசியாவின் சுதந்திர தின வைபவத்தில் கலந்தகொள்ளச் சென்ற ரோகித்த போகொல்லாகம அங்கே ஜனாதிபதியின் சகோதரர் கோட்டபாயவைப் பாதுகாக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

''வடக்குப் பிரதேசத்தில் அதாவது புலிகள் பலம்கொண்டுள்ள யாழ்.குடாநாட்டின் மீது இராணுவத் தாக்குதல் நடத்தும் நோக்கம் அரசுக்கு இல்லை அரசியல் தீர்வு ஒன்றைத் தான் விரும்புகின்றோம். புலிகள் பேச்சுமேசைக்கு வரவேண்டும்'' இதுதான் அரசின் நிலைப்பாடு என்று வெளிவிவகார அமைச்சர் பேட்டி அளிக்கின்றார்.

இவர் பேட்டியளித்து வாய் மூடுவதற்குள் கோட்டபாயவின் உத்தரவால் மன்னாரில் குண்டு மழைபொழிந்தது.

அங்கே ஆயிரம் ஆயிரம் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். சிலர் உயிரிழந்தனர். பலர் முடமாகினர். இதுதான் அரசியல் தீர்வு என்று காட்டிவிட்டது.

வெளிவிவகார அமைச்சரின் கூற்று சில நிமிடங்களிலேயே காற்றோடு காற்றாகப்போய்விட்டது.

வெளிவிவகார அமைச்சர் எந்தநேரத்தில் இம்முறை வெளிநாட்டுப் பய ணத்தை ஆரம் பித்தாரோ தெரியவில்லை. சென்றவிடமெல்லாம் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டியதாகின்றது.

பிரேஞ்சு நாட்டு தொண்டர் அமைப்பான அக்சன் பார்ம் தொண்டு நிறுவனத் தலைவர் டெனிஸ்மெட்ஸ்கர், நிறைவேற்றுப் பணிப்பாளர் டானியல் ஆகியோரிடம் வகை யாக மாட்டிக்கொண் டார்.

இலங்கை சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க அக்சன் பார்ம் நிறுவனம் தொடர்பாகக் கூறிய விடயங்களை வைத்து வெளிவிவகார அமைச்சரை கிழி கிழியென கிழித்து நார் உரித்துவிட்ட னர்.

ஐயய்யோ அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. 17 தொண்டர்களின் கொலை தொடர்பாக இலங்கை அரசு விசேட கவனத்துடன் செயல்படு கின்றது. குற்றவாளிகள் கண்டு பிடிக் கப்படுவர். அதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளோம் என்றெல்லாம் பூசி மெழுகிவிட்டு தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று மெதுவாக தன்னைக் கழற்றிக்கொண்டார் ரோகித்த போகொல்லாகம.

இலங்கை யின் பொருளா தாரம் ஆட்டம் கண்டுவிட்டது. உலகநாடுகளும் கைகளைச் சுருக்கிக்கொண்டன. ஐக்கியநாடுகள் சபை யும் சர்வதேச மன்னிப்புச் சபையும் கண்களில் விரலைவிட்டு ஆட்டுகின்றன.

இப்படி ஓர் இக்கட்டான சூழ்நிலையில் தான் நாடாளுமன்றத்தில் அரசின் பிரதான கொரடாவான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஐ.நா.வை சீண்டிவிட்டார்.

அதாவது ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரிகளுள் ஒருவரான ஜோன் ஹோம்ஸ் ஒரு பயங்கரவாதி. அவர் புலிகளிடம் கப்பம் வாங்கிக்கொண்டு அரசுக்குப் பாதிப்பான வகையில் பேசிவிட் டார் என ஜெயராஜ் துள்ளிக்குதித்தார்.

ஜெயராஜ் இங்குபோட்ட துள்ளாட்டம் வெளிவிவகார அமைச்சர் ரோகித்த போகொல்லாகமவுக்கு உலக நாடுகளில் தள்ளாட்டமாகிவிட்டது.


இங்கே நம்மவர்கள் மக்குத்தனமாக வெளியிடும் அறிக்கைகளுக்கும் கருத்து களுக்கும் உலக நாடுகளுக்கு விளக்கம் அளிப்பதும் அவர்களுக்கு சமாதானம் சொல்வதும் சமாளிப்பதும்தான் இன்று வெளிவிவகார அமைச்சரின் முக்கிய கடமையாகிவிட்டது.

அதி உயர் அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி செயலகமும் அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் வெளியிடும் அறிக்கை களும் கருத்துகளும் நம்பகத் தன்மை அற்றவை என ஊர்ஜிதப்படுத்தப்பட்டு வரும் வேளையில் 'இந்த அரசாங்கத்தை நம்பவேண்டாம் இவர்களை நம்பி கடன் கொடுக்கவேண்டாம். அப்படியே கடன் கொடுத்தால் நாம் ஆட்சிக்கு வந்தால் அதனைத் திருப்பி செலுத்தமாட்டோம்' என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அபாய அறிவித்தலை விட்டுள்ளது.

உலகநாடுகள் மத்தியில் இலங்கையின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகியுள்ள வேளையில் தனியார் வங்கியான எச்.எஸ்.பீ.சி. வங்கி இலங்கை அரசுக்கு கடன் வழங்க எடுத்த தீர்மானத்தை மீள்பரி சீலனை செய்துவருவதாக நம்பகத்தன்மையான தகவல்கள் கிடைத்துள்ளன.

அப்படியானால், பொய்யும் புரட்டும் சிரட்டையும் கையும்தான் என்பது இலங்கையைப் பார்த்துத் தான் கூறப்பட்டதோ?

# மிக் விமான விவகாரங்களும் பார்க்க மறந்த பக்கங்களும்



'மிக்' விமான கொள்வனவு தொடர்பில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்களைப் பற்றி எழுதப்போய் இக்பால் அத்தாஸ் அவர்கள் இன்று பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளமை யாவரும் அறிந்த விடயமாகும். இலங்கையிலுள்ள பிரபல்யமான இராணுவ ஆய்வு எழுத்தாளரும், மூத்த பத்திரிகையாளருமான அவருக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் நிலைமைகளை யிட்டு இலங்கையின் ஊடகத்துறையினரும் பல்வேறு ஊடக இயக்கங்களும் தமது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன.

'மிக்' விமானங்கள் கிளப்பியுள்ள இந்தச் சலசலப்புகளின் மத்தியில் தமிழ்மக்களின் கண்ணோட்டத்தில் வேறு சில வகையான கேள்விகளை இந்த 'மிக்' விமானங்கள் தொடர்பில் முன்வைப்பதற்கு இதுவே ஏற்ற தருணமாகும்.

இந்தக் குண்டுவீச்சு விமானங்களை யாருக்கு எதிராக இலங்கை அரசு பாவிக்கத் திட்டமிட்டுள்ளது? இதைப் பாவிப்பதற்கான களம் இலங்கையில் எங்கேயுள்ளது? அயலில் உள்ள இந்தியாவோ, பாகிஸ்தானோ அல்லது வேறு எந்தவொரு அந்நிய தேசமோ இலங்கைக்கு எதிராக படைநகர்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக சிறிதளவேனும் சந்தேகங்கள் தென்படாத நிலையில் ஸ்ரீலங்கா அவசர அவசரமாக மிக்குகளை அதுவும் பாவனைக்காலம் தாண்டிய பழைய மிக்குகளை கொள்வனவு செய்யவேண்டிய அவசியம் என்ன?

தமிழ்த்தேசிய எழுச்சியை அதன் ஆணிவேர் வரை சென்று அழித்தொழிக்கும் இன்றைய முயற்சியின் ஒரு கருவியே இந்த மிக்குகளாகும். இந்தக் குண்டுவீச்சு அரக்கர்கள் வடக்குக் கிழக்கு மக்கள் மீது நிகழ்த்திவரும் அநியாயங்களை இதுவரை எந்த ஆய்வாளரும் உள்ளதை உள்ளபடி எழுதியது கிடையாது. மிக் விமானங்கள் தொடர்பிலான ஊழல் பற்றித்தான் எதிர்க்கட்சியினரின் கவனம் உள்ளது. எந்த எந்த வழிகளினூடாக எங்கெல்லாம் பங்கு பிரிக்கப்பட்டது என்பது பற்றித்தான் இராணுவப் பத்தி எழுத்தாளர்களின் ஆராய்ச்சிகள் உள்ளன.

ஆனால், மனச்சாட்சியுள்ள தேசத்தில் இவையாவற்றையும் விட அவசரமாகவும் அவசியமாகவும் அதிமுக்கிய கவனம் கொடுத்தும் ஆராயப்படவேண்டிய விடயம் இந்த இயந்திரங்களால் அவலங்களுக்கு உள்ளாக்கப்படும் சாதாரண குடிமக்களின் துன்பங்களாகும். மக்கள் செத்துமடியும் போது பணபோக்குவரத்துகளைப் பற்றி கணக்குப்பார்த்து கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இன்று அடிக்கடி வன்னியின் பல்வேறு நிலைகள் மீது குண்டுவீச்சு நடத்தப்படுகிறது. அதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட எண்ணிக்கையான பயங்கரவாதிகளோ அல்லது அவர்களின் முக்கிய நிலைகளோ முற்றிலும் அழித்தொழிக்கப்பட்டதாக அறிக்கைகள் வெளியிடப்படு வது ஒரு வழமையாகவே ஆகிவிட்டது. இந்தச் செய்திகளின் உண்மைத்தன்மை பற்றி இந்த நாட்டிலுள்ள கல்விகற்றவர்கள், அறிஞர்களாவது கேள்வி எழுப்புகிறார்களா?

மிக் விமானங்கள் மிகக் கூடிய வேகத்தில் செல்லக்கூடியவை. அதிசக்தி வாய்ந்த தாக்குதல் திறமைகளைக் கொண்டவை. உயர் தொழில்நுட்ப ஏற்பாடுகள் பலவற்றையும் தமது கட்டமைப்புகளில் உள்ளடக்கியவை. ஆனால், இந்தத் திறமைகளை காட்டுவதற்கு பெரியதொரு போர்க்களம் தேவைப்படும். பின்லேடனைத் தேடி ஆப்கானிஸ்தானின் மலை முகடெங்கும் அமெரிக்கா குண்டுமாரி பொழியவும் மத்திய கிழக்கின் சண்டைக் களங்களில் எதிரிப்படைகளை துவம்சம் செய்யவுமே மிக்குகளின் வல்லமை பயன்படமுடியும். இங்கு பிரபாகரன் பீதுறுதால மலைகளில் ஒளிந்திருப்பதாகவோ அல்லது புலிகளின் படைகள் ஹோட்டன் சமவெளியில் அணிவகுத்து நின்று அறைகூவல் விடுப்பதாகவோ தகவல்கள் ஏதுமில்லை. மிகக் குறுகிய, ஒளிவுமறைவான, மக்களோடு மக்களாக கலந்துள்ள இலக்குகளை மிக்குகளால் தாக்கமுடியுமென்ற தொழில்நுட்பம் எப்படி யோசித்து பார்த்தா லும் புரியவில்லை. ஒரு கரப்பானையோ, மூஞ்சூறையோ, எலியையோ போர்பஸ் பீரங்கி கொண்டு அழித் தொழிக்கமுடியாது என்பது தெளிவான உண்மை ஆகும். அதுமட்டுமல்லாது, அப்படி ஒரு முயற்சியில் சுற்றியுள்ள மக்களுக்கு பாதிப் பில்லாமல் அதைச் செய்து விடலாம் என்பதும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

விமானப்படைப் பேச்சாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளையே தாக்குவதாகக் கூறுகிறார்கள். இலக்குகளை தேர்ந்தெடுப்பதற்கான நம்பகமான உளவுத்தகவல்களைப் பெறக்கூடிய ஓர் ஏற்பாட்டை வன்னிப் பிரதேசத்தில் இலங்கை அரசினால் ஏற்படுத்திக் கொள்ள முடியுமென்பது சாத்தியமான விடயமல்ல என்பது வன்னிக் களநிலைகளை அறிந்தவர்களுக்கு நன்குதெரியும். சென்ற 2006ஆகஸ்ட் மாதத்தில் செஞ்சோலையில் மாபெரும் தவறு இழைத்தமைக்கு இத்தகைய தவறான புலனாய்வுத் தகவல்களே காரணமாகும்.

எவ்வளவுதான் உயர் தொழில்நுட்பங்கள் பொருத்தப்பட்டிருந்தாலும்கூட மிக் போன்ற மிக வேகமான விமானங்களாலும் ஏனைய ரக குண்டுவீச்சு விமானங்களாலும் மிகக் குறுகிய இலக்குகளைதுல்லியமாகத் தாக்கமுடியாது. தொழில்நுட்பரீதியில் இது அரிதாகவே சாத்தியமாகக் கூடியதாகும். மிக உயரத்திலிருந்து தாக்கப்படும்போது இலக்கு எனக் குறிக்கப்பட்டதற்கு அப்பால் பொதுமக்கள் வாழும் குடிமனைகள், பாடசாலைகள், தேவாலயங்கள், சந்தைகள் என்பவற்றின் மீது அநியாயமான சேதங்கள் நிகழ்த்தப்படுகின்றன. இலங்கை விமானப்படையின் இந்தச் சாதனைகள் பற்றி

**ஆறுமுகன்**

ஒருநீண்ட பட்டியலே உண்டு.

இந்த மிக் விமானங்களினதும் ஏனைய குண்டு வீச்சு விமானங்களினதும் தாக்குதல்களால் சிதறிப்போன உடல்களின் காட்சி களை தென்னிலங்கை மக்கள் காணநேர்ந்தால் திகைப்புக்கு உள்ளாவர். இலங்கையின் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் இந்த அழிவுகளைத் திட்டமிட்டு மூடிமறைக்கின்றன. ரயில்மோதி இறக்கின்ற யானைகளைக் கணக்கிடும் தேசத்தில் உடல்சிதறி பலியாகிப் போகும் மக்களைப் பற்றி பேசப்படுவதில்லை.

இலங்கையிலுள்ள இராணுவ ஆய்வாளர்கள் எவருக்குமே இந்த விடயங்கள் கண் ணில் படுவதில்லை. ஒருவேளை இந்த விடயங் கள் அவர்களின் ஆராய்ச்சி வட்டத்திற்கு வெளியில் இருப்பதாகக் கருதலாம். ஆனால், மனிதாபிமானத்தின் பெயரால் இந்த அநியாயங்கள் பற்றி யாரோ ஒருபகுதியினராவது பேசியே ஆகவேண்டும். ஆயுதகொள்வனவு கணக்கு வழக்குகளையும், கூட்டல்கழித்தல்களையும் விட இதுவே அவசியமாகவும், அவசரமாகவும் கேள்விக்கு உட்படுத்தப்படவேண்டிய விஷயமாகும்.

தமிழ்த்தேசியத்தை நசுக்கிவிடவேண் டும் என்ற அரசுகளின் ஆதங்கம் சந்தேகத்துக் கிடமின்றி வெளிப்படையாக தெரிந்த விடயம் தான். ஆனால், அதற்காக புல்லோடு சேர்த்து நெல்லையும் அழிக்கும் வேலைகளை யாரும் நியாயப்படுத்த முடியாது.

இலங்கைக்கு எதற்கு மிக் விமானம்? ஏழைகள் படு ஏழைகளாகிக் கொண்டிருக்கும் நிலையில் சொகுசு வாகனங்களும் மிக்குகளும் யாருக்காக? நிச்சயமாக இது சண் டைக்காக மட்டும் இல்லை.

இலங்கையின் அரசியல் விமர்சகர்களும், ஆய்வாளர்களும் அரிதாகவே தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தன்மை பற்றி ஆராய்ந்து எழுதியிருக்கிறார்கள். இவ்வகை ஆய்வுகள் புலிகளின் ஆதரவாளர் என்ற தோற்றப்பாட்டை காட்டிவிடக்கூடும் என்பதாலோ அல்லது இந்த இனப்பிரச்சினையின் நியாயத் தன்மைகளை வெளிக்காட்டிவிடும் என்ப தாலோ அவர்களின் ஆய்வுகளின் பரப்பு கள் இவற்றை தொடு வதை தவிர்ப்பதே வழமையாகி வந்துள்ளது.

அதுமட்டுமன்றி, இலங்கையிலுள்ள ஆங் கில, சிங்கள அரசியல் விமர்சகர்களில் அநேகருக்கு வன்னியின் உள் நிலைமைகள் பற்றி யும், கிழக்கின் பல பகுதிகளைப் பற்றி யும் சரியான புரிந் துணர்வு கிடையாது என்பதை அந்தப் பத்திகளே காண்பிக் கின்றன. அங்குள்ள கள நிலைகளும், மக்களின் வாழ்க்கைமுறைகளும், அவர்களின் மனநிலை களும் சரியாகப் புரிந்துகொள்ளப்படாத நிலை யில் எழுதப்படும் விமர்சனங்களும், ஆய்வு களும் நாட்டுமக்களையும் அரசையும் தவறா கவே வழிநடத்தும். யுத்த நிலை நீடித்து செல்வதற்கும் மக்கள் மனதில் இடம் பிடிப்பதற்கு அரசினால் முடியாதிருப்பதற்கும் தவறான வழிநடத்துதல்களே காரணமாகும்.

'மிக்' ஊழல் விடயத்தில் மிக விநோதமாக மற்றொரு நியாயப்படுத்தலையும் தென்னிலங்கையில் காணமுடிகிறது. 'ஊழல்களை ஆராயப் போய் புலிகளை அழித்தொழிக்கும் பணியிலுள்ள பாதுகாப்புப் படைகளின் மனநிலைகளை குழப்பி அவர்களை மனம் நோகச் செய்து விடக் கூடாது' என்பதே அது. இது எப்படி இருக்கு?

உக்ரைன் அரசுக்கும் இலங்கையின் உயர்மட்ட பிரமுகர்களுக்கும் இடையில் நிகழ்ந்ததாக நம்பப்படும் கொடுக்கல் வாங்கல்களைப் பற்றி எழுதப்போய் இக்பால் அத்தாஸ் அவர்கள் தமது வீட்டு வாசலிலேயே ஆர்ப்பாட் டங்களுக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலை யிலுள்ளார். மனித உரிமைகள், பத்திரிகைச் சுதந்திரம் என்ற இலங்கை குடிமக்களின் இழப்புகளின் மத்தியில் இவ்வகை ஆர்ப்பாட்டங்கள் ஒருவகைக் கலாசாரமாகவே வளர்க்கப்பட இடமுண்டு.

யுத்தத்தில் வெற்றிகொண்டு தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தவேண்டுமென்ற இலங்கை அரசின் போக்கிற்கு, நேர்மையான சிந்தனைகொண்ட எந்தவொரு விமர்சகனும், ஆய்வாளனும் அஞ்சமாட்டான் என்பதே உண்மைத்தன்மை.

---

**தரம்-04 மாணவர்களுக்காக கடந்தவார சுடர்ஒளி வாரமலரில் வெளிவந்த படிமுறைப்பரீட்சை மாதிரிவினாத்தாள்-01 இற்கான விடைக்குறிப்புக்கள்.**

**ஆசிரியர்: தி.சுரேஸ்குமார்-கம்பளை**

01\. I 1) ஔவையார். 2) அரச சபையில், மன்னனை.
3) ''உ'' 4) ''ய''
5) வரம்பு உயரவேண்டும்/வரப்புயர.
II 1) மக்கள். 2) நீர். 3) அரசன்.
III 1) அரசன். 2) தண்ணீர். 3) உயர்வு.
IV 1) மண் + குடம். 2) பசுமை + கிளி. 3) பனை + ஓலை.
4) கல் + தூண். 5) மரம் + கலம்.
V 1) மாணவர்கள். 2) ஒழுக்கம். 3) பெரியவர்களை.
4) நன்றாகக் 5) விளங்கவேண்டும்.
VI 1) செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச்செல்வம்.
2) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
3) உங்கள் ஆரர்வத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.
4) அடைமழை காரணமாகக் கடும் வெள்ளம் ஓடியது.


02\. 1) 0456 2) 6540 3) 6084
4) 6540, 6504, 6054, 6045, 5640
( இதுபோன்ற வேறு பொருத்தமான எண்தொடர்களும் இறங்கு வரிசையில் எழுதப்பட்டிருந்தால் புள்ளி வழங்கப்படும்.)

03\. 1) A-60m, B-10m, C-125m, D-145m, E-95m
2) 145m
3) 1. 1098 2. 1100 3. 1102
4. 1104 5. 1105
4) ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றேழு.
5) முந்நூற்று அறுபத்தாறு.

04\. 1) புதன்கிழமை/புதன். 2) வெள்ளிக்கிழமை/வெள்ளி.
3) 06, 13, 20, 27 4) 05, 12, 19, 26

05\. 1) கிளி, நாய், பூனை, அணில். 2) காகம்.
3) வண்ணத்துப்பூச்சி.
4) எலி. 5) நாய். 6) சேவல்.

06\.



# பக்கவாதம் ஏன் ஏற்படுகிறது?

**கேள்வி: மூக்கு குத்துதல்- காதுகுத்துதல் என்பவற்றால் பரம்பரை நோய்கள் குணமாகும் என்கின்றார்கள். இது உண்மையா?**

பதில்: காது குத்துதல், மூக்கு குத்துதல் என்பவற்றால் பரம்பரை நோய்கள் குணமாகும் என்பதற்கு இதுவரை ஆதாரபூர்வான ஆய்வு முடிவுகள் எதுவுமில்லை. ஆனால் அதற்காக இவற்றால் பிரயோசனம் இல்லை என்றும் கூறிவிடமுடியாது. 'அக்யூபங்சர்' என்பது சீன மருத்துவம். நோய்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடங்களில் கூர்மையான ஊசி கொண்டு குத்தி குணப்படுத்தும் இந்த மருத்துவத்தில் 'காது அக்யூபங்சர்' என்றொரு பிரிவு உண்டு. இதில்- காதில் பல வித நோய்களைக் குணப்படுத்தும் அக்யூபங்சர் புள்ளிகள் காட்டப்பட்டுள்ளன.

இதில் கண் பகுதிக்கு குறிப்பிடப்பட்ட புள்ளி நாம் வழமையாக காது குத்தும் இடத்தில் அமைந்துள்ளது ஒரு புதுமை. அந்த இடத்தில் ஊசிகொண்டு தூண்டும் போது கண் சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஊசி மருத்துவம் நமது ஆயுள் வேதத்திலும் இருப்பதாக குறிப்பிடுகின்றார்கள். நமது தாத்தாக்கள் - காதில் கடுக்கண் போட்டு கடைசிவரை கண்ணாடி போடாமல் நன்றாக பார்வையை வைத்துக்கொண்டது இந்த அக்யூபங்சர் புள்ளியால் இருக்கலாம் அல்லவா?

**கே: எனக்கு வயது 20. பெண். அடிக்கடி நகச்சுற்று வருகின்றது. பரிகாரம் கூறவும்?**

பதில்: நகக் கண்களில் பற்றீரியா, பங்கசு போன்ற தொற்றுகளால் தான் நகச்சுற்று வருகின்றது. கைவிரல்களை சுத்தமாக வைத்துக்கொண்டால், நகச்சுற்று வராது. நகங்களை ஒழுங்காக வெட்டவேண்டும். ஆனால், ஒட்ட வெட்டக்கூடாது. ஒட்டவெட்டிய நகங்கள் - நகச் சதையினுள் உள் வளர்ந்து - அழுத்தத்தை உண்டாக்கி தொற்றுகள் ஏற்பட வழிசெய்யும். இதனை Ingrown Toenails என்பார்கள். அநேகரின் கால் விரல்களில் - முக்கியமாக கால்பெருவிரல்களில் தான் இப்படி நேருகின்றது. Ingrown Toenails களுக்கு நகத்தை முழுமையாகப் பிடுங்கி புதுநகம் வளர வழிசெய்வதுதான் ஒரே ஒரு சிகிச்சை முறை. நகங்களைப் பற்களால் கடித்து எடுப்பதும் நகத் தோல்களை கிழியச் செய்து தொற்று ஏற்பட வழிவகுக்கின்றது. பங்கசு தொற்றுநகக் கண்களில் ஏற்பட்டிருந்தால், Clotrimazole போன்ற பங்கசு கிறீம்களை அல்லது Solution என்ற விசேட தயாரிப்புகளை உபயோகிக்கவேண்டும். சில பங்கசு தொற்றுகளுக்கு உள்ளேயும் மருந்து பாவிக்கவேண்டும்.

**கே: ஆண். வயது 28. கொஞ்ச நாட்களாக எனது உள்ளங்கை, பாதங்கள் அதிகமாக வியர்க்கின்றன. இதனால் எழுதுவது, சைக்கிள் ஓடுவது என்பவை கஷ்டமாக இருக்கின்றது. பரிகாரம் கூறவும்?.**

பதில்: அநேகமாக இளம்வயதில்தான் இப்படியான பிரச்சினை தோன்றுகின்றது. இதற்கு சரியான காரணம் இதுவரை அறியப்படவில்லை. Parasympathetic Nerves எனப்படும் பரிவு நரம்பு மண்டலத்தின் இயக்கத்தால்தான் - வியர்வை சுரக்கின்றது. சாதாரணமாக வெப்பம் அதிகரித்திருக்கும்பொழுது - உடலின் வெப்பநிலையை சமப்படுத்துவதற்கு வியர்வை அதிகமாக சுரக்கின்றது. ஆனால், உங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை - உடம்பை விட உள்ளங்கை, பாதங்களில் அதிகமாக வியர்வை ஏற்படுவதுதான். இதற்கு மனவெழுச்சி தூண்டல் முக்கிய காரணம் என்று கருதப்படுகின்றது. அத்துடன் இளம்பிராயத்தில் ஏ்றபடும் ஹோர்மோன்களின் செயலினால் இப்படி ஏற்படுவதாகவும் சொல்கின்றார்கள். இது ஒரு நோயல்ல. ஒரு சில காலத்தின் பின்னர் தானாகவே இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். ஆனால், இப்படி வியர்ப்பதால் எழுதுவது, பாதணிகள் அணிவது என்பவை கஷ்டமாக இருக்கும். பிறரோடு கைகொடுத்து பேசவே கஷ்டமாக இருக்கும். வியர்வை நாற்றம் - குறிப்பாக அணியும் பாதணிகளிலிருந்து கெட்ட நாற்றம் ஏற்படும். பிரச்சினை அதிகமாக இருந்தால் Parasympathectomy என்ற சத்திரசிகிச்சை செய்யும் அவசியம் ஏற்படுகின்றது. அலுமினியம் குளோரைட் (Aluminium Chloride) 20-25 சதவீதம் வெளிப்பூச்சு, வாரம் இருதடவை வியர்க்கும் உள்ளங்கை பாதங்களில் பூசி வந்தால் சிலவேளை குணம் காணலாம்.


இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி
மாவத்தை,கொழும்பு-14.


**கே: எனது மாமனார் வயது 58. திடீரென்று பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு, படுத்த படுக்கை யாக இருக்கின்றார். இவருக்கு எதுவித நோயும் முன்னர் இருக்க வில்லை. இவருக்கு இடதுபக்க உடல் உணர்விழந்து இருக்கின்றது. வாயால் பேசவும் முடியாது. பக்கவாதம் ஏன் ஏற்படுகின்றது. பக்கவாதம் ஏற்பட்ட சிலருக்கு பேச்சு வருகிறதே- அது எப்படி? விவரம் தரவும்.**

பதில்: மூளைக்குச் செல்லும் இரத்தக்குழாய் வெடித்து இரத்தம் கசிவதால் அல்லது அந்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு இரத்தோட்டம் நின்றுவிடுவதால் - பக்கவாதம் என்கின்ற Hemiplegia ஏற்படுகின்றது. பக்கவாதம் ஒரு நோயல்ல. இருதயநோய், நீரிழிவு, அதி உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களால் ஒரு சிலருக்கு ஏற்படும் விளைவுகளில் ஒன்றே இது. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவரை விட அவர் அருகிலிருந்து பராமரிப்பவருக்குத்தான் சிரமங்கள் அதிகம். 'ஒருவருடைய உடலையும் மற்றொருவரின் உழைப்பையும் முடக்கிவிடுகிறது இந்தப் பக்கவாதம், முன்னர் கூறியபடி மூளையின் ஒரு குறிப்பிட்ட பகுதி திடீரென்று செயல்படாமல் போகும்போது உடலின் எதிர்ப்பாகத்தில் ஒரு கைகால் செயலற்றுப் போகும். மூளையில் வலதுபக்கம் செயல்படவில்லை என்றால் உடலில் இடதுபக்கமும், மூளையில் இடதுபக்கம் செயல்பட மறுத்தால் உடலில் வலதுபக்கமும் பக்கவாதம் ஏற்படும்.

பொதுவாக இடதுபக்கம் பக்கவாதம் வரும்போது நோயாளிக்கு பேச்சு பாதிக்காது. மாறாக வலதுபக்க பக்கவாதம் ஏற்பட்டால் பேச்சு பாதிக்கப்படும். அதற்குக் காரணம் பேச்சுக்கு அவசியமான Anditory Center மூளையின் இடதுபக்கத்திலிருப்பதுதான்.


இரத்தக்குழாய் அடைப்பதற்கு காரணங்களைப் பார்ப்போம். நமக்கு வயதாக வயதாக இரத்தக் குழாய்களின் உட்சுவர் தடித்துக் கொண்டே போய் ஒரு கட்டத்தில் முற்றாக அடைத்து விடுகிறது. இந்த அடைப்பு மூளையில் ஏற்படும்போது பக்கவாதம் வருகிறது. அடுத்ததாக - இரத்தத்தில் கொலஸ்திரோல் மிகுதியாக இருக்கும்போது - இரத்தக்குழாயில் இந்தக் கொலஸ்திரோல் படிந்து குழாய்களை அடைக்கும். நீரிழிவு நோயாளிகளுக்கும் கொலஸ்திரோல் அளவு அதிகமாக ஏற்படுகின்றது. அதுபோல் இதய வால்வுகளில் இரத்தக் குழாய்களில் இரத்தம் உறைந்து கட்டிகள் உருவாகி - அவை இரத்தோட்டத்தோடு மூளை இரத்தக்குழாய்களை சென்றடைந்து அடைப்புகளைத் தரும். இரத்த அழுத்தம் அதிகளவாக இருப்போருக்கு இரத்த அழுத்தம் அதிகரிக்கும்போது சிலவேளைகளில் இரத்தக் குழாய்கள் வெடித்து-இரத்தப்பெருக்கு ஏற்பட்டு பக்கவாதம் ஏற்படலாம்.


**கே: ஆண். வயது 28. விந்துவை வீணாக விரயம் செய்யாமல் கட்டுப்படுத்தி வைத்துக்கொண்டால் மனோசக்தி பெருகும். உடல்வலிமை ஏற்படும் என்று கூறுகின்றார்களே - அது சரியா? அப்படியென்றால் உடலுறவு கொள்வதால் எமக்கு மனோ - உடல் பலவீனம் ஏற்படுமா?**

பதில்: சரியான கருத்துகளை - தவறான சந்தர்ப்பத்தில் ஏற்றுக்கொள்ளும், புரிந்துகொள்ளும் ஒரு துறை பாலியல் Sexuality என்று சொல்லுமளவுக்கு நிறையவே உதாரணங்கள் உண்டு. அதில் ஒன்றுதான் நீங்கள் குறிப்பிடுவது. விந்து என்பது வியர்வை, சிறுநீர் போன்று ஒரு சுரப்பு மட்டுமே. அதற்கும் இரத்தத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை. அதுபோல் சிறுநீர் கழிப்பது, மலம் கழிப்பது போல் ஒரு Phsiological உடலியல் தொழிற்பாடுதான். விந்து உடலுறவின்போதோ சுயஇன்பத்தின் போதோ அல்லது தூங்கும் போதோ வெளியேறுவது. இதனால், உடல் சக்தி குறையப் போவதுமில்லை. பித்து பிடிக்கப் போவதுமில்லை. மேலும் விஞ்ஞான ஆய்வுகளின்படி, உடலுறவின் போது உச்சநிலை அடையும் வேளையில் (Climax) மூளையில் Endomorphin என்கின்ற சுரப்பு வருகின்றது. இது எமது உடலின் எதிர்ப்புச் சக்தியை வலிமையடையச் செய்கின்றது. இது சருமத்தில் ஏற்படும் சுருக்கங்களைக் குறைக்கின்றது, புற்றுநோய்கள் ஏற்படாமல் பாதுகாப்பு அளிக்கின்றது. இவ்வாறு British Nation Health Organisation கூறுகின்றது.

இதுதவிர இன்றும் சில ஆய்வுகள் உடலுறவு தசைகளுக்கு சக்தி தருவதாகவும், உடலுறவின்போது 300 கலோரி சக்தி எரிக்கப்படுவதாகவும் தசைவலி, சளிப்பிடித்தல் - தடிமல் ஏன் இதயநோய்களை குறைப்பதாகவும் தெரியப்படுத்தியுள்ளன. எனவே, உடலுறவு ஒரு தீய காரியமல்ல. குற்றமனப்பான்மையுடன் நடத்தப்படும் உடலுறவு, அதாவது தப்பான உறவு களவான உறவு, அல்லது குற்றமனப்பான்மையுடன் கைக்கொள்ளப்படும் சுயஇன்பம் என்பவைதான் மனதையும் உடலையும் பாதிக்கின்றன.

அடுத்ததாக விந்துவை கட்டுப்படுத்தினால் மனோசக்தி வளரும் என்பது ஓரளவு உண்மை.அதாவது மனதைக் கட்டுப்படுத்தி - பால் உணர்வுகள், சிந்தனைகள் இல்லாது - இந்த உணர்வுகளை ஆக்கபூர்வமான காரியங்களுக்கு, செயல்களுக்கு ஈடுசெய்தோமானால் Sublimation of Sex Energy அது மனோ, உடல் சக்தியை வளர்க்கும். இதனைத்தான் குண்டலினி சக்தி என்பார்கள். மனதில் காம உணர்வுகளை வைத்துக்கொண்டு ஆசைகளை அடக்கிக்கொண்டு விந்துவை கட்டுப்படுத்தி வைப்பதால் எதுவித பிரயோசனமும் இல்லை. மனம், உடல், செயல், சிந்தனையாவும் ஒன்றிணைந்து உணர்வுகளை அடக்கினால் இந்தக் குண்டலினி சக்தியைப் பெறலாம். இப்படி காமஉணர்வுகளை அடக்கி - பிரமச்சாரியத்தை சரியானமுறையில் கைக்கொண்டு சாதனைகள் பல படைத்தவர் சுவாமி விவேகானந்தர். இன்று பல்வேறு காமிக சூழலில் வாழும் நம்மைப் போன்றோருக்கு இதெல்லாம் இயலுமா என்பது கேள்விக்குறி.









# கலக்கல்

கவிஞான சம்பந்தர்

## தத்துவம்

விமானம் : எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும் பெற்றோல் தீர்ந்தால் கீழேதான் வந்தாக வேண்டும்.

பாட்டு : கவலையை மறப்பதற்கு இது மருந்து கலாரசிகர்களுக்கு இது விருந்து.

ஆடை : பாவின்மேல் இருந்தால் பாவாடை உன்மேல் இருந்தால் மேலாடை.

பெயர் : உனக்குச் சொந்தமானதை உன்னால் பயன்படுத்த முடியாது ஆனால் மற்றவர்கள் தான் பயன்படுத்துவார்கள்.

கொள்ளி : பலருக்கு கொள்ளி போட்ட உன்னால் உனக்கு கொள்ளி போட முடியுமா?




## "யார் இவர் தெரிகிறதா?" 09



### இந்த வாரம் மர்மமாகி இருக்கும் உருவம் யாருடையது?

நம் நாட்டின் கிரிக்கட் வீரர். இவர் யாரெனக் கண்டு பிடித்து இவர் பெயரை தபாலட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை எழுதிய அதிஷ்டசாலிகள் இவரின் பெயர் விவரம் பிரசுரிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி
"யார் இவர் தெரியுமா?"
85/ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை,
கொழும்பு-14.

★ "யார் இவர் தெரிகிறதா?" இல.6 இற்கான சரியான விடை: முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி. சரியான விடைகளை அனுப்பியோர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:

1. வி.கங்காதரன், நல்லூர். 2. திருமதி தினேஷ் இந்திரா, கொழும்பு- 11. 3. எஸ்.ஜெனிபர், வத்தளை.
4. இப்திகார் பானு, அக்கரைப்பற்று.5. பி.கோகுலவாணன், திருகோணமலை.



## கறுப்புத்தான் எனக்கு புடிச்ச கலரு

ஸ்பெயினில் நடைபெற்ற கறுப்பினப் பெண்களின் நடனத்தை காணலாம்.

## ஏக்கத்தில் பாதி தூக்கத்தில் பாதி போனது போக ஏது மீதி?



இவர்கள் வரிசையாகத் தூங்குவது ஏதோ சாதனை புரிவதற்காக என்று நினைத்து விட வேண்டாம். சீனாவில் ஊஹன் நகரில் உள்ள பல்கலைக்கழகத்தில் கற்கும் பிள்ளைகளைப் பார்க்க வந்த பெற்றோர்கள் அவ்வூர் விடுதியில் இடம் கிடைக்காததால் உடற்பயிற்சி மையத்தில் உறங்குவதையே காண்கிறீர்கள்.





## குறும்பு



## இந்தமான் எந்தன் சொந்த மான்

நடிகர் சல்மான்கான் புள்ளிமானை வேட்டையாடி ஐந்து வருடச் சிறைத்தண்டனைக்கு உள்ளானார். ஆனால் மெக்சிக்கோ கவர்னர் பில் ரிச்சர்ட் தான் வேட்டையாடிய ஒரிக்ஸ் மானுடன் சிரித்தபடி போஸ் கொடுக்கிறார்.



ஒரு தமிழ்ப்பெண், ஒரு மகாராஷ்டிரப்பெண், ஒரு பஞ்சாபிப்பெண் ஆகிய மூவரும் ஒரே நாளில் இறந்து எமதர்மன் முன்பு கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்கள். நீதி விசாரணை தொடங்கியது. "நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று, தமிழ்ப் பெண்ணை நீதிதேவன் கேட்டார்.

"மிகவும் நல்லவளாக இருந்தேன். கல்யாணமாகுமுன் வரை கன்னியாகவே இருந்தேன். கணவரிடம் விசுவாசமாக நடந்து கொண்டேன். ஒவ்வொரு நாளும் ஏழுமலையானை வேண்டிக் கொண்டிருப்பேன்."

"சபாஷ். சொர்க்கத்தில் முதல் வகுப்பை உனக்கு அளிக்கிறேன்.!" என்றார் நீதிதேவன்.

மகராஷ்டிரப் பெண் சொன்னாள்: "நான் வீரமிக்க மராட்டிப்பெண். எனவே எண்ணத்திலும் செயலிலும் தமிழ் சகோதரியைப்போல் என்னால் ஒழுக்கமுடையவளாக இருக்க முடியவில்லை. ஆனால் யார் மனதையும் நான் புண்படுத்தவில்லை. கணவரைக் களிப்புடன் வைத்திருந்தேன்."

"உனக்கு இரண்டாம் வகுப்புத்தான்."

பஞ்சாபிப்பெண் சொன்னாள்: "நான் மிகவும் மோசமானவள். செய்யக்கூடாததையெல்லாம் செய்தேன். கடவுளை வணங்குவது இல்லை. எல்லோருடனும் சண்டை போட்டேன். மைத்துனருடன் உறவு கொண்டேன்."

"சகோதரி இது ரொம்பவும் மோசம்" என்றார் நீதிதேவன்.

"என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். தயவு செய்து சகோதரி என்று மட்டும் அழைக்காதீர்கள்.!"

"அப்படியானால் இன்றுமாலை என்னுடைய அறைக்கு வந்துவிடு!"





# அறிவியல்

ரி.கே.ஆர்





## பெரிதும் சிறிதும்

உலகில் மிகப் பெரிய பூ, ஒரு மீற்றர் நீளமும் , 7 கிலோகிராம் நிறையும் கொண்டது. இது இந்தோனேஷியாவில் காணப்படுகிறது. உலகில் மிகச்சிறிய விதைகள் 'ஓர்கிட்' தாவரவிதைகளாகும். ஒரு மில்லியன் விதைகளின் நிறை எவ்வளவு தெரியுமா? ஆக, 0.3 கிராம்தான். 'ஓர்கிட்' தாவரத்தின் ஒரு கப்சியூலில் 2,000,000 விதைகள் காணப்படுமாம்.

## உற்பத்தியில் எறும்புகள்

எறும்புகள் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மற்றும் உற்பத்தித்துறையில் மிகவும் முக்கியமான உயிரினமாக விளங்குவதால், எறும்புகளைப் பாதுகாப்பதற்கான ஓர் இயக்கம் கியூபாவின் மாலியில் வளர்ந்து வருகின்றது. ஓர் எறும்புக் கூட்டம் ஒரு நிமிடத்திற்கு 28 பூச்சிகளை தூக்கிச்சென்று சுற்றுச்சூழலை பாதுகாக்கின்றது. சுறுசுறுப்பான காலங்களில் ஒரு நாளைக்கு ஒரு லட்சம் இறந்த பூச்சிகளின் உடல்களை அப்புறப்படுத்தி சுத்தம்செய்யும் எறும்புக் கூட்டங்களும் உள்ளன. தோடம்பழத் தோட்டங்கள், தானியங்கள் விளையும் வயல்களில் தீங்குசெய்யும் பூச்சிக்கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் எறும்புகள் முக்கிய பங்காற்றுகின்றன இதனால், கியூபாவில் எறும்புகள் விவசாயிகளின் தோழன் என்று அழைக்கப்படுகின்றன.





## உயர்ந்த கோபுரம்

இன்று உலகின் உயாந்தகோபுரம் தாய் வானின் 'தாய்பே' கோபுரமாகும். இதன் சாதனையை முறியடிக்க உருவாகிறது அமெரிக்கா வின் சுதந்திரக் கோபுரம். 1776 இல் சுதந்திரம் பெற் றதை நினைவுகூரு முகமாக 1776 அடி உயரத் தில் 73 மாடி களையும் 276 அடி உயர மான கூர்மையான பகுதியை யும் கொண்டுள்ளது.எனினும், இதனை விடவும் 874 அடி உயரமான 'பேஜ் டுபாய்' என்ற கட்டடம் 2008 இல் பூர்த்தியாகும். இதற்கு பலகோடிகள் அமெரிக்க டொலர் செலவிடப்படும். இது கனடாவின் சிஎன் கோபுரத்தை விட 835 அடி உயரமானது.




## சூரியன்

சூரியனைச் சூழவுள்ள சிவப்பு நிற ஒளிவட்டத்திலே கிரகங்களையும், ஏனைய விண்ணியல் பொருட்களையும் ஈர்த்துவைத்துக் கொள்ளக்கூடிய காந்தசக்தி காணப்படுவதாக 'நாஸா' விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். சர்வதேச விண்கல மொன்றை விண்ணுக்கு ஏவி எக்ஸ்-றே கதிர்களை வெளி யிடக்கூடிய தொலைநோக்கியினூடாக ஆய்வுசெய்த போதே இவ்வுண்மை தெரியவந்துள்ளது.

இதுவரை காலமும் சூரியனில் காணப்படும் காந்தசக்தியானது எங்கிருந்து வருகிறது என்பது குறித்து பெரும் குழப்பம் கொண்டிருந்த விஞ்ஞானிகள், தமது விஞ்ஞான வளர்ச்சி யின் மிகப் பெரிய வெற்றி இதுவென மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். எக்ஸ்-றே கதிர்களை வெளியிடக்கூடிய தொலைநோக்கியை முதற்தடவையாக பயன்படுத்தியுள்ள அமெரிக்கா வின் ஹாவாட் மாநிலத்திலுள்ள 'ஸ்மித்வோனியன்' விண்வெளி ஆராய்ச்சி நிலைய சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவிக்கையில், ''நாம் முதற்தடவையாக எக்ஸ்-றே கதிர்களை வெளியிடக்கூடிய தொலைநோக்கியைப் பயன்படுத்தி ஆய்வுசெய்துள்ளோம். முதற்தடவையாக சூரியனைச் சூழவுள்ள சிவப்புநிற காந்த சக்திகூடிய ஒளிவட்டத்தை எமக்குக் காணக்கூடியதாக இருந்தது'' என்றார்.

மேலும் ''ஹினோட்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள விண்கலத்தை கடந்தவருடம் செப்ரெம்பர் மாதம் விண்ணுக்கு ஏவியிருந்தோம். (ஹினோட் என்றால் ஜப்பானிய மொழியில் சூரியன் உதிப்பு என்பதாகும்). அதில் விசேடவிதமாக வடிவமைக்கப்பட்ட கருவிகள் ஒவ் வொன்றிலும் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் சூரியனைப் பார்க்கக்கூடியதாக இருந் தது. இதன் மூலமாக சூரியனை அவதானித்தபோது சூரியனைச் சூழவுள்ள ஒளிவட்டத்திலிருந்து சிறிய தானிய அளவு வாயு மேல்கீழாக எழுந்து விழுவதைக் கண்டோம்''எ ன்றார்.



## இலங்கையின் அரசியல் சீர்திருத்தம்


இலங்கையில் 1833 முதல் 1978 வரை பல அரசமைப்புகள் உருவாக் கப்பட்டன. 1833 இல் 'கோல்புறூக்' சீர்திருத்தம் மூலம் சட்டசபை உரு வாகியது. 1904 இல் சட்டசபை அங்கத்தவர் தொகை அதி கரிக்கப் பட்டது. 1910 இல் 'மனிங்' சீர்திருத்தம் 4வீதமான படித்த இலங்கை யருக்கு வாக்குரிமை வழங்கியது. 1931 இல் 'டொனமூர்' அரசமைப்பு கொண்டு வரப்பட்டது. அது சர்வசன வாக்குரிமை, நிர்வாகக்குழுமுறை, பிரதேச வாரி பிரதிநிதித்துவம் என்பவற்றை அறிமுகப்படுத்தியது. 1947 இல் 'சோல்பரி' அரசமைப்பு இருசபைகளைக் கொண்ட நாடாளுமன்றத்தை யும், 1972 அரசமைப்பு குடியரசு பிரகடனத்தையும், 1978 இல் அரச மைப்பு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையையும் அறிமுகப் படுத்தின.



## இன்சாட் 4'சிஆர்

இந்திய விண்வெளி வரலாற்றில் புதிய சாதனை எட்டப்பட்டுள்ளது. தகவல் தொடர்புக்கு முக்கிய பங்காற்றும் 'இன்சாட் 4சிஆர்' செயற்கைக் கோளை ஜி.எஸ்.எல்.வி.ரொக்கெட் மூலம் இந்தியா முதல்முறையாக விண்ணில் செலுத்தியது. ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள 'சதீஷ் தவான்' ரொக்கெட் ஏவுதளத்திலிருந்து சிறிய தாமதத்திற்குப் பிறகு ஏவப்பட்ட ரொக்கெட், திட்டமிட்டபடி செயற்கைக் கோளை விண்வெளியில் சுற்றுவட்டப் பாதையில் செலுத்தியது.

இந்திய விண்வெளி ஆய்வுமையம் கடந்த 2006 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் திகதி 'ஜி.எஸ்.எல்.வி.எப். -02' என்ற ரொக்கெட் மூலமாக தகவல் தொடர்பு செயற்கைக் கோளாக 'இன்சாட் -4சி' செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த முயன்றது. 'ஜி.எஸ்.எல்.வி.எப்.-2' ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டபோது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு, திசைமாறிச் சென்றதால், அந்த ரொக்கெட் இஸ்ரேல் விஞ்ஞானிகளால் கடலில் மூழ்கடிக்கப்பட்டது தெரிந்ததே.





# மலைக்குருவி

**சிறுகதை**

**சந்திரகாந்தா**

அந்தக் குருவிகளைப் பார்த்தால் போதும். பூங்கொடியின் பிஞ்சு உள்ளத்தில் குதூகலம் கரை புரண்டோடும். ஆற்றங்கரைக்கு வந்துவிட்டால் குருவிகளின் உலகிலேயே அவள் சஞ்சரிப்பாள்.பத்தே வயதான அவள் நடக்கும் போதும்,ஓடியாடி நண்பர்களுடன் விளையாடும் போதும் மலைக்குருவியாகவே அவளை எண்ணத் தோன்றும்.

அவள் தன் வயதை ஒத்த பெருந்தோட்ட லயத்துச் சிறார்கள் அனைவருடனும் நட்பாக இருந்தாலும், பள்ளிக்கூட வாத்தியாரின் மகன் ஜெயராமுடன் அதிக நட்பாக இருந்தாள். இதற்குக் காரணம் அவனது ரசனைகள் அவளது ரசனைகளோடு ஒத்திருப்பதுதான். இன்னுமொன்று,அவன் அவளுக்காக எதையும் செய்பவனாகவும் விட்டுக் கொடுப்பவனாகவும் இருந்தான்.

சின்னத்துரை வாத்தியாரின் மகன் ஜெயராமும் லயத்து சிறுவர்களைவிட துருதுரு என்றிருப்பான். லயத்து சிறுமிகளில் பூங்கொடி பளிச்சென்று இருந்தாள். அவளது மாநிறமும், சுறுசுறுப்பான போக்கும் வாயாடித்தனமும் வாத்தியாரின் மகனுக்கு பிடித்ததில் வியப்பில்லை.

ஜெயராமும் தனிப்பிள்ளையாதலினால் வீட்டில் அவனோடு விளையாடுவதற்கு யாருமில்லை. அப்பா வாங்கிக் கொடுத்த விளையாட்டுப் பொருட்கள் இப்போதெல்லாம் அவன் பொழுதைக் கழிக்க உதவவில்லை. பாடசாலை விட்டதும் பூங்கொடியை தனது வீட்டிற்கு வந்து விளையாடிவிட்டு செல்லும்படி அழைக்கும் அவனைத் தட்ட முடியாமல் அங்கு போனவள், இப்போது அதையே வழக்கமாக்கிக் கொண்டாள்.

வாத்தியார் வீட்டிலும் பெண்குழந்தை இல்லாததால் வாத்தியாரின் மனைவி சகுந்தலாவும் இதைத் தடுக்கவில்லை. வகுப்பில் நன்றாகப் படிப்பாள் என்பதால் சின்னத்துரை வாத்தியாரும் மறுக்கவில்லை. மலையுச்சிக்கு கொழுந்து பறிக்கச் செல்லும் பூங்கொடியின் அம்மாவும் வீடு திரும்ப அந்தி சாய்ந்துவிடும். தகப்பன் இலட்சுமணனோ சாராயக்கடையில் கும்மாளமடித்துவிட்டு இருண்ட பின்னர் தான் திரும்புவான். இதனால் பூங்கொடிக்கும் அவசரமில்லை.

முதலில் வீட்டில், முற்றத்தில் என்று விளையாட ஆரம்பித்தவர்கள் சுற்றுப்புற தேயிலைத் தோட்டம், சிற்றருவி என்று விளையாடப் போவார்கள். நேரம் போவது தெரியாமல் கதைத்துப் பேசி விளை யாடுவார்கள், சிலவேளைகளில் தர்க்கம் ஏற்பட்டாலும், உடனேயே சமரசமாகி விடுவார்கள்.

வழக்கம் போல இன்று மாலையும் தேயிலைச் செடிகள் நிறைந்த இரு மலைச்சாரல் களிடையே சளசளத்து ஓடும் அந்த அழகு கொட்டும் அருவிக் கரைக்கு அவர்கள் இருவரும் விளையாட வந்திருந் தார்கள்.

நதியில் தண்ணீர் குறைவாகவே ஓடிக்கொண்டிருந்தது. மழை காலம் என்றால் பேரிரைச்சலுடன் இரு மருங்கையும் தொட்டு வேகமாக ஓடும் கங்கையில் இப்போது நடுநடுவே சிறு மணல்தட்டுக்கள் தெரிந்தன. ஆற்றங்கரையோர புல் திடலில் மேய்ச்சலை முடிந்துக் கொண்ட சில மாடுகள் நீரில் இறங்கி தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தன. சில கொக்குகள் பறப்பதும், நீரில் இறங்கி மீன் பிடிப்பதுமாக இருந்தன. இன்னும் சில அழகான குருவிகள் கீச்சிட்டபடி இக்கரைக்கும் அக்கரைக்குமாக பறந்து கொண்டிருந்தன. இன்னும் சில குருவிகள் கரையோர மரக்கிளைகளிலி ருந்தபடி தமக்குள் பேசிக்கொண்டிருக்கும் அழகில் ரசித்து நின்றாள் பூங்கொடி.

நதியைப் பார்க்கும் போது ஓடுவதாகத் தெரியவில்லை. அதில் மிதந்து செல்லும் சருகுகள்தான் அதன் ஓட்டத்தை உறுதிப்படுத்தின.

''ராமு அந்த குருவியைப் பாரடா..... வடிவான மஞ்சள் நிறத்தில் கருமையான கோடு கீறியிருக்கிற இறகைப்பாரடா... சிறகடிக்காமல் அம்பு போல பறந்து போகுது...'' . பூங்கோடி கைதட்டி ஆரவாரமாக சுட்டிக்காட்டினாள்.

அவன் குருவியை விட அவளது குதூகலத்தை ரசித்தான்.

'' அதோ அந்த கரும்புள்ளியுடைய வெள்ளைக் குருவிகள் மீன் பிடிக்கிறது வடிவாக இருக்கு....'' அவள் காட்டிய திசையில் ஜெயராம் பார்த்தான்.

விர் என்று ஒரு சிறிய குருவி அசுரவேகத்தில் செங்குத்தாக நீரில் இறங்கி மறைந்து மறுகணம் தனது நீண்ட சொண்டில் ஒரு சிறிய மீனைக் கவ்வியப்படி மேலே எழும்பிப் பறந்து கொண்டிருந்தது.

நீண்ட நேரமாக அங்கேயே தரித்து நின்று இயற்கை காட்சியை ரசித்தார்கள். ''பூங்கொடி... புறப்படலாமா?'' என அவளை நோக்கினான் ஜெயராம்.

''வரமாட்டேன் பொறு..'' பூங்கொடி அதிகாரமாக கூறினாள்.

''நேரம் போயிட்டுதெல்ல.. போயிட்டு நாளைக்கு வரலாமில்லியா?''

''அதோ அந்த மண் திட்டிக்கு போகவேணும் போலிருக்கு..... தண்ணீர் பாய்ச்சல் இல்லைத்தானே.?''

''ஆமா... ஆனா ஆறு திடீரென்னு பெருக்கெடுத்தால்? என்னால் ஏலா?...''

'' கூ... பயந்தாங்கொள்ளி.... ஒரு பொட் டச்சிக்கு இருக்கிற துணிவு உனக்கில்லையே!'' பூங்கொடியின் வார்த்தைகள் அவனை ரோசம் கொள்ளவைத்தன.

''சரிபோகலாம்'' விடுவிடு என்று அவன் தண்ணீரில் இறங்கி நடக்க அவளும் உற்சாகமாகப் பின் தொடர்ந்தாள். அந்த மணற்திட்டியின் இருபுறமும் ஆறு இரு கிளைகளாக பிரிந்து ஓடிக்கொண்டிருந்தது. அங்கு நின்று பார்க்கும்போது சுற்றுப்புற மலையின் பசுமை ரம்மியமாக இருந்தது.

''திரும்பலாமா?''

''ம்''

திட்டியிலிருந்து நீரில் இறங்கி கரையை நோக்கி நடந்தார்கள். திடீரென்று நீரில் வேகமும் அளவும் அதிகரிப்பதை உணர்ந்த பூங்கொடி ''எனக்கு பயமா இருக்கடா'' என்றபடி அவனது கைகளைப் பற்றிக் கொண்டாள். ஜெயராமும் இறுக அவளது கைகளைப் பற்றியபடி வேகமாக குறுக் குறுத்து நடந்தான். நீரோட்டம் நேராக செல்ல விடாது தள்ளிக் கொண்டிருந்தது. ஒருவாறு வேகமாக அவர்கள் கரையை அடைந்தபோது இருவருக்கும் மூச்சிரைத்தது.

'' நான் அப்பவே சொன்னேனில்ல?- கேட்டியா? நல்லவேளை தப்பிட்டம்.. இப்ப ஆறு பெருகிற வேகத்தைப் பார்......''

பூங்கொடி குற்ற உணர்வோடு தலைகுனிந்து மௌனமானாள்.

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மணல்பிட்டி நீருள் மறைந்து கொண்டிருந்தது.

''சாமிதான் காப்பாத்தினது'' பூங்கொடி நெடுமூச்செறிந்தாள்.

வீடு சேர்ந்த பின்னரும் படபடப்பு அடங்கவில்லை. வழக்கம் போலன்றி அன்று கைகளை இறுகப்பற்றியபடி ஆற்றைக் கடந்து வந்தமை இருவர் மனதிலும் இனம் புரியாத சலசலப்பை ஏற்படுத்தியது. ' என்ன மென்மையான கை ! என ஜெயராம் நினைத்துக்கொண்டான். பூங்கொடியும் அவன் பற்றிய இடத்தைத் தடவிச் சிரித்தாள்.

இருவரும் வாத்தியார்வீட்டிற்கு திரும்பிய பின்னரும், பூங்கொடி வீட்டுக்குப்போக மனமின்றி அங்கேயே தரித்து நின்று வாத்தியார் வீட்டு செல்லநாயுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். பொழுது சாய்ந்து கொண்டிருந்தது.

பூங்கொடி இன்னும் வீட்டிற்குச் செல்லாததைக் கண்ட வாத்தியாரின் மனைவி. '' ஏண்டி வீட்ட போகலியா?''

பூங்கொடி நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள்.

''பொழுது சாயு தெல்ல? அம்மா ஏசமாட்டாங்களா?''

''ஏசுவா அப்பன் வந்தாலும் வெறியில உதைக்கும்.... ஆனா எனக்கு அங்கே போகப் புடிக்கல''

''அப்ப இங்கேயே இருந்திடேன்......'' வாத்தியார் மனைவி சிரிப்போடு கேட்டாள்.

''அம்மாசரி , அக்கா சரி ..... தேடி வந்திடுவாங்களே....''

''நான் சொல்கிறேன்...'' என்று வாத்தியார் மனைவி சொன்னதும்,'நான் இங்கேயே இருந்திடலாமோ?' என்ற சந்தோஷமும் கூடவே ஒரு வித சந்தேகமும் ஏற்பட்டது அவளுக்கு.

''இன்னிக்கு ராமுவோட பிறந்தநாள்..... கேக் வெட்டுவோம், பட்சணம் எல்லாம் செய்திருக்கு... சாப்பிட்டு போகலாம்'' வாத்தியாரின் மகன் ராமுவை அம்மா அழகாக புதிய உடை அணிவித்து அழைத்து வந்தபோது அவனைப் பார்க்க அவளுக்கு ஆனந்தமாக இருந்தது.

வாத்தியார் வீட்டு வேலைக்காரி கண்ணம்மா பட்சணங்களைக் கொண்டு வந்து மேசையில் அடுக்கினாள். வகைவகையாக பல நிறங்களில் பட்சணங்களும், பழங்களும் இனிப்பு விசுக்கோத்து வகைகளும் மேசையை அலங்கரித்தன.

போகிற வாக்கில் கண்ணம்மா பூங்கொடியின் பக்கம் திரும்பி '' தினமும் இங்கேயே இருக்கப் போறியா?'' என்றாள்

பூங்கொடி புருவத்தை நிமிர்த்தி, தனது அழகான வட்ட வடிவான கண்களைச் சுழற்றயப்படி ஒருவித சந்தேகத்துடன் கண்ணமாவை நோக்கினாள். இது எப்படி சாத்தியமாகும் என்பது அதன் பொருள் என்பதைப் புரிந்து கொண்ட கண்ணம்மா, ''நீ இங்கே இருக்கணு மென்னா ஒரே ஒரு வழிதான் இருக்கு... ராமுவை நீ கட்டிக்கணும்'' என்று கூடியபடி கொடுப்புக் குள் சிரித்தாள்.

''கட்டுவியா? ''

பூங்கொடி புரியாமல் விழித்தாள்.

''அப்படின்னா?''

''கலியாணமடி... கலியாணம் கட்டிக்குவியா?''

பூங்கொடிக்கு வெட்கம் ஏற்பட்டது. கலியாணம் என்றால் என்னவென்று புரியாவிட்டாலும், அது ஒரு வெட்கப்பட வேண்டிய விடயம் என்று புரிந்தது.

ராமுவின் காதிலும் விழுந்திருக்க வேண்டும். அவனும் ஒரு வித வெட்கத்தில் பார்வையை மறுபுறம் திருப்பியபடி தனக்குள் சிரித்தான்.

அன்று பிறந்த நாள் விழா நடந்து கொண்டிருக்கும்போதே மலர் அக்கா அவளைத் தேடிக்கொண்டு வந்துவிட்டாள். அக்காவுடன் வீட்டுக்கு சென்ற பின்னரும் கண்ணம்மா கூறிய வார்த்தைகள் பூங்கொடி யின் மனதை அரித்தது. அத்துடன் மாலையில் அவனது கைகளைப் பற்றியப்படி ஆற்றைக் கடந்ததும் இன்பத்தை ஏற்படுத்திய வண்ண மிருந்தது.

மறு நாள் மாலை மப்பும் மந்தாரமுமாக இருந்ததால் விளையாடுவதற்கு வேறு எங்கும் போகவேண்டாம் என ஜெயராமின் அம்மா கூறியதால், வீட்டிற்கு அருகிலேயே விளையாடினார்கள்.

''இன்னிக்கு மண்ணில் சோறு காய்ச்சி விளையாடுவோம் '' என் ராமு கூறியதும் பூங்கொடியும் சம்மதித்தாள். அடுப்புக்கல், சிரட்டை, மண் குறுணிக்கல், இலை வகை என சில பொருட்களை இருவரும் சேகரித்து, விறகுபோல் சிறு சுள்ளிகளை கல்லடுப்பில் வைத்து விளையாட ஆரம்பித்தனர்.

'' பசிக்குது சோற்றைப் போடு பூங்கொடி'' என்ற படி அவள் எதிரில் வந்து அமர்ந்துக்கொண்டு,'' நீதான் அம்மாவாம்.... நான் தான் அப்பாவாம் என்று சொன்ன ஜெயராமை இடைமறித்தாள் பூங்கொடி.

''இல்ல ராமு ... நீ தான் மாப்பிள்ளையாம். நான் தான் பொண்டாட்டியாம்'' என்று புருவத்தை நெளித்து கண்களைச் சழற்றிவிட்ட படி அவள் கூறவே ராமுவின் முகத்தில் செம்மை படர்ந்தது.

'' நான் வளர்ந்த பிறகு நீ என்னை கட்டிக்குவியா ராமு?''

தான் கேட்பது பற்றி முழுமையாக புரியாவிட்டாலும், ஒருவித ஏக்கத்துடனும், எதிர்பார்ப்புடனும் கேட்டாள் பூங்கொடி...''

(21 ஆம் பக்கம் பார்க்க)




## அன்பு மாணவர்களே, பெற்றோர்களே!

2008ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம்-04 இல் கற்கும்) இளம் சிறார்களை பாடத்திட்ட ஒழுங்கில் இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் எமது அயராத முயற்சியாலும் பிரபல இளம் தலைமுறை ஆசிரியர்களான த.திலீப்குமார் - கொழும்பு, சண்.சுதர்சன் -கண்டி, தி.சுரேஸ்குமார்-கம்பளை ஆகியோரின் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்ட படிமுறை மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் இப்பகுதியில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் வெளிவரும். இதனை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்தால் பரீட்சையில் வெற்றி அடைவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் இயல்பாகவே புரியும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அந்த வகையில் இரண்டாவது வினாத்தாள் இன்று வெளிவருகின்றது.

**இவ்வெளியீட்டை ஒட்டி, எப்பத்திரிகையிலும் இல்லாத ஒரு விசேட சேவையை எமது கல்விச் சுடர் இன்று முதல் தடவையாக ஆரம்பித்திருக்கின்றது.**

அதாவது, இப்பகுதியில் பிரசுரமாகும் படிமுறைப்பரீட்சை வினாத்தாளுக்கு அன்றையதினமோ அல்லது அடுத்துவரும் நாட்களில் மாணவர்கள் சுயமாக விடையளித்து இவ்வினாத்தாளை எமக்கு தொடர்ந்துவரும் புதன்கிழமைக்குமுன் அல்லது புதன்கிழமை கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தால், அவை எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவினால் திருத்தி , புள்ளியிடப்பட்டு மறுநாளே தங்களுக்குத் தபாலிடப்படும். நீங்கள் இவ்வினாத்தாளை அனுப்பும் போது அதனுடன் தங்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் அவசியமாகும். பாடசாலைகள், கல்வி நிலையங்கள் அதிக வினாத்தாள்களை அனுப்பவேண்டி இருப்பின், அதனை அனுப்பும் போது அதன் நிறைக்கேற்ப பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடித உறை ஒன்றையும் வைத்து அனுப்புதல் அவசியமாகும். அவ்வாறு அனுப்பிவைக்கப்படாத வினாத்தாள்கள் திருத்தி அனுப்பிவைக்கப்படமாட்டாது.

வினாத்தாளின் மேலே உள்ள சுயவிவரங்கள் யாவும் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**உங்கள் வினாத்தாள்களை அனுப்பவேண்டிய முறை:-**

கடித உறையின் வலதுபக்க மேல்மூலையில் Steping Exam -02 (படிமுறைப் பரீட்சை-02) எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

| | |
|---|---|
| ஆசிரியர் | Editor |
| கல்விச்சுடர், | Education Sudar, |
| 'சுடர் ஒளி', | Sudar Oli, |
| இல.85, | No.85, |
| ஜயந்தமல்லிமராச்சிமாவத்த, | Jayantha mallimarachi mawatha, |
| கொழும்பு-14. | Colombo - 14. |

**இது மட்டுமல்ல, இன்னும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்குடன்,**

*இப்பரீட்சையில் எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவால் திருத்தி புள்ளியிடப்பட்ட மாணவர்களில் தேசிய ரீதியில் முதல் 20 இடங்களை பெறும் மாணவர்களின் பெயர் விவரங்கள் புகைப்படங்களுடன் மறுகிழமை வெளிவரும் வார இதழில் பிரசுரிக்கப்படும். இதுமட்டுமன்றி, அடுத்த நிலையிலுள்ள சிறந்த 30 மாணவர்களின் பெயர்கள் பாடசாலையின் பெயர்களுடன் பிரசுரிக்கப்பபட்டு இப்பகுதியினூடாக பாராட்டி வாழ்த்தப்படும் என்பதையும் மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.*

### "எந்தமாதிரியும் இல்லாத முன்மாதிரியான கல்விச்சுடரின் புதிய படைப்பு"

**மாணவர்களே! பெற்றோர்களே! வழிகாட்டும் ஆசிரியர்களே! எம்முடன் இணைந்து இந்த அளப்பெரிய சேவையின் பயனை அனுபவிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.**

கல்விச்சுடர் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்க.

தொலைபேசி இலக்கங்கள்:
0112399669/0714273035/0714150300
மின்னஞ்சல்: newkalvisudar@yahoo.com.

இப்பகுதியில் வெளிவரும் வினாத்தாளுக்கான விடைகளுக்காக நீங்கள் அடுத்த வாரம் வரை காத்திருக்கத் தேவையில்லை. ஒவ்வொரு புதன்கிழமையும் எமது சுடர் ஒளி, உதயன் நாழிதள்களில் விடைகள் வெளிவரும். அத்துடன், அடுத்த வார வாரமலரிலும் வெளிவரும்.

- கல்விச்சுடர் ஆசிரியர்

சுடர் வாக்கு:- "தலைகுனிந்து படிப்பதெல்லாம் தலைநிமிர்ந்து வாழ்வதற்கே"

## படிமுறைப் பரீட்சை-02

**நேரம்: 1 மணி**

மாணவர் பெயர் : ..............................

முகவரி : ..............................

கற்கும் பாடசாலை/ : ..............................

கல்வி நிலையம் ..............................

தொலைபேசி இலக்கம் : ..............................

**01. பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.**

1) நிரை ..............................
2) கானகம் ..............................
3) பூமி ..............................
4) கலம் ..............................
5) பறவை ..............................


**02. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1) புத்தகப்பை ..............................
2) ஆடிப்பாடி ..............................
3) மூவுலகம் ..............................
4) கட்டியணைத்து ..............................
5) கதிரொளி ..............................

**03. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிந்து எழுதுக.**

1) எமது நாடு இயற்கை ...................... நிறைந்த நாடு.
( வலம் , வளம் )
2) நாங்கள் மைதானத்தில் ............யாக நின்றோம்.
( நிரை, நிறை )
3) பாடசாலையில் நேற்று ................ நிகழ்ச்சி நடைபெற்றது.
( கலை, களை )
4) எனது ஆடையில் .................... படிந்துள்ளது.
( கரை, கறை )
5) அவன் .................... உச்சியில் நின்றான்.
( மலை, மழை )

**04. பின்வரும் படத்தைப் பார்த்து கருத்துள்ள பொருத்தமான நான்கு வாக்கியங்களை எழுதுக.**




1) ..............................
..............................
2) ..............................
..............................
3) ..............................
..............................
4) ..............................
..............................

**05. பின்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் எது?
..............................
2) மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்?
..............................
3) இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற் பூங்கா எது?
..............................
4) ரைட் சகோதரர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?
..............................
5) மோனலிசா ஓவியத்தை வரைந்தவர் யார்?
..............................


**06. பின்வருவனவற்றிற்கு மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) உருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியின் பின்னம் யாது?

1. 2/6  2. 2/3
3. 6/8  4. 2/7

ஓர் ஆணும் பெண்ணும் சிரித்துப் பேசுகிறார்கள் என்றால் அவர்களுக்குள் காதல் ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தமல்ல என்கிறார் 38வயதாகும் சுரேஷ்.

என்னடா இது...ஆரம்பமே



# கணவனுக்கு கொடுங்கள் இடைவெளி

இப்படியா என யோசிக்கிறீர்களா...? இது ஓர் உண்மைக் கதை.

இதோ, தனது சோகத்தை வெளிப் படையாகவே நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார் சுரேஷ்.

''நான் மற்றப் பெண்களுடன் பழகுவதை என் மனைவி சந்தேகப் படுகிறாள். என்னைக் கட்டுப் படுத்தப் பார்க்கிறாள். அவளுடைய அநாகரிகமான போக்கால் எப்போதும் மன இறுக் கத்துடன் இருக்க வேண்டியுள்ளது. இனிமேலும் இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. விவாகரத்து செய்துவிட முடிவெடுத்திருக்கிறேன்''.

அடடா, இது நம்ம சமாச்சாரமாச்சே... என உங்களில் யாருக்காவது தோன்றினால் மேலே தொடருங்கள்!

## பெண்களின் சந்தேக மனப்பான்மை

பெரும்பாலான பெண்கள், தங்கள் கணவன் வேறு பெண்களுடன் சிரித்துப் பேசுவது மற்றும் நட்பு வைத்திருப்பது தமது எதிர்கால தாம்பத்திய வாழ்க்கையைப் பாதித்துவிடும் என்றே கருதுகிறார்கள்.

எமது கலாசாரத்தில் திருமணம் என்பதைப் பெண்கள் அதிகாரம் மற்றும் பிணைப்பு என்ற வடிவிலேயே புரிந்துகொள்கிறார்கள். ஒரு சமூகப் பாதுகாப்பாக திருமணத்தை நம்பு கிறார்கள். இத்துடன் கணவனின் ஒவ்வொரு செயலையும் கண்காணிப்பது மற்றும் அவனை அதிகார பூர்வமாக ஒரு திசையில் செலுத்துவது ஆகியவற்றை மகிழ்ச்சியான மற்றும் வெற்றிகரமான தாம் பத்தியத்துக்கு அவசியம் என்று நினைக்கிறார்கள். இந்த நிலையில் கணவனின் எந்தவொரு பெண் தோழியும் அவளுடைய சந்தேகத்துக்கான காரணமாக முடியும். ஆனால், இத்தகைய மனப்பாங்குக்கு ஆணி வேர் எது? இந்தச் சிந்தனையில் மாற்றம் கொண்டுவர வேண்டியது அவசியமா?

பிரபல இந்திய உளவியலாளர் டாக்டர் அருண்ஸ்ரீவாத்சவ் கூறுவதாவது: ''பெண்கள் தங்களின் குடும்பத்தில் நிலவும் மகிழ்ச்சியற்ற சூழ்நிலை மற்றும் நிலைமையை சீராக்குதல் போன்ற விஷயங்களில் சிறப்புக் கவனம் செலுத்துகிறார்கள். பெற்றோர் எப்போதும் சண்டை போட்டுக் கொண்டே இருக்கும் குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்த பெண்கள் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகி இருப்பார்கள். பிறந்தவீட்டில் கொடுமை களுக்கு மத்தியில் வளர்ந்த பெண்கள், தங்களின் உயிரோட்டமான மற்றும் இறந்து போன ஆசைகள் மற்றும் உணர்ச்சிகளை புகுந்த வீட்டில் நிறைவேற்றிக்கொள்ள விரும்புகிறார்கள். அவர்கள் மனதில் அர்த்த மற்ற பயம், தீய எண்ணங்கள், பொறாமை போன்ற எதிர்மறைச் சிந்தனைகள் நிறைந்

பெண்

திருக்கும். அவர்களின் இந்த வித்தி யாசமான சிந்தனைப் போக்கிற்கு கணவனும் விதிவிலக்காக இருப்பதில்லை. இந்த நிலையில் கணவன் வேறெந்த பெண்ணுட னாவது சிரித்துப் பேசினால் பிரச்சினையை உண்டாக்க அதுவே போதுமானது'' என்றார் டாக்டர் ஸ்ரீவாத்சவ்.

(31ஆம் பக்கம் பார்க்க)

# ஒட்டவே ஒட்டாது



'நொன்-ஸ்டிக்' பொருள்களை ஒன்றுக்குள் ஒன்றாகப் போட்டு அடுக்கக்கூடாது. இதனால், ஏற்படக்கூடும் உராய்வால் 'நொன்-ஸ்டிக் கோட்டிங்'கில் கீறல் விழவும், தேயவும் சாத்தியம் அதிகம்.

* 'நொன்-ஸ்டிக்' பாத்திரங்கள் சூடாக இருக்கும்போது குளிர்ந்த நீரால் கழுவுவது தவறு. ஆறிய பிறகே கழுவவேண்டும்.
* 'நொன்-ஸ்டிக்' பாத்திரத்தை வெறுமனே அடுப்பில் வைத்து அதிகம் சூடாக்கி னால் அதன் 'கோட்டிங்'கில் வெடிப்புகள் வர வாய்ப்பு உள்ளது. கூடியவரை அதனுள் சமைக்கவேண்டிய பொருள்களைப் போடும்வரை, அடுப்புகூட்டைக் குறைத்துவைக்கவும்.
* 'நொன்-ஸ்டிக்' தோசைக்கல், தாச்சி போன்றவற்றின் ஓரங்கள் விரைவில் சொரசொரத்து விடும். இதற்கு முக்கிய காரணம், நடுப்பகுதியைச் சுத்தப் படுத்துவதில் காட்டும் அக்கறையை ஓரங்களுக்குக் காட்டாதது தான்.
* எண்ணெய்ப் பிசுக்கு போன்றவற்றை முதலில் மிருதுவான துணி அல்லது பழைய காகிதம் கொண்டு நன்கு சுத்தப்படுத்திய பிறகு (குறிப்பாக விளிம்புப் பகுதி) பாத்திரத்தைக் கழுவவும்.
* 'ஸ்காட்ச்-பிரைட்', தும்பு போன்றவற்றை மறந்தும் உபயோகப்படுத்த வேண் டாம். மிருதுவான ஸ்பாஞ்ச் அல்லது நைலோன் ஸ்க்ரப்பரையே உபயோகிக்கவும்.
* உலோகக் கரண்டிகளைத் தவிர்த்து மரக்கரண்டியை உபயோகப்படுத்தவும். உலோகக் கரண்டிகள் கீறல் ஏற்படுத்தினால் பிறகு 'நொன்-ஸ்டிக்' தன்மை குறையும். மேலும் கீறல்களிலிருந்து துரு ஏறவும் வாய்ப்பு உள்ளது.
* 'நொன்-ஸ்டிக்' பாத்திரத்தை சிறிது சோப் தண்ணீரில ஊறவைத்த பிறகு கழுவினால் நீண்டநாட்கள் புதிதுபோலவே இருக்கும்.

## சிப்ஸ் சிப்ஸ் சிப்ஸ் சிப்ஸ் சிப்ஸ் சிப்ஸ் சிப்ஸ்

* வேகவைத்த உருளைக் கிழங்கை தோல் உரிக்காமல் அப்படியே சாப்பிட்டால் வாயுத் தொல்லை இருக்காது.
* சமையலில் கடுகு சேர்ப்பது மிகவும் நல்லது. கடுகு சிறந்த கிருமிநாசனியும் கூட.
* பூண்டு உரிக்கும்போது வெறும்சட்டியில் போட்டு வறுத்த பிறகு உரிக்கவும். அப்போது சீக்கிரமே பூண்டு உரிந்துவிடும்.
* தயிர்ச்சாதம் செய்யும்போது ஒரு தேக்கரண்டி வெண்ணெய் போட்டு செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்.
* சப்பாத்தி மா பிசையும்போது மிகவும் இலகுவாகப் பிசைய வேண்டும். அதில் தயிர் அல்லது பால்விட்டுப் பிசைந்தால் சுவையாக இருக்கும்.

**மைக்ரோவேவ் சமையல் செய்யும்போது கவனிக்கவேண்டியவை**

* உலோகப் பாத்திரங்களையோ அல்லது தங்கமுலாம் அல்லது வெள்ளிமுலாம் பூசப்பட்ட பாத்திரங்களையோ எதிர்பாராதவிதமாக மைக்ரோவேவ் சமையலுக்குப் பயன்படுத்தி அவற்றிலிருந்து தீப்பொறி வரத் தொடங்கியது என்றால் உடனே மின் இணைப்பைத் துண்டிக்கவும்.
* ஓவனின் கதவைச் சரியாக மூடிவைத்துவிட்டுப் பிறகு இயக்கவேண்டும்.
* மைக்ரோ ஓவனின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் ஓர் ஈரத்துணியால் துடைத்து சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.
* மைக்ரோ வேவ் பாதுகாப்புப் பாத்திரங்களையே சமையலுக்குப் பயன்படுத்தவேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

## ஸ்பிரிங் ரோல்



### தேவையான பொருட்கள்

**மேல் மாவுக்கு:**

கோதுமை மா - அரை கப்
சோள மா - அரை கப்
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

**பூரணத்துக்கு:**

வேகவைத்த நூடில்ஸ் - ஒரு கப்
பொடியாக நறுக்கிய காய்கறிகள் (கரட், பீன்ஸ், கோஸ்) - அரை கப்
வெங்காயம் - 1, முளைகட்டிய பயறு - கால் கப்
பச்சை மிளகாய் சோஸ் - ஒரு மேசைக்கரண்டி
மிளகுத்தூள் - ஒரு தேக்கரண்டி
அஜினமோட்டோ - அரை தேக்கரண்டி
சோயா சோஸ் - ஒரு தேக்கரண்டி
நசுக்கிய பூண்டு - 2 தேக்கரண்டி
பொடியாக நறுக்கிய வெங்காயத்தாள் - ஒரு கைப்பிடி
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

### செய்முறை:

கோதுமை மா, சோள மா, எண்ணெய், உப்பு சேர்த்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றி கெட்டியாகப் பிசைந்து கொள்ளுங்கள். தாச்சியில் எண்ணெய் ஊற்றி, காய்ந்ததும் நசுக்கிய பூண்டு, காய்கறிகள், வெங்காயத்தைச் சேர்த்து அதிக தீயில் வதக்குங்கள். 2 நிமிடம் வதங்கியதும் அஜின மோட்டோ, சோயா சோஸ், பச்சைமிளகாய் சாஸ், மிளகுத்தூள், முளைகட்டிய பயறு, நூடில்ஸ், தேவையான உப்பு சேர்த்து மேலும் 5 நிமிடம் வதக்கி, கடைசியில் வெங்காயத்தாள் சேர்த்து இறக்குங்கள். மாவிலிருந்து சிறிதளவு எடுத்து மெல்லியதாக சப்பாத்தி தேய்த்து பூரணத்தை ஒருபக்கமாக நீளவாக்கில் வைத்து ஒருமடிப்பு சுற்றுங்கள். தண்ணீரைத் தொட்டுத் தடவி இரண்டு ஓரங்களையும் மடியுங்கள். மேலும் ஒருமுறை சுற்றி நன்கு ஒட்டுங்கள். இதேபோல் 5 செய்துவைத்து, எண்ணெயில் பொரித்து எடுங்கள். சாப்பிடும்போது நடுவாக்கில் வெட்டி இதை சோஸுடன் பரிமாறுங்கள்.

# பாரதிராஜாவின் பாதையில் மனோஜ்

எத்தனையோ மிகச்சிறந்த படங்களையும், பல வெற்றிப் படங்களையும் கொடுத்த பாரதிராஜாவிடம் பல படங்களுக்கு உதவி இயக்குநராக பணியாற்றிய மனோஜ் கே.பாரதி தற்போது ஒரு படத்தை தனாக இயக்குவதன் மூலம் தன் அப்பாவின் பாதையில் அடியெடுத்து வைக்கிறார். இது குறித்து அவர் மனோஜ்:- ''நான் இயக்கவிருக்கும் படத்தில் அப்பாவின் சாயல் இருக்காது. அப்படி இருந்தால் அவரது படத்தைப் பார்க்கும் உணர்வு ஏற்படும். அதைத் தவிர்ப்பதற்காக முழுக்க முழுக்க என் பாணியில், என்னை தனித்துவம் மிக்க இயக்குநராக மக்கள் மத்தியில் பதியவைக்கும்படி இந்தப் படத்தை இயக்க இருக்கிறேன்'' - என்றார்.



நமீதா

# நீதிமன்றச் சிக்கலில் அழகிய தமிழ் மகன்

'காய்த்த மரம்தான் கல்லடி படும், என்பார்கள்', அதுபோல முன்னணி நடிகர்கள் நடிக்கும் படத்தின் கதையை சொந்தம் கொண்டாடி வழக்குத் தொடருவது இப்போது வழக்கமாகிவிட்டது. 'அழகிய தமிழ்மகன்' படத்தின் கதை எமது படநிறுவனத்துக்கு சொந்தமானது பட இயக்குநர் ஒருவர் சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். 'அழகிய தமிழ்மகன்' படத்தைத் தயாரிப்பதற்கு முதலில் சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. இதனால் படப்பிடிப்பு தாமதமானது. என ஒருவாறு ஜூன் 7ஆம் திகதி இடைக்காலத் தடை நீக்கப்பட்டது. இந்த தடை நீக்கத்தை எதிர்த்து மீண்டும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

# ரஜினி படத்தில் விக்ரம்

ரஜினி நடித்து பெரிய வெற்றியை பெற்றுக் கொடுத்த படம் 'மூன்று முகம்'. ரஜினி மூன்று வேடத்தில் நடித்திருந்த இந்தப் படத்தை ஜகன்நாதன் இயக்கியிந்தார். சத்யா மூவிஸ் சார்பாக படத்தை தயாரித்தவர் ஆர்.எம்.வீரப்பன். சத்யா மூவிஸிடமிருந்து 'மூன்று முகம்' படத்தின் மறுதயாரிப்பு உரிமையை தயாரிப்பாளர் கதிரேசன் வாங்கியுள்ளார். இப்படத்தில் ரஜினி ஏற்று நடத்த பொலிஸ் அதிகாரி அலெக்ஸ் பாண்டியன் வேடம் எல்லோர் மத்தியிலும் பரபரப்பாகப் பேசப்பட்டது. இந்த வேடத்திற்காகவே 'மூன்று முகம்' படம் மறுதயாரிப்பு செய்யப்படவிருக்கிறது. இந்த அலேக்ஸ் பாண்டியன் வேடத்தில் விஷால் நடிப்பதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார். தற்போது அவூர் ராஜசேகரின் 'சத்யம்' படத்தில் பொலிஸ் அதிகாரியாக நடித்து வருவதால் 'மூன்று முகம்' படத்தில் நடிக்க ஆர்வம் காட்டவில்லை. இதையடுத்து, 'மூன்று முகம்' படத்தில் நடிக்க விரும்பம் தெரிவித்துள்ளார்.

# சங்கீதாவின் விளக்கம்

சிம்பு நடிக்கும் 'காளை' படத்தில் அவருக்கு அத்தையாக சங்கீதா நடித்துவருகிறார். இந்த வேடத்தில் நடிக்க சினேகா மறுத்திருந்தார். இது குறித்து அவர் இவ்வாறு கூறினார்:- ''இந்தப் படத்தில் என் வேடத்தில் நடிக்க யார் யார் மறுத்தார்கள் என்பதெல்லாம் எனக்குத்தெரியாது. எனக்கு பிடித்திருக்கிறது அதனால் நடிக்கிறேன். குறிப்பிட்ட வேடங்களில் நடிப்பது பற்றி முடிவெடுப்பது அவர்களது தனிப்பட்ட விருப்பம். சர்ச்சைக்குரிய வேடங்களை தேடிப்பிடித்து நடிப்பதாக என்மீது குற்றம் சொல்வதும் தவறு. நானாக எதையும் தேடிப்போவதில்லை. வருவைதை, பிடித்திருந்தால் மறுப்பதும் இல்லை'' - என்றார் சங்கீதா.



'மலைக்கோட்டை'
விஷால் - பிரியாமணி

# விஷாலின்

'மலைக்கோட்டை' படத்தில் முழுக்க முழுக்க கொமடியில் கல
பட்டு வந்த விஷால் 'மலைக்கோட்டை' பட்த்தில் முதன் முத
விஷாலுக்கு ஜோடியாக நடித்திருப்பவர் ப்ரியா மணி. இவர் பட
குறித்து விஷால் கூறுகையில்:- ''இப்படத்தில் கொமடியும் இ
கொடுத்திருக்கிறார் பூபதி பாண்டியன். அவரது படத்தில் பொ
இருக்கிறது. அதேபோல எனது முதல் படங்களை விட இப்ப
திற்காக எனது உடம்பை வருத்தி மிகவும் ஈடுபாட்டுடன் நடி
தில்தான் திருப்திகரமாக நடித்திருக்கிறேன் என நான் நினை
பார்க்கலாம். இந்த மாதம் 21ஆம் திகதி படம் திரைக்கு வரு
மிதமிஞ்சிய கிளாமர் படத்துக்கு புத்துயிர் கொடுத்துள்ளதா
இதுவே முதல் முறையாம். 'மலைக்கோட்டை' 'காமக்' கோ



# ஒரே

இலங்கைத் தமிழ்த் திரைப்
திரம் படைக்கப்போகும் பி
படமாக தயாராகி வருகின்ற
இத்திரைப்படம் இன ஒற்று
துவதுடன், இனக்கலவர
களையும் சித்திரிக்கும் தி
ரிக்கப்படுகின்றது.இதில்
நாயகியாக முரளி - சுல
றனர். இப்படத்திற்கான
கதை, வசனம், இயக்க
ஏ.ஆர்.எம்.றஸீம். இத்
வெகுவிரைவில் எதிர்



'மச்சக்காரன்'
ஜீவன் - காம்னா

# ன் திறமை

...ில் கலக்கியிருக்கிறாராம் விஷால். இதுவரை அதிரடி நாயகனாக மட்டுமே அறியப் ...ன் முதலாக கொமடியில் காட்சிகளில் வந்து கலக்கியிருக்கிறாராம். இப்படத்தில் ...வா படம் முழுக்க கிளாமராகவே வந்து போகிறாராம். மலைக்கோட்டை படம் ...டியும் இருக்கிறது, அதிரடியும் இருக்கிறது. இரண்டிற்கும் சமஉரிமை ...ல் பொதுவாக கொமடி சிறப்பாக இருக்கும். இப் படத்திலும் அது ... இப்படத்தில் அதிரடிகள் சற்று கூடுதலாகவே இருக்கின்றது. இப்படத் ...ன் நடித்திருக்கிறேன். முன்னர் வந்த தாமிரபரணிக்குப் பிறகு இப்படத் ...நினைக்கின்றேன். இந்தப்படத்தில் உண்மையான விஷாலை நீங்கள் ...த வருகிறது". - என்றார் விஷால். விஷாலின் கொமடி, பிரியா மணியின் ...ளதாம். பிரியா இவ்வளவு கவர்ச்சி காட்டி நடித்திருப்பது தமிழில் ...க்' கோட்டையாக இல்லாமல் இருந்தால் சரி!

# ... நாளில்...

...திரைப்பட வரலாற்றில் சரித் ...கும் பிரமாண்டமான திரைப் ...ருகின்றது 'ஒரே நாளில்...' ...ா ஒற்றுமையை வலியுறுத் ...கலவரத்தின் கொடுமை ...கும் திரைப்படமாக தயா ....இதில் அறிமுக நாயகன், ...ி - சுலக்ஷனா நடிக்கின் ...ிற்கான் கதை, திரைக் ...இயக்கம், தயாரிப்பு .... இத்திரைப்படத்தை ...ல் எதிர்பாருங்கள்...





அசின்

பூமிகா

## சிரிக்க சிந்திக்க சிப்ஸ்



### ரஷ்ய கதை

சமையல் அறைக்கு வெளியே இரண்டு நாய்கள் படுத்துக் கிடந்தன. சமையல்காரன் கறிக்காக ஓர் ஆட்டைக் கொன்று, குடலை வெளியே எறிந்தான். நாய்கள் உடனே குடலைத் தின்றுவிட்டு, ''சமையல்காரன் கெட்டிக்காரன். அருமையாகச் சமைக்கிறான்'' என்றன.

மறுநாள் முட்டைக்கோசையும் வெங்காயத்தையும் உரித்து தோலை வெளியே எறிந்தான். நாய்கள் அவற்றின் மீது பாய்ந்தன. முகர்ந்து பார்த்துவிட்டு, ''சே! நம் சமையற்காரன் கெட்டு, உதவாக்கரையாகப் போய்விட்டான்!'' என்று பேசிக்கொண்டன.




கோடிகளிலும் பஞ்சு மெத்தைகளிலும் புரண்ட நடிகர் சஞ்சய் தத் இப்போது இருக்கும் சிறை அறையின் பரப்பளவு 90 சதுர அடிகள். இதற்குள் 8 கைதிகளில் ஒருவராக இருக்கிறார் சஞ்சய்தத். சஞ்சய் தத்துக்குச் சிறப்புச் சலுகையாக அவர் விரும்பும் சோப், ஷாம்பு, டூத் பேஸ்ட் ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதியுண்டு. ஆனால், உடை மட்டும் கைதிகள் சீருடைதான். புகைபிடிக்காமல் இருக்கமுடியாது என்பதால், தினமும் 10பைக்கெட் மால்பரோ சிகரெட் பிடிக்க அனுமதி.

சலுகைகளால் சஞ்சய்தத் கொஞ்சம் ஆசுவாசமாகத்தான் இருக்கிறார். ஆனால், அவரை நம்பி சினிமாவில் முதலீடு செய்துள்ள தயாரிப்பாளர்கள்தான் பாவம்; தவிக்கிறார்கள்.

## வாரிசு மழை



பாட்டுப்பாடுவதில் எப்படியோ அப்படித்தான் குழந்தை பெற்றுக்கொள்வதிலும் பிரிட்னி. பொப் அல்பங்களைப் போல் இப்போது வரிசையாக குழந்தைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறார். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் முதல் குழந்தையைப் பெற்றார் பிரிட்னி. அது தத்தித் தத்தி நடக்கும் முன் அடுத்த குழந்தை பிறந்தது.

இப்போது மூன்றாவது குழந்தையை வயிற்றில் சுமந்துகொண்டு இருக்கிறாராம். இந்தக் குழந்தைக்கு அப்பா யார் என்பதுதான் இப்போது பெரிய விவாதமாகி இருக்கிறது. தனது கணவரை விட்டு பிரிட்னி ஏற்கனவே பிரிந்து விட்டதால் அவரது நண்பர் பாமியான் ஷிப்பான்தான் அப்பா என்கிறது இன்னொரு தரப்பு. உண்மை பிரிட்னிக்கே வெளிச்சம்.

## காது கொடுத்துக் கேளுங்கள்




குழந்தைகள் தங்கள் எண்ணத்தை வார்த்தைகள், சைகைகள் மூலமாகவும் நடத்தைகள் மூலமாகவும் வெளிப்படுத்தும் திறன்கொண்டவர்கள். அவர்கள் பேசும்போது நாம் அவர்கள் பேசுவதற்குத் தடைபோடாமல் கூர்ந்து கவனிக்கவேண்டும். அவர்கள் பேசுவதிலிருந்து நடந்துகொள்ளும் முறையிலிருந்து அவர்கள் என்ன சொல்ல வருகின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

உங்கள் குழந்தை உங்களிடம் அதிகம் பேசவில்லை என்றால், நீங்கள் அதன் பேச்சை அவ்வளவாகக் கேட்பதில்லை என்று அர்த்தம். இல்லையேல் அதற்கு பேசவேண் டும் என்று தோன்றும் போதெல்லாம் நீங்கள் அதன் அருகில் இருப்பதில்லை என்று அர்த்தம்.

குழந்தைகளின் பாதுகாப்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்தவேண்டும். குழந்தைகளுக்குச் சிரமம் ஏற்படும்போதெல்லாம் அந்தச் சிரமத்திலிருந்து குழந்தை மீளும் வரை அதற்கு பாதுகாப்பாய் அனுசரணையாய் இருக்கவேண்டியது பெற்றோரின் கடமை. எனவே, குழந்தை எதைச் சொன்னாலும் முதலில் காதுகொடுத்துக் கேளுங்கள். குழந்தைகள் பெரிய தவறு செய்ய நேர்ந்தால்கூட, குழந்தையைத் திட்டாமல் இதமாய் எடுத்துச் சொல்லி, தவறைத் திருத்துங்கள்.

## அன்பை அதிகரிக்கும் மசாஜ்

திருமணமான சில தினங்களுக்குள்ளேயே தம்பதிகளுக்கு அலுத்துப் போய் விடும். 'மனைவியைத் தொடாமல் இருக்கவே முடியாது' என்று சொன்ன கணவர்கள் கூட, மனைவியைப் பார்த்தவுடன் எரிந்து விழும்



அளவுக்கு மாறிப்போகிறார்கள்.

ஏன் இந்த நிலை? திருமண உறவு அதற்குள் அலுத்துப் போய் விடுமா? இத்தகைய கேள்விகளைச் சுமந்துகொண்டு பாலியல் சம்பந்தமான மனோதத்துவ நிபுணர்களைத் தேடிப்போகிறார்கள் விவரம் அறிந்த சிலர். மற்றவர்களோ இந்த நெருப்பை அப்படியே வளரவிட்டு, கடைசியில் எலியும் பூனையுமாக சண்டைபோட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

எதையும் புதுவிதமாக முயற்சிக்கும்போதுதான் அதில் ஆர்வமும் உற்சாகமும் நீடிக்கும். ஒவ்வொரு நாளும் புதி அனுபவத்தைப் பெறுவதுதான் மனதுக்குக் கிளர்ச்சியூட்டும்.

புதுமணத் தம்பதியின் உறவை வலிமையாக்கவும் செக்ஸ் வாழ்க்கையைத் துடிப்புள்ளதாக்கவும் மசாஜ் பெரிதும் பயன்படுகிறது. மசாஜ் மூலம் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் தொடுவது மருத்துவக் கண்ணோட்டத்தில் நல்ல பலன்களைத் தரக்கூடியது என்கிறார்கள் மனோ தத்துவ நிபுணர்கள்.

மசாஜ் செய்வதால் இரத்த ஓட்டம் சீராவதுடன், உடம்புக்கும் நல்ல ஓய்வு கிடைக்கிறது. அத்துடன், நரம்புமண்டலம் மற்றும் உணர்வுகளைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்கவும் மசாஜ் உதவும். நோய் எதிர்ப்பு சக்தியும் கூடும்.

மசாஜுக்கு என்ன தேவை?

சந்தன எண்ணெய், ஒலிவ் எண்ணெய், பாதாம் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் ஆகியவை மசாஜ் செய்வதற்கு உகந்த எண்ணெய்களாகும். மசாஜ் செய்ய அமைதியான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அறை மிதமான வெப்பத்தில் இருக்கவேண்டும். மனதுக்கு இதமான உணர்வை ஏற்படுத்த, அறையின் மூலைகளில் வாசனைத் திரவத்தை ஸ்பிரே செய்யவேண்டும். தலையணை மற்றும் மெத்தைக்கும் கூட ஸ்ப்ரே செய்யலாம்.

தூங்கச் செல்வதற்கு முன்பாக மசாஜ் நல்ல பலன் தரும். நாள் முழுவதும் உழைத்த களைப்பு மற்றும் மன உளைச்சலைப் போக்கி, ஆழ்ந்த உறக்கம் கிடைக்க இரவுநேர மசாஜ் உறுதுணையாக இருக்கும். மசாஜின்போது மிருதுவான, தளர்வான உள்ளாடைகளை அணியலாம். மாறாகத் துவாய் மூலம் உடம்பைப் போர்த்திக்கொள்ளவும் செய்யலாம்.

மசாஜ் செய்வதன் மூலம் உடம்பில் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். இச்சமயத்தில் முத்தமிடுவது, தொட்டணைப்பது, மசாஜ் செய்த பிறகு ஒன்றாக, 'ஸபா பாத்' எடுப்பது ஆகியவை உறவுகளில் கதகதப்பை உண்டாக்கும்.



''ஏங்க! உங்க நண்பருக்கு பார்த்திருக்கிற பெண் நல்லாய் இல்லை என்று நீங்க சொல்லக்கூடாதா''

''ஊஹூம் சொல்லமாட்டேன். அவன் மட்டும் எனக்கு சொன்னானா?''



''என் மனைவி ஏழு உலக அதிசயங்களில் ஒன்று!''

''தாஜ்மஹாலா?''

''இல்ல சீனப் பெருஞ்சுவர்''



''நான் தான் ரமேஷ் பேசுகிறேன். நீங்க யார் பேசுறது...? நான் பேசுறது கேட்குதா...?''

''நான் கலா பேசுறேன். நீங்க பேசுறது ஒண்ணும் கேட்கலங்க...!''



''டாக்டர்! பக்கத்திலே யார் இருந்தாலும் தெரியமாட்டேங்குது''.

''சரி..சரி! நேர்ஸ் இடுப்பிலிருந்து கையை எடுங்க''.



''அந்த அழகான பெண் தினமும் ரோஜாப்பூ கொடுத்ததை நினைச்சு சந்தோஷப் பட்டது தப்பாப் போச்சு!''

''ஏன்?''

''அவ பூ வியாபாரம் செய்றவளாம்! முதலாம் திகதி வந்து 'எடுங்க... முன்னூறு ரூபாயை' என்று வசூல் பண்ணிட்டா!''




''நீதிபதியை பட்டிமன்ற நடுவரா ஏற்பாடு செய்தது தப்பாப்போச்சு...''

''ஏன்...என்னாச்சு...?''

''அடுத்த மாதம் தீர்ப்புச் சொல்லப்படும் என்று தள்ளிவைச்சிட்டுப் போயிட்டார்...!''

2) கீழே தரப்பட்ட தளவடிவங்களில் அதிகளவு சமச்சீர் அச்சுக்களைக் கொண்டது எது?




1. 2. 3. 4.

3) கண்ணன் 65cm நீளமான கம்பித்துண்டை வைத்திருக்கிறான். வசீம் 58cm நீளமான கம்பித்துண்டை வைத்திருக்கிறான். இருவரிடமும் இருக்கும் கம்பித்துண்டுகளின் மொத்தநீளம் யாது?

1. 1m23cm 2. 113cm 3. 1m18cm 4. 127cm

4) கீழே தரப்பட்ட வடிவங்களில் செங்கோணம் அல்லாத உருவின் கீழ்க் கோடிடுக.



1. 2. 3. 4.

5) பாடசாலை ஒன்றில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை 867 ஆகும். அவர்களில் 439 பேர் ஆண்கள் எனில் பெண்கள் எத்தனை பேர்?

1. 422 2. 428 3. 432 4. 438

6) வரிசை ஒன்றில் 4 கதிரைகள் வீதம் 128 கதிரைகளை எத்தனை வரிசைகளில் அடுக்கமுடியும்?

1. 12 2. 32 3. 41 4. 132

7) ...X... தரப்பட்ட உரோமன் எண்குறியின் முன்பும் பின்பும் அமையும் உரோமன் எண்கள் முறையே

1. IX , XI 2. XI , LX 3. VIII , IX 4. XI , XV

8) தரப்பட்டுள்ள கடிகார முகம் காட்டும் நேரம் யாது?




1. 9 மணி 30 நிமிடம்.
2. 8 மணி 30 நிமிடம்.
3. 6 மணி 45 நிமிடம்.
4. 8 மணி 60 நிமிடம்.

9) வருடம் ஒன்றில் 31ஆம் திகதியில் முடிவடையும் மாதங்கள் எத்தனை?

1. 5 2. 6 3. 7 4. 9

10) 3kg40g ஐ கிராமில் தருக.


1. 340g 2. 3040g 3. 30040g 4. 3400g

07. பின்வரும் உருக்கோலங்களில் வித்தியாசமான உருவைத் தெரிவுசெய்க.


1) A B C D E




2) A B C D E



3) A B C D E




4) A B C D E



08. பின்வரும் உருக்களை அவதானித்து அவற்றின் பெயர்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதுக.



1) தமிழ் ......................
ஆங்கிலம் ......................



2) தமிழ் ......................
ஆங்கிலம் ......................



3) தமிழ் ......................
ஆங்கிலம் ......................



4) தமிழ் ......................
ஆங்கிலம் ......................

09. பின்வரும் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.

1) கதிரை ................................
2) ஆசிரியர் ................................

10. பின்வரும் ஆங்கிலச் சொற்களைத் தமிழில் எழுதுக.

3) Computer ................................
4) Flower ................................

11. தரப்பட்டுள்ள விலைப்பட்டியலின் உதவியுடன் சிட்டையைப் பூரணப் படுத்துக.

விலைப்பட்டியல்

| பொருள் | ரூபா | சதம் |
|---|---|---|
| 1kg அரிசி | 38 | 00 |
| 500g பருப்பு | 42 | 00 |
| 1m துணி | 85 | 00 |
| 3 தேங்காய் | 63 | 00 |
| 2 கொப்பி | 34 | 00 |

சிட்டை

| பொருள் | ரூபா | சதம் |
|---|---|---|
| 3kg அரிசி | ...... | ..... |
| 1kg பருப்பு | ...... | ..... |
| 5m துணி | ...... | ..... |
| 1 தேங்காய் | ...... | ..... |
| 3 கொப்பி | ...... | ..... |
| மொத்தம் | ...... | ...... |

12. 1) கூட்டுக.

| m | cm |
|---|---|
| 3 | 75 |
| + 6 | 47 |

2) கழிக்குக.

| km | m |
|---|---|
| 14 | 650 |
| - 2 | 475 |

3) பெருக்குக.

  1 6
× 7

4) வகுக்க.

6 | 762

13. கீழ்வரும் பாடலின் பகுதியைத் தொடர்ந்து வரும் நான்கு வரிகளை எழுதுக.

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறைவான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
.............................................................
.............................................................
.............................................................
.............................................................

முற்றும்



தரம்-04 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்காக நடாத்தப்படும்

**படிமுறைப் பரீட்சை 2 - 2008**


ஆக்கம்:-
சண்.சுதர்சன்
(ஆசிரியர், மதீனா தேசிய பாடசாலை, கண்டி)

# வஞ்சம் தீர்த்தான்

மெக்சிக்கோவின் ஒரு சிறிய கிராமப்புறம்.

மாலை 5 மணி. மழைக்காலம். இரவு 8மணிபோல் கனத்துவிட்டது. அந்தச் சிறிய பொலிஸ் நிலையத்தில் மொத்தம் நான்கு பொலிஸார்தான் இருந்தார்கள். அவர்களில் இருவர் ரோந்து சுற்றுக்குப் போயிருந்தார்கள்.

ஒருவன் வாசலில் நின்றிருந்தான். இன்ஸ்பெக்டர் ரிச்சர்ட் நாற்காலியில் அமர்ந்து மேசையில் சில பைல்களை விரித்துப்போட்டு அலசிக்கொண்டிருந்தான்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ரயில்வே நிலையம் அருகில் நடுத்தர வயதான மாது ஒருத்தி கொலைசெய்யப்பட்டுக் கிடந்தாள். அவள் இப்பிரதேசத்துக்குப் புதியவள். கொலைகாரன் அவளை வெளியிலிருந்து கூட்டிக்கொண்டு வந்து உல்லாசமாகப் பொழுதைக் கழித்துவிட்டு, பிறகு என்ன நினைத்தானோ தெரியவில்லை; ஆளையும் முடித்துவிட்டு தப்பியோடிவிட்டான். இப்படித்தான் பொலிஸ் முடிவெடுத்தது.

அந்தக் கொலை மிகவும் பயங்கரமாகவிருந்தது. துப்பாக்கியோ, கத்தியோ பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவள் கண்களை மூடிக்கொண்டு கனவுலகில் மிதந்துகொண்டிருந்த வேளையில் கனமான கற்பாறையொன்றைத் தூக்கி 'மடார்' என்று தலையில் போட்டிருக்கக்கூடும். முகம் நசுங்கி சிதைந்துவிட, மண்டை பிளந்து மங்குஸ்தான் பழத்தின் சுளையென மூளை வெளியில் பிதுங்கிவிட்டது. பாவம் ஒரே அடியில் ஒரே வினாடியில் உயிர்பறவை உடலை விட்டுப் பறந்துவிட்டதைப் போன்று அந்தச் சடலம் கிடந்தது.

இக்கொலை தொடர்பான ஆவணங்களையே ரிச்சர்ட் படித்துக்கொண்டிருந்தான். கொலைசெய்யப்பட்ட அந்தப் பெண்மணி யார் என்ற தகவல் சரியாகத் தெரியவில்லை. ஆனால், அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவள் அல்ல என்ற விவரம் மட்டும் அறிந்துகொள்ளக்கூடியதாக விருந்தது.

சடலம் நன்றாக பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது. அவள் யார் என்று எதுவிதத் தகவலும் கிடைக்கவில்லை. எனினும், கொலைக்கான காரணி பலாத்காரம். கொலை செய்யப்படுவதற்கு முன்னர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டிருக்கிறாள் என்று உடற்கூற்று நிபுணர்கள் சொன்னார்கள். உயரம், நிறம் என்பவற்றைக் கொண்டு அந்தப்பெயர் மெக்சிக்கன் அல்ல அமெரிக்கப் பெண்மணியாகவிருப்பாள் என்றும் ஊகிக்கப்பட்டது.

கிரீங்! கிரீங்!

தொலைபேசி அலறியது.

ரிச்சர்ட் சட்டென எடுத்தான். காதில் பொருத்தினான்.

"ஹலோ!

"பொலிஸ்.ஸ்டேசன்"

"யெஸ்"

"உங்கள் ஸ்டேசனில் ரோந்து பொலிஸ்காரர்கள் இல்லை என்ன?"

"இருக்கிறார்களே! என்ன விசயம்?"

"மண்ணாங்கட்டி"

"மண்ணாங்கட்டியா ஏய் என்ன விளையாடுறாயா? யார் நீ?"

"ஏன் குரலிலே கண்டுபிடிக்க முடியலியா, ஒரு பொம்புளதான்."

"அது தெரியுது, ஏன் என்ன விசயம்? ரோந்து பொலிஸ்காரர்கள் இல்லியா என்று ஏன் கேட்கிறாய்."

"உம். சும்மா கொஞ்சத்தான். யோவ்! இங்கே ஒருத்தன் குடிச்சுப்போட்டு பெரிய தொல்லையாக கிடக்கு. ஒரு பொலிஸ்காரரை அனுப்பிவையுங்கள்."

"இங்கே ஸ்டேசனில் யாரும் இல்லை. ரெண்டுபேர் ரோந்து போயிருக்கிறார்கள். அவர்களுக்கு செய்தி அனுப்பி அவர்களைத் தான் அனுப்பிவைக்கவேண்டும்".

"அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?"

"அநேகமாக ரயில்வே நிலையமருகில்தான் இருப்பார்கள். அதுசரி உன் பெயர் என்ன? எங்கே இருந்து பேசுகிறாய்?"

"மடோனா?"

போன் வைக்கப்பட்டு விட்டது.

"ஹலோ! ஹலோ"

பதில் இல்லை.

ரிச்சர்ட் யோசனையில் ஆழ்ந்தான். பேசுவது பெண்தான் என்பது 100சதவீதம் உறுதியாகவிருந்தபோதும் ஏனோ அவனுக்கு ஒரு சந்தேகம் மனதில் துளிர்விட்டது. ரோந்து பொலிஸ்காரர் என்று ஏன் வலிந்து கூறுகிறாள். அதுமட்டுமில்லை. முழுக்க ஒரு பெண் பிள்ளையின் குரலாகவும் அது இல்லை. இந்தப் பொலிஸ்காரர்களில் சிலர் நல்லவர்கள் அல்லர் என்பதை ரிச்சர்ட் அறிவான். அவர்களுக்கு வட்டார விபசாரிகளுடன் தொடர்பு உள்ளது. அவர்கள் 'மாமா' வேலையும் செய்து வந்தார்கள். இதனால், தங்கள் சைட் பிசினஸ் மூலம் நல்ல வருமானமும் பெற்று வந்தார்கள். பொலிஸ் ஸ்டேசனில் வந்து அவர்களை சந்தித்து உறவாடிச் செல்ல பயப்படும் இந்த விபசாரிகள் இவ்வாறுதான்அனாமதேயிகள் போல் பேசுவார்கள். ரிச்சர்ட் என்றால் அவர்களுக்கு சிம்மசொப்பனம்.

கடைசியாகச் சென்ற இரு ரோந்து பொலிஸ்காரர்களில் ஒருவனான தோமஸ் திரும்பிவந்தான். இவன் வடக்குப் பக்கமாகச் சென்றிருந்தான். எந்தப் பக்கம் சென்றாலும் ஒரு மணித்தியாலத்திற்குள் அவர்கள் திரும்பி நிலையத்துக்கு வந்து விடுவார்கள்.

அரைமணித்தியாலம் நிலையத்தில் தங்கியிருப்பார்கள். மறுபடியும் இன்னொரு திசைக்கு வரையறுக்கப்பட்டுள்ள திசைவரை செல்வார்கள். அவர்களுடைய நடைமுறைகள் இவ்வாறிருந்தன.

அதுவொரு சிறிய கடற்கரைப் பிரதேசம். கோடைகாலத்தில் உல்லாசப்பயணிகளால் நிறைந்துவிடும். மற்றும்படி மாரிகாலம் வந்துவிட்டால் வெறிச்சோடிப்போய் விடும். எனினும், இதுவரை காலமும் பாரதூரமான குற்றச்செயல்கள் எதுவும் அங்கு நிகழவில்லை.



ரயில்வே நிலையம் அமைந்துள்ள கிழக்கு வட்டாரத்திற்குச் சென்ற ரொபின் இன்னும் திரும்பவில்லை.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

1 மணித்தியாலமும் கடந்து மேலும் 15 நிமிடங்கள் அதிகமாக கடந்துவிட்டன. பைல்களை புரட்டிக்கொண்டிருந்த ரிச்சர்ட் முதலில் இதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

அவனுக்கு திக்கென்றது.

டிக் டிக் டிக்கென மெதுவான ஓசை எழுப்பிக்கொண்டு முட்களை நகர்த்திக் கொண்டிருந்த சுவர்க்கடிகாரத்தைப் பார்த்ததும் ரிச்சர்ட் திகைத்துப் போனான். ஒரு நிமிடம் அதிகமாகப் போனாலும் உடனே தொலைபேசியை எடுத்து சம்பந்தப்பட்ட பொலிஸ்காரனுடன் தொடர்புகொள்ளும்அவன் இன்று 20 நிமிடங்கள் மேலதிகமாகக் கடந்துவிட்ட நிலையிலும் இதனைக் கடைப்பிடிக்காத காரணத்தால் இந்த அதிர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

டக்கென தகவல் பரிமாற்றக் கருவியை எடுத்தான். அதுவொரு பழமையான



**எழுதுவது கே. வி.**

கருவி. கர்புர்ரென தெளிவில்லாத ஓசைகளை எழுப்பும் நவீன கையடக்கத்தொலைபேசிகள் இல்லாத காலம்.

தெளிவில்லாத தகவல் பரிமாற்றக் கருவிகளையே பொலிஸார் பயன்படுத்தி வந்தகாலம்.

"ஹலோ! 140! 140!"

பதில் இல்லை.

"எங்கிருக்கிறாய்? எங்கிருக்கிறாய்?"

பதில் இல்லை.

ரிச்சர்ட் பதற்றமடைந்தான்.

தகவல் பரிமாற்றக் கருவியிலிருந்து ஏதேதோ சப்தங்கள் எதிரொலித்தன. எனினும், ரொபினின் மூச்சு இழையோடும் சப்தம் மெலிதாகவேனும் கேட்கவில்லை.

எங்கே போய்விட்டான்?

ரிச்சர்ட் தனக்குத்தானே கேட்டு தலையைச் சொறிந்து கொண்டான்.

இந்தப் பயல் ரொபினுக்கு நிறைய வேறு அலுவல்கள் இருக்கின்றன என்ற சந்தேகம் ரிச்சர்ட்டிற்கு இருந்தது. அவன் உல்லாசப் பயணிகளுக்கு விபச்சாரிகளை சப்ளை பண்ணி வருகின்றான் என்ற வதந்தி அவன் காதில் விழுந்திருந்தது. ரிச்சர்ட் ஒரு கண்ணியமான பொலிஸ் அதிகாரியாக இருந்தாலும் இந்த விசயத்துக்காக பெரிதும் அலட்டிக்கொள்ளவில்லை. ஏனென்றால், ரொபின் மிகவும் சுறுசுறுப்பானவன். எந்த வேலை செய்வதற்கும் தயங்காதவன். எந்தக் காரியத்தை ஒப்படைத்தாலும் அதைக் கச்சிதமாக செய்துமுடிப்பவன். அப்படிப்பட்ட ஒரு பொலிஸ்காரன் மீது கண்டபடி எச்சரிக்கை, கண்டிப்பு என்று நடந்துகொண்டால் அவன் மனம் சோர்ந்து விடலாம். 'செய் செய் என்றைக்காவது ஒருநாள் ஏதாவது ஒரு சிக்கலில் காலை மாட்டிக்கொண்டு இங்கேதானே வரவேண்டும் அப்பொழுது பார்த்துக்கொள்கிறேன்' என்றுதான் ரிச்சர்ட் முடிவெடுத்திருந்தான்.

'அதற்கான நேரம் வந்துவிட்டதா?' மனதிற்குள் பொருமிக்கொண்ட ரொபின், '149!, 149!' என்று கத்தினான்.

வாசலில் பராக்குப் பார்த்துக்கொண்டிருந்த பொலிஸ்காரன் விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்தான்.

"யெஸ் சார்!" என சலூட் அடித்து நின்றான்.

"ரொபின் இன்னும் வரவில்லையா?"

"இல்லை சேர்"

"சரி ஜீப்பை ஆயத்தப்படுத்து"

"ஓ.கே.சேர்"

ஜீப் தயாராகிவிட்டது. ரிச்சர்ட் அதில் ஏறினான். அவனே செலுத்திக்கொண்டு சென்றான். புகையைக் கக்கிக்கொண்டு ஜீப் பறந்தது.

மாலை 6 மணிகூட ஆகவில்லை. இருள் கவிந்துவிட்டது. மழை மீண்டும் வந்துவிடும்போல லேசான இடிமுழக்கமும் மின்னலின் ஒளிக்கீற்றுகளும் அடிவானில் பளிச்சிட்டன.

முன் விளக்குகளை பாய்ச்சுக்கொண்டு தென்னை மரங்கள் அடர்ந்த அந்த பகுதியினூடாக ரயில்வே நிலையம் இருந்த திசைநோக்கி ஜீப் பறந்தது.

ஜீப்பின் முன்விளக்குகள் பாய்ச்சிய வெளிச்சத்தில்

கொஞ்சம் தொலைவில் -

எவரோ வந்த கொண்டிருந்தது போன்றும் பின்னர் சட்டென இருளுக்குள் மறைந்துகொண்டதைப்போன்றும் ரிச்சர்ட்டிற்கு தோன்றியது. ஏதோ

(31 ஆம் பக்கம் பார்க்க)



# பறந்த கிளி

பருவ வயதில் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, கற்பை தொலைப்பவர்களுக்கு என் கதை ஒரு பாடமாக அமையட்டும்.

என் பெற்றோருக்கு பிள்ளைகள் அதிகம். அதனால், வீட்டை வறுமை சூழ்ந்தது. பெண் பிள்ளைகளுக்கு தகுதியான இடத்தில் கல்யாணம் செய்து கொடுக்க கையில் போதிய வசதி இல்லை.

ஆகவே, கைக்கு கிடைத்தவர்களை 'மாப்பிள்ளை' ஆக்கினார்கள். எனக்கு பணவசதியுடன் ஒருவன் கிடைத்தான். அவனுக்கு என்னை இரண்டாம் கல்யாணம் செய்து வைத்தார்கள்.

அவன் ஒரு கொடுமைக் காரன். சதாநேரமும் குடிப்பான். என்னை அடிப்பான், கொடுமைப் படுத்துவான். 'இப்படி பாழுங் கிணற்றில் தள்ளிவிட் டார் களே?' என கவலையில் தவித்தேன்.

அந்த நேரத்தில், பக்கத்து வீட்டுக்கு வெளியூரில் இருந்து விருந்தாளியாக இளைஞன் ஒருவன் வந் தான். அவன் 'டிப்-டாப்'பாக உடையணிந்து,மிடுக்கும் கவர்ச்சியுமாகக் காட்சி அளித்தான்.

அவனுக்கு திருமணமாக வில்லை. அவனைப்பார்க்க, பேச- சிரிக்க என் மனம் துடித்தது.

சின்னவயது முதலே ஆடம்பரமான தாம்பத்திய உறவுக்கு ஆசைப்பட்டடவள் நான். ஆகவே, இவனால் ஏதாவது ஆறுதல் கிடைக்கும் என ஏங்கினேன்.

பக்கத்து வீட்டுத் தம்பதி வேலைக்கு போய்விடுவார்கள். எனவே, எனது ஆசை எளிதாக அரங்கேறியது. அவனோடு பேசினேன். பழகினேன். அது எனக்கு திடீர் சொர்க்கம் போல் தெரிந்தது. எங்கள் நெருக்கம் எல்லை மீறியது. அவன் முழுசாக என்னை ஆக்கிரமித்துக் கொண் டான். நானும் அதை தடுக்கும் நிலையில் இல்லை. அவனுக்கு வசியமானேன். சந்தேகப்பிராணியான என் கணவன், எச்சரிக்கையாக இருந்தான். 'காப்பவன் பெரியவனா? கள்வன் பெரியவனா?'

நாங்கள் அவன் கண்ணில் மண் அள்ளிப் போட்டுவிட்டு, அதைவிட எச்சரிக்கையாக ரகசியமாக சந்தித்தோம். இருவரில் ஒவராக சங்கமித்தோம். என் கணவனிடம் இல்லாத அன்பு, ஆறுதல், இனிமையயை அவன் இன்ப மழையாக பொழிந்தான். அதில் இருந்து மீள முடியாமல் நான் தவித்தேன்.

அந்த இளைஞன் அருகில் இல்லாத நிமிடங்களை வெறுத்தேன். அவனை விட்டுவிலகிய நேரங்களில் பைத்தியக்காரி போல் ஆனேன். மறுபக்கம்- என் கணவனின் சித்திரவதைகள் தொடந்தன. அவை, என் தாம்பத்திய உறவில் வெறுப்பையும், புது உறவின் மேல் அதிக ஈர்ப்பையும் உண்டாக்கின.

கணவனோடு குடும்பம் நடத்த முடி யாது என்ற முடிவுக்கு வந்தேன். அதை, புது இளைஞனிடம் சொன்னேன்.

"நீ யோசிக்காதே! பேசாமல் என்னோடு எங்கள் ஊருக்கு வந்துவிடு. உன்னை மகாராணி போல காப்பாற்றுகிறேன்." என்றவன், ஆசை தீர என்னை அனுபவித்து முடித்தான். முகவரியை தந்துவிட்டு புறப்பட்டான்.

அவன் விருந்தாளியாக இருந்த வீட்டில் நான் எதுவும் விசாரிக்கவில்லை. எனக்கு குழந்தை கிடையாது.

ஒரு நாள், என் கணவன் குடிபோதையில் வந்து, காரணம் இல்லாமல் என்னை அடித்தான். பிறகு, அடித்துப் போட்ட மாதிரி அவன் தூங்கிவிட்டான். கண்ணீரில் தவித்த நான், அவன் கட்டிய தாலியைக் கழற்றி அவனது அருகில் வைத்தேன்.

"உன் கொடுமை தாங்காமல் நான் தற்கொலை செய்து கொள்கிறேன். தயவு செய்து என்னைத் தேட வேண்டாம்" என கடிதம் எழுதி வைத்துவிட்டு,ரயில் நிலையம் வந்தேன்.

அந்த இளைஞனின் ஊருக்கு புறப்பட்டேன். எங்கள் வீட்டை விட்டு அதுவரை வெளியில் செல்லாத நான்- மோக மயக்கம், அசட்டு துணிச்சலில் ரயிலில் அந்த நெடுந்தூர பயணத்தைத் தொடர்ந்தேன்.

என் எதிரில் நடுத்தர வயதுப் பெண்மணி ஒரு வர் இருந்தார். கழுத்தில் நகை, கையில் பெட்டி எதுவுமில்லாமல் இருந்த என்னை பரிதாபத்துடன் பார்த்தார். என்னிடம் பேச்சு தந்தார்.

ஆனால் நான் பிடிக்கொடுக்கவில்லை. தூக்கம் வருவதுபோல் நடித்து, சமாளித்தேன்.

அந்த இடம் வந்துவிட்டது. எல்லோரும் இறங்கினார்கள் நானும் இறங்கினேன்.

இரவு நேரம். மொழி தெரியாத இடம். அந்த பெண்மணி என்னையே பார்த்தார். தமிழில் பேசினார்.

## உண்மைக்கதை

"உன்னை அழைத்துப்போக யாராவது வருகின்றார்களா?" என அக்கறையுடன் கேட்டார்.

நான் "இல்லை" என்றதும், "விலாசம் உள்ளதா?" என்று கேட்டார்.

விலாசத்தைக் காட்டியதும்,தன் மகனுக்காக காத்திருப்பதாக சொல்லிக்கொண்டே - என் மேல் ஒரு கண் வைத்தார்.

சிறிது நேரத்தில் ரவுடி தோற்றமுள்ள ஆண்கள் சில[illegible] என்னை சுற்றி வந்தார்கள். தங்களுடன் வந்தால், உரிய விலாசத்தில் சேர்த்துவிடுவதாக அவர்கள் வற்புறுத்தி னார்கள். அதைப் பார்த்த அந்த பெண்மணி, "இந்த பெண் என்கூட வந்திருப்பவள்" என கோபமாக பேசி, அவர்களை துரத்திவிட்டார்.

மகனுடன் வீடு செல்லும் போது, என்னை யும் அழைத்துப் போனார். வழிநெடுக என் கதையைக் கேட்டு அனுதாபப்பட்டார். என்னை உரிமையுடன் திட்டி புத்தி சொன் னார். வீடு வந்ததும், அங்கு உள்ளவர்களிடம் - வேலைக்கு என்னை அழைத்து வந்திருப்ப தாக சொல்லி வைத்தார். என் தோற்றம் அப்படித்தான் இருந்தது.

மறுநாள் என்னைப்பற்றி விவரமாய் சொன்னதைக் கேட்டவர்களுக்கு, நான் அங்கிருப்பது பிடிக்கவில்லை. பொலீஸ்- வழக்கில்மாட்டிக்கொள்வோம் என பயந்தார்கள்.

வயதில் மூத்த பெண்களோ..."இவளை முதலில் வெளியில் துரத்து" என்று என் காதுபடவே பேசினார்கள். எனக்கு உடம்பு முழுவதும் கூசியது.

ஆனால் , கொஞ்ச நேரத்தில் அதிர்ச்சி! அந்த முகவரி பொய்யானது. அவன் போலி யானவன் எனத் தெரிந்தது. என் இதயத்தில் ஆயிரம் ஓட்டைகள் விழுந்துபோல துடிதுடித்தேன்.

அதுவரை அந்த வீட்டில் கோபமாக இருந்தவர்கள் எல்லாம் என் மீது அனுதாபம் காட்டினார்கள். என் வீட்டாரோ நான் தற்கொலை செய்திருப்பதாக நினைத்து இருப்பார்கள். பெற்ற கடனுக்காக அழுது இருப்பார்கள்.

ஆனால், நான் திக்குத்தெரியாத இடத்தில், செய்வது அறியாது குழம்பிக்கொண்டிருந்தேன்.

அந்தப் பெண்மணியும், அவர் கணவரும், "நீ பிறந்த வீட்டுக்கோ அல்லது கணவனிடமோ போகிறாயா?" என்று கேட்டு பணமும் தர முன்வந்தார்கள்.

ஈவு இரக்கமற்ற அவள் கணவன் கண்டவுடன், 'ஓடுகாலி.. போடி வெளியே" என எல்லோர் முன்பும் அவமானப்படுத்தி துரத்து வான்.

பெற்றவர்களின் நிலைப்பற்றி நன் றாக அறிந்தவள் நான். மற்ற பெண் பிள்ளை களின் வாழ்க்கை பாழாகி விடக்கூடாதென வாயால் சொல்லாமல், செய லால் செய்து காட்டிவிடுவார்கள் என நான் நன்றாக தெரிந்தவள்.

ஆகவே-" நான் , எங்கும் போக விரும்ப வில்லை. தற்கொலை செய்துகொள்வதை தவிர வேறு வழியில்லை. " என்று சொல்லி அழுதேன்.

எனக்கு சமாதானம் சொன்ன அந்தக் குடும்பம், என்னைப் பெண்கள் காப்பகத்தில் கொண்டு போய் சேர்த்தது. ஊரில் இருப்பவர்களுக்கு நான் செத்தவளாகவே இருக்கலாம். இங்கு எனக்கென புது வாழ்க்கை அமைந் தது. என்போன்ற அபலைகளின் கதைகளைக் கேட்டுக் கேட்டு மனதை கல்லாக்கிக் கொண்டேன்.

ரயில் நிலையத்தில் அந்தத் தாய் மட்டும் என்னைக் கண்டு கொள்ளாமல் விட்டுச் சென்றி ருந்தால், என் நிலை என்ன ஆகி யிருக்கும் என நினைக்கும்போதே உடல் நடுங்குகிறது.

அகல்விளக்கு ஒன்று எனக்குக் கிடைத்ததால், நான் இருளில் அகப்படாமல் தப்பினேன்.

இல்லாவிட்டால், சிவப்பு விளக்கில் ஒருத்தியாகத்தானே உழன்றுகொண்டிருப்பேன்...

கடவுளே!

# மலைக்குருவி...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"போடி நாம சின்ன புள்ளங்க.. இப்ப இப்படி கதைக்கக் கூடாதுடி" ராமு பெரிய மனித தோரணையில் கூறினான்.

" வளர்ந்த பிறகுதானே?"

"ம்.... கட்டிக்கலாம்தான். எங்க அப்பா, அம்மா சம்மதிப்பாங்களா?"

"ஆமா ...... ஆமா நீ ஏன் பயப்படுறே?"

"அப்ப சரி....."

"நாம கல்யாணம் கட்டினா நீ குடிக்ககூடாது ராமு.. ஏன்னா அப்புறம் நீ குடிச்சிட்டு வந்து என்னை அடிப்பியாம்......"

பூங்கொடி கவலையோடு கூறவே"அழாத பூங்கொடி. நான் ஒரு நாளும் உன்னை அடிக்க மாட்டேன்" என்றான் ராமு.

இவர்கள் விளையாடியபடி உரையாடு வதைக் கேட்ட கண்ணம்மாவுக்கு சிரிப்பு சிரிப்பாக வந்தது.

"பூங்கொடி ...... வாத்தியாரு நீ ராமுவைக் கட்ட சம்மதிக்க மாட்டாரு. உங்க கிட்ட பண மில்லை.- அத்தோட நீ நல்லாய் படிக்கணும்".

"பூங்கொடியின் கண்ணில் நீர் வந்து விட்டது.

"நான் நல்லா படிச்சு டீச்சராக வருவேன்"

அன்று வீட்டிற்குச் சென்ற பூங்கொடி அம்மாவிடம் "நான் படிச்சு டீச்சராக வரணுமம்மா என்னைப் படிக்க வைப்பியா?" என்று ஆதங்கத்துடன் கேட்டாள்.

"நீ படிக்கணுமென்னு எனக்கும் ஆசை தான்..... ஆணா எங்ககிட்ட பணமில்லையே? உங்கப்பன் குடியிலே உழைக்கிறதை கரைச்சிடுவானே. இனி நம்ம தோட்டப் பள்ளிக் கூடத்தில நீ படிக்க வகுப்பில்லை. டவுனுக்கு பெரிய பள்ளிக் கூடத்திற்குத் தான் போகணும்.. முடிகிற காரியமா?"

"இல்லையம்மா நான் படிக்கணும் இனி குடிக்க வேணாமென்னு அப்பாகிட்ட சொல்லும்மா"

"கேட்கிற மனிசனா அது" என்றபடி நெடுமூச்செறியும் அம்மாவை ஏக்கத்துடன் நோக்கினாள் பூங்கொடி. அடுத்த வருட ஆரம்பத்திலேயே பூங்கொடியின் படிப்புக் கனவு கானல் நீரானது.

ஜெயராம் படிப்பதற்கு பட்டணம் போய்விட்டான்.

விடுமுறையில் அவன் வரும் வேளைகளில் இருவரும் சந்திக்கத் தவறு வதில்லை. அவர்களுக்கு காதலைப் பற்றி புரிந்து கொள்ளும் வயது வந்துவிடவில்லை. பருவ வாசலில் உள்ளத்தில் ஊறும் இனந்தெரியாத ஒருவித ஆசை தான் ஏற்பட்டது.

பூங்கொடி விரைவிலேயே துறுதுறு என்று வளர்ந்து வந்தாள். ஜெயராமுக்கும் பூனை மயிர் மீசை அரும்பத் தொடங்கிவிட்டது. மீசையோடு தொடங்கிய பாலீர்ப்பினால் அடுத்த முறை விடுமுறையில் ஊர் வந்தபோது பூங்கொடியை சந்தித்தபோது அவனது உள்ளத்தில் கள்ளம் குடிகொண்டுவிட்டது.

ஒரு நாள் ஆற்றங்கரைக்கு அவளை அழைத்துச் சென்ற போது உணர்ச்சி மேலீட்டால் அவளை இழுத்து அணைத்து ஆசை தீர முத்தமழை சொரிந் தான். அவன் முத்தமிட்டபோது பூங்கொடிக்கு கண்ணீர் துளிர் கட்டியது.

"நீ என்னை மறக்க மாட்டாயெல்லவா?"

"மறக்கவே மாட்டேனடி..."

அந்தத் தடவை விடைப்பெற்றுச் சென்றவன், பலவித கற்பனைகளுடன் ஊருக்கு வந்தபோது ஜெயராமுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. பூங்கொடியை கொழும்பில் ஒரு வீட்டில் வேலை செய்வதற்கு அனுப்பிய செய்தி கேட்டு அதிர்ந்தான்.

காலம் சொல்லிக்கொள்ளாமல் கடந்தது. பத்துவருடங்களில் ஜெயராம் படித்து முடித்து ஆசிரியர் நியமனம் பெற்றுவிட்டான். வேலை கிடைத்ததும் அவனுக்கு திருமணம் பேசப்பட்டது. காலம் பூங்கொடியை மறக்கவைத்துவிட்டது. பூங்கொடியைத் திருமணம் செய்யும் எண்ணம் இப்போது அவன் மனதில் இல்லாதுவிட்டாலும், பசுமையான அவளின் நினைவுகள் எப்போதாவது அவன் மனதில் தோன்றும்.

விரைவில் பெரும் சீதனத்துடன் ஜெயராம் ஓர் ஆசிரியையைக் கைப்பிடித்தான். கலியாண மண்டபத்தில் திருமணநிகழ்வுகள் முடிந்து அவர்கள் மணமகள் வீட்டிக்கு சென்றனர். அங்கே ஜெயராமுக்கு ஓர் அதிர்ச்சி, முதலில் அவளை அவனால் அடை யாளம் காண முடியவில்லை. சட்டென்று ஞாபகத்திற்கு வராவிட்டாலும், எங்கோ சந்தித்த ஞாபகம்.

தனது மனைவின் பக்கம் திரும்பி அங்குமிங்கும் ஓடி ஓடி வேலை செய்துகொண்டி ருந்தவளைக்காட்டி " அது யார் ?" என்று கேட்டான்.

"ஓ அதுவா? அது நம்ம வீட்டு வேலைக்காரி.. பூங்கொடின்னு பெயர்..... நல்ல குணமான பிள்ளை" மனைவி அறிமுகப்படுத்தியபோது அவனது நெஞ்சில் ஏதோ செய்தது.

தற்செயலாக அந்தப் பக்கம் வந்த பூங்கொடி யும் அவனை அடையாளம் கண்டு திகைத்துப் போய்விட்டாள்.

உள்ளே சென்ற பூங்கொடிக்கு அழுகை அழுகையாக வந்தது.

"பூங்கொடி" வீட்டுக்கார அம்மாவின் அழைப்பு!

பூங்கொடி சேலைத் தலைப்பால் தனது கண்களைத் துடைத்துக் கொண்டு விரைந்தாள். மீண்டும் சுறுசுறுப்பாகத் தனது வேலைகளைச் செய்தாள்.


ஜெயராமுக்கு அவளைப் பார்க்க மலைக்குருவி யின் ஞாபகம் வந்தது. நெடுமூச்செறிந்தான். அவனால் வேறு என்ன செய்ய முடியும்?

# சிறுவர் பக்கம்

## சிறுவர் கைவண்ணம்



சமாஷ்,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



திவ்யா,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



எம். ரம்யா,
தரம் 2 ஏ,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



சரத்,
தரம் 3,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.


## அழகாக நிறம் தீட்டுங்கள் 17



தம்பி, தங்கைகளே! மேலே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப் படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங் களுடன் பிரசுர மாகும். எங்கே உங்கள் கைவண் ணத்தைக் காட்டுங் கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 14



★பெயர் - எம்.யு.எப்.சபிய்யா ★தரம் - 6 ஏ
★பாடசாலை - கமுகம மத்திய கல்லூரி, கெலிஓயா.

### பாராட்டுப் பெறுவோர்....

1. ஸ்ரீபாலகுமார் டயாழினி,
   தரம் 5பீ,
   இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்.
2. அனந்தராசா ரிபிசனா,
   தரம் 7 டி,
   சைவப் பிரகாச மகளிர் கல்லூரி,
   வவுனியா.
3. எம்.ரஸிகா,
   தரம் 4,
   ஹோலி ரோசரி சிங்கள வித்தியாலயம்.
4. திலுக்ஷியா சரவணபவன்,
   தரம் 5பீ,
   புத்தளம் இந்து மத்திய கல்லூரி.
5. தி.திவானிகா,
   தரம்4 ஏ,
   சைவப்பிரகாச மகளிர் கல்லூரி,
   வவுனியா.




1. கிழக்கில் இருந்து மேற்காக தினமும் ஒரு பயணம், அவன் யார்?
2. ஒருமுறை பிடுங்கினாலும் மறுபடியும் வந்துவிடும் அடுத்தமுறை பிடுங்கினால் போயே போச்சு, அது என்ன?
3. ஊசியை ஓட விட்டால் ஒய்யார கீதம், அது என்ன?
4. என்னை அவனில் காணலாம், அது என்ன?
5. கடித்தால் புளிப்பு தண்ணீர் குடித்தால் இனிப்பு, அது என்ன?
6. ஐவர் வீட்டுக்கும் பொதுவாய் ஒரு முற்றம், அது என்ன?
7. தொட்டால் ஒட்டிக் கொள்வான், அது என்ன?
8. சுற்றிச் சுற்றி வந்தான், காற்றை மட்டும் தந்தான், அவன் யார்?
9. கட்டை குட்டை மனிதனை கடித்தால் கனருசி, அவன் யார்?
10. பற்களால் தலையைக் கடிப்பான், அவன் யார்?

1. சூரியன்
2. பற்கள்
3. இசைத்தட்டு
4. கண்ணாடி
5. நெல்லிக்காய்
6. உள்ளங்கை
7. தூசி
8. மின்விசிறி
9. கரும்பு
10. சீப்பு

சேவலும் கோழியும் குஞ்சுகளும் உங்களுக்குத் தெரிகிறதா? சரி. ஆனால் இன்னும் ஏராளமான பொருட்கள் இந்தப் படத்தில் ஒளிந்திருக் கின்றன. ஆகக் குறைந்தது 10 பொருட்களை ஆவது நீங்கள் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!





# சினிமாப் பறவைகளுள் சிறகொடிந்த ஜெயசந்திரன்

பாலா சங்குப்பிள்ளை

தமிழ்த் திரையுலகம் என்பது ஒரு சர்க்கஸ் போன்றது. திறமை மற்றும் அதிஷ்டம் என்ற தடியின் உதவியினால் கயிற்றில் நடக்க வேண்டும். ஆனாலும் கரணம் தப்பினால் ஆளே இல்லாமல் போய்விடுவார்கள். ஆனால் திறமையும், அதிஷ்டமும் சரியாக அமைந்து விட்டால் சூப்பர் ஸ்டார் அளவுக்கு போய் விட்முடியும்.

அண்மையில் வெளியாகி சுமாரான வெற்றியை அடைந்த ஜெயம் ரவி நடித்த 'இதயத் திருடன்' படத்தில் கதாநாயகிக்கு அப்பாவாக நடித்த நடிகரை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? ஞாபகம் வராவிட்டால் நீங்கள் இருபத்தைந்து வருடங்களுக்கு பின்னோக்கிப் போக வேண்டும். அந்த நடிகரின் பெயர் ஜெயசந்திரன். ரஜனி, மற்றும் கமலுடன் சேர்ந்து அவர்களுக்கு இணையாக நடித்த நல்ல நடிகர்.

இவரின் முதல் படம் வாழ்ந்து 'காட்டுகிறேன்'. முத்துராமன் சுஜாதா நடித்த இப்படத்தை எஸ்.பி.முத்துராமன் இயக்கியிருந்தார். ஜெயசந்திரன் பிரதான பாத்திரத்தில் தோன்றி நடித்த இப்படம் 100 நாட்கள் ஓடியது. தொடர்ந்து இவர் மறைந்த ஸ்ரீவித்யாவுடன் 'ஆசை அறுபது நாள்' மறைந்த ஷோபாவுடன் 'அச்சாணி' ஜெய்சங்கருடன் 'ஆசை மனைவி' நடிகர் திலகம் சிவாஜியுடன் 'இளைய தலைமுறை' கமல், ரஜனியுடன் இணைந்து 'ஆடு புலி ஆட்டம்' என எழுபதுகளில் மிக பிரமாதமாக மின்னத் தொடங்கினார்.

இவர் நடித்த எல்லாத் திரைப் படங்களுக்கும் இலங்கையில் நல்ல வரவேற்பு இருந்தது. 1980 களுக்கு பிறகு திரைப்படங்களில் நடிப்பதை நிறுத்தி விட்டு இவர் இலங்கையில் குடியேறினார். 1982 இல் ஏற்பட்ட பிரச்சினையில் இவர் வீடும் எரிந்து நாசமானது கூடப் பரவாயில்லை கமல், ரஜனி மற்றும் பலருடன் நடித்த போது எடுக்கப்பட்ட பல அபூர்வ புகைப்படங்களும் எரிந்து நாசமாகிய பாது இவர் நிலை குலைந்து போய்விட்டார்.

தென்னிந்திய திரைவானில் இவர் குறிப்பிட்ட நல்ல இடத்தில் இருந்தகாலத்தில் நடிகர்கள் பலர் இவருடன் நல்ல நட்புடன் இருந்தார்கள். ஆனால் அதையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு இலங்கையில் குடியேறியது எவ்வளவு பெரிய தவறென்பதை இவர் நன்றாக உணர்ந்துக் கொண்டார். இவர் மறுபடியும் சென்னையில் குடியேறிய போதும் மறுபடியும் எனக்கு வாய்ப்புக் கொடுங்கள் என கமல், ரஜனியிடம் கேட்க வெட்கப்பட்டார். நல்ல நிலையிலிருந்த அவர் அதையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு இலங்கைக்கு வந்தார். அது அவர் தவறு தானே!


இப்படியே பல வருடங்கள் ஓடிவிட்டன. இவரின் பழைய நண்பர்கள் இவரை பார்க்கும் போதெல்லாம் நடிக்கலாமே என சொன்ன போதும் இவர் வலியச் சென்று வாய்ப்புக் கேட்க விரும்பவில்லை. ஆனாலும் இயக்குனர் சரணிடமிருந்து தானாக ஒரு வாய்ப்பு வந்தது. 'இதயத்திருடன்' என்ற அந்தத் திரைப்படத்தில் கதாநாயகிக்கு அப்பாவாக நல்ல கனமான வேடம் கிடைத்தது. மேலும் பல பட நிறுவனங்களிலிருந்தும் அழைப்புகள் வந்த போதும் இதயத்திருடனின் வெளியீட்டுக்குப் பின் பார்க்கலாம் என்று கூறிவிட்டார்.

இதயத்திருடன் சுமாரான வெற்றியைப் பெற்றதனால் இப்போது மேலும் சில திரைப் படங்களில் ஒப்பந்தமாகியிருக்கிறார். ஆனாலும் 1980 இல் அவசரப்பட்டு இப்படியொரு முடிவினை எடுக்காமல் இருந்தால் இன்று அவரும் ஒரு சூப்பர் ஸ்டாராக வந்திருக்கலாம்.

அந்தக் காலத்தில் தொலைக்காட்சிகள் கிடையாது. வானொலி மட்டும்தான். ரஜனிகாந்துடன் இவர் சேர்ந்து நடித்த 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற திரைப்படத்தில் இவருக்காக எஸ்.பி. பால சுப்பிரமணியம் பாடிய 'தங்க தேரோடும் வீதியிலே' என்ற பாடல் அடிக்கடி ஒலிபரப்பாகியது. குறிப்பாக இலங்கை வானொலியில் அந்தப் பாடல் அடிக்கடி ஒலிபரப்பாகும். இன்றுகூட அந்தப் பாடல் எப்போதாவது ஒலிக்கும் போது ஜெயசந்திரனை யாருக்காவது நினைவுக்கு கொண்டு வரமுடியுமா?

'சிவாஜி' வெளியாகி பலவாரங்கள் சென்றும் இன்னமும் கூட்டம் குறையவில்லை. இந்தப் படம் ரஜனிக்கு ஒரு மைல் கல் என்பதோடு இன்னொரு சந்தோஷமான விஷயம் ரஜனியின் அடுத்த படம் இன்னும் மூன்று மாதங்களுக்குள் முடிவாகுமாம். மாயக்கண்ணாடி தோல்வியினால் நொடிந்து போயுள்ள தயாரிப்பாளர் பஞ்சு அருணாச்சலம் தான் அடுத்த ரஜனி பட தயாரிப்பாளர் என கோடம்பாக்கம் குருவி கூவிய போதும் ரஜனிக்காக சிவாஜி பிலிம்ஸ் பிரபு 'வேட்டையன்' என்ற பெயரில் ஒரு கதையை தயார் செய்து அவர் வரவுக்காக காத்திருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. முன்னர் வசூல் சக்கரவர்த்தியாக இருந்த எம்.ஜி. ஆருக்காக அவரின் கடைக்கண் பார்வைக்காக தயாரிப்பாளர்கள் வரிசையில் காத்திருந்தார்கள். அதே நிலைமைதான் சூப்பர் ஸ்டார் ரஜனிக்கும். அதே சமயம் 'சிவாஜி' பரபரப்புக்கிடையில் 'தல' அஜீத்தின் 'கீரிடம்' வெளிவந்து வெற்றிகரமாக ஓடுவதால் அஜீத் குஷியாகிவிட்டார். பில்லாவுக்கு பின் 'புல்'லாக தன்னை மாற்றிக்கொண்டு தில்லான கதைக்களத்துடன் அடுத்த படத்துக்கு தயாராகி வருகின்றார். கீரிடம் உண்மையிலேயே அஜீத் தலையில் வெற்றி கீரிடத்தை ஏற்றி விட்டது.

## பேனா நண்பர்கள்



பெயர் : கந்தையா பிரதீபன்
வயது : 17
முகவரி: சுதந்திரபுரம் மத்தி, உடையார்கட்டு, முல்லைவீதி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கிரிக்கெட்



பெயர் : எம்.லம்ஹூர்
வயது : 21
முகவரி: எஸ்.ஆர்.ஸ்ரோர்ஸ், தாயிப் நகர்,. ஆலங்குடா, ஏத்தாளை, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி கிரிக்கெட்



பெயர் : து.கயுனா
வயது: 19
முகவரி:58, நெடுங்குளம்,கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி கதை எழுதுதல்.



பெயர் : ஏ.ஜி.ஏ.சஜீர்
வயது: 19
முகவரி:03ஏ, பெரேரா மாவத்தை, மீத்தொட்ட வீதி, கொலன்னாவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, இணையம்.



பெயர் : கார்த்திகா இந்திரன்
வயது: 17
முகவரி:கேரைதீவு வீதி, நாவற்குழி தெற்கு, கைதடி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி



பெயர் : எம்.அப்துல்லா முகைதீன்
வயது: 12
முகவரி:16/7,மீத்தொட்டமுல்லவீதி, வெல்லம்பிட்டி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம், கவிதை

## பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியுடன், தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி
'பேனா நண்பர்கள்'
இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.




விஞ்ஞானச் சிறுகதை

அதிக நேரம் மணிப் பொத்தானை அழுத்தியதும் தான் கதவு திறந்தது. உடல் முழுவதும் சந்தேகத்துடன் ஓர் ஆசாமி, கதவை அடைத்துக்கொண்டு நின்றான். ''உங்களுக்கு யார் வேண்டும்?'' என்றான்.


''டாக்டர் அவர்களைப் பார்க்க வேண்டும்'' என்றார் ஆத்மா.

''முன்பே சொல்லியிருக்கிறீர்களா?''

''ஆம்.''

''பெயர்?''

''ஆத்மா.''



''ஒரு நிமிஷம்.''

கதவு மூடிக்கொண்டது. ஆத்மா தம் கைகளை உரைத்துச் சூடாக்கிக் கொண்டார். சந்தடியில்லாத தனியான இடத்தில் வீடு. இங்கிருந்து நாகரிகத்துக்கு இருபது மைல் இருக்கும். பழங்காலத்து வீடு. சற்று வயதான கட்டடம். கதவு திறந்தது.

''உள்ளே வாருங்கள்.''

உள்ளே பழுத்த ஆப்பிளின் மணமும் வார்னிஷ் மணமும் மெலிதாக வீசின. சிவப்புக் கம்பளம் ஆங்காங்கே பிராணன் விட்டிருந்தது. ஒரு குட்டி நாய் சாஸ்திரத்துக்கு 'வள்' என்று குரைத்துவிட்டு உடனே வாலை 'விஷ் விஷ்' என்று ஆட்டத் தொடங்கியது. மரமாடிப்படி முனங்கியது.

மாடி அறையில் ஒரு நாற்காலியில் ஆத்மாவை உட்கார வைத்துவிட்டு ஒன்றும் தெரிவிக்காமல் காணாமற் போனான் அந்தச் சந்தேகன். ஆத்மாவுக்கு அந்த மௌனம் பழக்க மில்லாததாக இருந்தது. எதிரே புத்தக வெள்ளமாக அலுமாரிகள். சுவரில் படங்கள், கவிதை.

Time you old Gypsman will you not stay
Put up your Caravan just for one day

செங்கல் நிறத் திரைகளின் ஊடே ஆதிகாலத்துச் சூரியன் மஞ்சள் குங்குமத்துடன் தெரிந்தான். சூரியனுக்கும் வயதாகிறது.

''ஹலோ மிஸ்டர் ஆத்மா! நீங்கள் அரை மணி தாமதமாக வந்திருக்கிறீர்கள்.''

டாக்டர்! இவரா டாக்டர்!

''மன்னிக்கவும். இந்த இடத்தைக் கண்டு பிடிப்பது சிரமமாக இருந்தது.''

''ஆம். கொஞ்சம் தனியான இடமில்லையா? வரைபடம் கொடுத்திருந்தேனே வருவதற்கு வழிகாட்டி. அது உபயோகப்படவில்லையா?''

''பட்டது..... இருந்தும்... சிரமமாகத்தான் இருந்தது.''

''ஒளிந்துகொண்டிருக்கிறேன். இல்லையா? அந்த வரைபடத்தைத் தருகிறீர்களா?''

வரைபடத்தை வாங்கிக் கிழித்துப் போட்ட டாக்டருக்கு அறுபத்தி சொச்சம் வயதிருக்கும். மண்டையின் முன்பாகம் முழுவதும் வழுக்கை. பழைய ஞாபத்துக்குக் காதுகளின் அருகேயும் பக்கவாட்டிலும் இரண்டு உரோமத் திட்டுகள். கண்ணாடி மூக்கின் நுனிக்குச் சரிந்திருந்தது. பற்கள் பழுதாகி இருந்தன. தமக்கு ஒவ்வாத பெரிய கோட் அணிந்திருந்தார்.எதிரே சென்று அந்தத் திரையைத் தளர்த்திச் சூரிய வெளிச்சத்தை மறைத்துவிட்டு ஆத்மாவின் அருகில் வந்து உட்கார்ந்தார்.

''சொல்லுங்கள்'' என்றார்.

''உங்களைப் பற்றி ஒரு நண்பர் மூலம் கேள்விப்பட்டேன். முதலில் நம்பவில்லை. அதெல்லாம் நடக்குமா என்ன?''

''உங்கள் நண்பர் என்ன சொன்னார்?''

''அவர் மற்றொருவரிடம் கேள்விப்பட்டதாகச் சொன்னார்..... நண்பருக்கு நேர் அனுபவம் இல்லை என்று தெரிந்தது. எல்லாமே விநோதமாக்கப்பட்டது எனக்கு... நேராகப் பலன் கண்டவர்களை இது வரை நான் சந்திக்கவில்லை. ஆனால் அவ்வப்போது உங்கள் பெயர் எங்கள் வட்டாரத்தில் அடிபடுகிறது. அப்புறம் இந்த விநோதமான விளம்பரத்தைப் பார்த்தேன்.

அது நீங்கள் தரும் விளம்பரம்தான் என்பதே மறைமுகமாகத்தான் தெரிந்தது. 'மனத்தில் நீண்ட நாட்களாக ஆசைப்பட்டது நிறைவேற வேண்டுமா? 6.30 லிருந்து 7.30க்குள் கீழ்கண்ட எண்ணுக்கு ரெலிபோன் செய்யலாம்.' நிறைய பேர் டெலிபோன் செய்திருப்பார்களே.''

''அறுபது எழுபது பேர் தினம்! அவர்களில் மூன்று பேரைத்தான் இதுவரையில் தேர்தெடுத்திருக்கிறேன். நீங்கள் ஒருவர்.''

''ஏன் இந்த மறைமுகம்?''

''அரசாங்க பயம்! மேலும் என் சிகிச்சை பணம் உள்ளவர்கள் மட்டுமே பெறக்கூடிய சிகிச்சை.''

''பணம் நிறையக் கேட்பீர்களா?''

''கொஞ்சம் அதிகம் என்று சொல்லலாம். அது சிகிச்சையைப் பொறுத்தது.''

''வேலை செய்யுமா?''

''செய்யும்.''

''கெடுதல் ஏதாவது நேருமா?''

''கிடையாது உத்தரவாதமான சிகிச்சை மிஸ்டர் ஆத்மா. இன்றைய அரசியல் சூழ்நிலையில் என் போன்ற மேதைகளுக்கு இடமில்லை. என் லைசென்ஸைப் பிடுங்கிக் கொண்டு விட்டது இந்த அரசாங்கம். என்னைக் கைது செய்யக் காத்திருக்கிறார்கள்.... ஒரே ஒரு தடவை நிகழ்ந்த விபத்தினால்... அதுவும் முற்றும் சிகிச்சை பெற்றுக்கொண்டவரின் தவறினால் நிகழ்ந்த விபத்தால் நான் தலைமறைவாக வாழ வேண்டியிருக்கிறது. நான் அதிகப் பணம் கேட்பது என் சொந்தச் செலவுக்காக அல்ல. என் ஆராய்ச்சிக்காக''

''விபத்தா?''

''ஆம் அந்த ஆசாமி இறந்துவிட்டார். நீங்கள் பயப்படாதீர்கள். சிகிச்சையின் போது மது அருந்தக்கூடாது என்று படித்துப் படித்துச் சொல்லி எழுதிவாங்கிக் கொண்டேன்! அதை மீறிவிட்டார். உட்கொண்ட மது என் மருந்துடன் நிகழ்த்திய இரசாயனப் போராட்டதில் அவர் விழுந்துவிட்டார். அந்த மருந்தை எப்பொழுதே வீசி எறிந்துவிட்டேன். அது வேறு விஷயம்.!''

(26ஆம் பக்கம் பார்க்க)



# அரசியல்வாதிகளுக்கு 'கூஜா' தூக்கும் மலையக ஆசிரியர்கள்



மலையகப் பாடசாலைகளுக்கு சமீபத்தில் 3179 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் மலையக அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாக செயற்படுகின்றனர் என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். புதிதாக நியமனம் பெற்ற தோட்டப் பாடசாலை ஆசிரியர்களில் சுமார் 500 பேர் கடமைக்குச் செல்லாமல் அரசியல்வாதிகளின் எடுபிடிகளாக செயற்படுகின்றனர் என்று பிரதி சுகாதார அமைச்சர் வடிவேல் சுரேஷ் சமீபத்தில் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக குற்றம் சுமத்தியது தெரிந்ததே.

உங்களுக்கு நாம்தான் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுத்தோம் என்று கூறி சில மலையக அரசியல்வாதிகள் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களை தம் கைக்குள் வைத்துள்ளனர். இவர்களில் சில ஆசிரியர்கள் விருப்பத்துடன் அரசியல் வாதிகளின் பின்னால் சென்றாலும், பல ஆசிரியர்கள் தமது தொழிலுக்கு பங்கம் வந்து விடுமோ என்ற அச்சத்தில் அரசியல்வாதிகளின் பிடிக்குள் சிக்கியிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஊவா மாகாணத் தோட்டப் பாடசாலைகளுக்கு 513 ஆசிரியர்கள் சமீபத்தில் நியமனம் பெற்றனர். இவர்களில் பலர் தாங்கள் நியமனம் பெற்ற பாடசாலைகளுக்கு செல்லவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மலையக அரசியல்வாதிகளின் வைபவங்களுக்கு சுவரொட்டிகள் ஒட்டுவது, சங்கத்துக்கு ஆட்களைச் சேர்ப்பது போன்ற வேலைகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர், ஈடுபடுத்தப்படுகின்றனர்.




தோட்டப் பாடசாலைகள் இன்னும் முன்னேற்றமடையாத நிலையிலேயே இருக்கின்றன. இப்பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்களை அரசியல்வாதிகள் தமது சொந்த வேலைகளுக்கு ஈடுபடுத்துவது தோட்டத் தொழிலாளர்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

தோட்டப் பாடசாலைகளுக்கு வளப் பற்றாக்குறை இருக்கிறது. இது குறித்து மலையக அரசியல்வாதிகள் கவலைப்படுவதில்லை. இருந்தும் பிரதி சுகாதார அமைச்சர் வடிவேல் சுரேஷ் ஊவா மாகாணத்திலுள்ள நகரப் பாடசாலைகளுக்கும், தோட்டப் பாடசாலைகளுக்கும் கம்பியூட்டர்களை வழங்கி வருவது மகிழ்ச்சிக்குரியது. சில வருடங்களுக்கு முன்னர் தோட்டப் பாடசாலைகளுக்கு வழங்கவென வெளிநாடுகளிலிருந்து கிடைத்த கம்பியூட்டர்கள் போன இடம் தெரியவில்லை. ஊவா மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளுக்கு பிரதியமைச்சர் வடிவேல் சுரேஷ் கம்பியூட்டர் யுனிட்டுகளையும் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

இந்த வளங்கள் முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். கம்பியூட் டர் கற்றுத் தேர்ந்தவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. இது அறிந்தும் தோட்டப் பாடசாலை அதிபர்கள் கவனம் செலுத்த வேண்டும். வழங்கப்பட்டுள்ள கம்பியூட்டர்களை மாணவர்களுக்கு பயன்படும் விதத்தில் பாவிக்க வேண்டும்.

மலையக தோட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகள் கல்வியில் தேர்ச்சி பெற்று வெளியிடங்களில் வேலை வாய்ப்புகளைப் பெற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்திலேயே பிரதியமைச்சர் வடிவேல் சுரேஷ் போன்ற சில அரசில்வாதிகள் முழுமூச்சுடன் கடமையாற்றி வருகின்றனர். வடிவேல் சுரேஷ் பிரதியமைச்சர் பொறுப்பை ஏற்ற பின்னர் பல தோட்ட இளைஞர்களுக்கு பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட பல்வேறு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்துள்ளார். தோட்ட யுவதிகள் அரச ஆஸ்பத்திரிகளில் தாதிகளாக தொழில் புரியும் வகையில் பயிற்சிகளை வழங்க ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதுவும் இவரது முயற்சியின் பயனே! மலையக தோட்ட இளைஞர்கள் தோட்டங்களை விட்டு வெளியே வந்து வாழ்க்கையில் உயர வேண்டுமென சில அரசியல்வாதிகள் எண்ணுகின்றனர். ஆனால் வேறுபல அரசியல்வாதிகளோ தோட்டத் தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு வெளியே வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்துடனே காய்களை நகர்த்துகின்றனர். தோட்ட இளைஞர் யுவதிகளின் கல்வித் தரத்தை உயர்த்த இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை வரவழைப்போம் என்று முழங்கினர். இருந்தும் எதுவும் நடக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் பெற்றோரைப் போல் தோட்டங்களிலேயே வேலை செய்ய வேண்டும் என்பதே இந்த அரசியல்வாதிகளின் விருப்பம். அப்போது தான் தமது தொழிற் சங்கங்களுக்கு சந்தாவும் தமது சுகபோக அரசியல்வாழ்க்கைக்கு வாக்குகளும் கிடைக்குமென்பதே இவர்களது எண்ணம்.

**எஸ். கணேசன்**

மலையக மக்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார, கலை கலாசார, கல்வி மற்றும் இன்னோரன்ன அத்தியாவசிய பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**மலையகக் கண்ணோட்டம்**
**சுடர்ஒளி வார இதழ்**
இல. 85, ஜயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | நேரம் | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6.00 | காலைநேரச் செய்திகள் | காலை நேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | 6.00 | நிகழ்ச்சிகள் ஆரம்பம், | நிகழ்ச்சிகள் ஆரம்பம், |
| 6.30 | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | 6.30 | சங்கீத மேடை | சங்கீத மேடை |
| | | | | | | 7.30 | சகலகலா குட்டீஸ் | சிறுவர் கல்வி |
| 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | 7.00 | ராசிபலன் | கார்ட்டூன் |
| 8.30 | கொமடி டைம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | கொண்டாட்டம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | நம்மநேரம் | 8.00 | வினோத உலகம் | அரட்டை அரங்கம் |
| 9.00 | உங்கள் சொய்ஸ் | சுப்ப 10 | நீங்கள் கேட்டபாடல் | சுப்பர் 10 | என்றும் கலாட்டா | 8.30 | | கலாசாரம் |
| 9.30 | நேற்று இன்று நாளை | இயக்குநர் பார்வை | நட்சத்திரம் | இயக்குநர் பார்வை | நடித்ததில் பிடித்தது | 9.00 | அறிவு | வந்துட்டாங்கய்யா |
| 10.00 | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | 9.30 | ஹவுஸிங் லோக்கல் | சின்னச்சின்ன ஆசைகள் |
| 10.30 | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | 10.00 | நான் அவன் இல்லை | |
| 11.00 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | 10.30 | ஹவுஸ் புள் | சண்டே சமையல் |
| 11.30 | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | 11.00 | பாட்டுக்குப் பாட்டு | பமிலி கேம் ஷோ |
| 12.00 | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | 11.30 | சினி சொய்ஸ் | இளைய கானம் |
| 12.30 | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கை | 12.00 | 7788 | அசத்தப்போவது யாரு? |
| 01.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதியசெய்திகள் | 12.30 | | |
| 01.15 | சக்திமூவி | சக்திமூவி | சக்திமூவி | சக்திமூவி | சக்திமூவி | 1.00 | சக்திமூவி | சக்திமூவி |
| 04.00 | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | 4.00 | ஜொலிவூட் எக்ஸ்பிரஸ் | எஸ்.எம்.எஸ். கலாட்டா |
| 4.30 | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | 4.30 | ஷொனிக்கெச்ரெக் | |
| 5.00 | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | 5.00 | மிக்ஸ்ஸ்ராட் | சந்திப்போமா |
| 5.30 | அட்வென்சர் ஒப் ஹீமான் | அட்வென்சர் ஒப் ஹீமான் | அட்வென்சர் ஒப் ஹீமான் | அட்வென்சர் ஒப் ஹீமான் | அட்வென்சர் ஒப் ஹீமான் | 5.30 | | |
| 6.00 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | கொமடிரைம் | பத்துபாடல்கள் | இசைத் தென்றல் | 6.00 | ஸ்போட்ஸ் ரவுண்ட் | மின்னல் |
| 6.30 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | 6.30 | திமிதகதா | |
| 7.00 | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | 7.00 | சக்தி சுப்பர் ஸ்டார் | |
| 7.30 | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | 7.30 | | |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | 8.00 | செய்திகள் | செய்திகள் |
| 8.30 | செல்வி | செல்வி | செல்வி | செல்வி | செல்வி | 8.30 | வா வாத்தியாரே வா | வா வாத்தியாரே வா |
| 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் |
| 9.30 | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | மிக் நியூஸ் | 9.30 | நைற் மூவி | உலக விளையாட்டு |
| 10.00 | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | லக்ஷ்மி | 10.00 | | 24 சிரிஸ் |
| 10.30 | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | | 10.30 | | |
| 11.00 | | | | | நைற் மூவி | 11.00 | | புதுபாடல் |
| 11.30 | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | | 11.30 | | புத்தம்புதிசு |
| 12.00 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | 12.00 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு |

மணித்தியாலச் செய்திகள் 10.25, 11.25, 14.25, 15.25, 16.25, 17.25

# பல்சுவை

கலைநாவுக்கரசர்



## புஷ்ஷை எதிர்க்கும் பூக்கள்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாடு நடைபெற்றது. அப்போது கலந்து கொள்ள உலகத் தலைவர்கள் அங்கு வந்த வண்ணம் இருந்தனர். அப்போது அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எதிராக பதாதைகளை ஏந்தி இந்த இளம் பூக்கள் போஸ் கொடுத்தனர். இந்த போராட்டத்துக்கு முன்னதாக அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவர்டுடன் ஜோர்ஜ் புஷ் பேசினார். அப்போது ஈராக்கில் படைகளை பயன்படுத்துவதில் தொடர்ந்து உறுதியுடன் இருக்க தீர்மானித்தனர். அப்போது தான் அங்கு வன் முறைகளை கட்டுப் படுத்த முடியும் என்பது அவர் களின் கருத்து.



## குழம்பிய மனமும் குரூர குணமும்

படத்தில் சாதுபோல படுத்திருக்கும் பெண் மரியா போன்மிம். இவரது காலில் சங்கிலி போட்டு கட்டியுள்ளனர் பெற்றோர். காரணம், இவர் ஒரு பயங்கர மனநோயாளி. பிரேசில் நாட்டில் காரிபாசை சேர்ந்தவர் இவர். தந்தை ஜோஸ் வியராவுக்கு அரசாங்க உதவித் தொகையாக ரு.1,700 தான் கிடைக்கிறது. அதை வைத்து ஓரளவு மருந்து வாங்கி, மரியாவை குணப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறார். ஆனாலும் மரியாவின் கால் சங்கிலியை கழட்டிவிடுவதே இல்லை. காரணம், எந்த பிராணியை பார்த்தாலும் உடனே அதை வெறும் கைகளாலேயே கொன்று விடுகிறார். சமீபத்தில் அவரிடம் சிக்கி சின்னாபின்னமானது ஒரு பன்றி. மரியாவை, வெறும் தரையில் மெத்தை போட்டு படுக்க வைத்துள்ளனர். இவரை கட்டிலில் படுக்க வைத்தாலோ, வேறு ஏதாவது தளபாடம் அருகில் இருத்தினாலோ... அவ்வளவு தான். அதை துவம்சம் செய்து விடுகிறார். காரிபாஸ் நகரில் மனநல மருத்துவமனை கிடையாது. சிறிய கிளினிக் மட்டுமே இருப்பதால் மரியாவின் சோகம் தொடர்கிறது.


## சோனியா சோனியா சொக்க வைக்கும் சோனியா





எலெக்ட்ரோனிக்கல் உலகின் முடிசூடா மன்னனானசோனி, இசைக்கருவிகள் பொழுதுபோக்கு சாதனங்கள், ரோபோக்கள் என்று தினமும் ஒரு தயாரிப்பை அறிமுகம் செய்துகொண்டிருக்கிறது. அந்த வகையில் தற்போது அந்த நிறுவனம் ரோலி என்ற பெயரில் மியூசிக் பிளேயரை அறிமுகம் செய்திருக்கிறது. மொடல் ஒருவர் காட்டும் இந்த பிளேயரில் 1ஜி.பி நினைவுத் திறன் இருப்பதால் எமக்குத் தேவையான தகவல்களை சேமித்து வைத்துக் கொள்ளலாம்.

எம்.பி.3 பிளேயர், அட்ராக் தொழில் நுட்பத்துடன் கூடிய சிடி இயக்கும் வசதி, ஏஏசி டிஜிட்டல் ஓடியோ தொழில்நுட்பம் ஆகியவை இதில் உள்ளன. 10.4 செ.மீ நீளமும், 6.5 செ.மீ விட்டமும் கொண்ட இந்த பிளேயர் வரும் 29ஆம் திகதி விற்பனைக்கு விடப்பட உள்ளது.

## கொஞ்சம் கொஞ்சம் கலை



சீனாவில் நவீன கலைகள், ஓவியங்களுக்கு மதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதிநவீன கலைப் படைப்புக்களை ஏலத்தில் பணத்தைக் கொட்டி வாங்க பலர் தயாராக இருக்கின்றனர். சீனக் கலைத் துறையில் சமீப காலமாக மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதற்கு அடையாளமாக ஷாங்காயில் நடைபெறும் கண்காட்சியில் அப்பிள்களைத் தரையில் பரப்பி, ரோலரினால் நசுக்கி ஒரு ஓவியத்தை உருவாக்குகின்றனர். அதற்காக கொட்டப்பட்ட அப்பிள்களை நாசூக்காக நசுக்கும் பணியில் ரோலர் ஈடுபட்டுள்ளது.



## விளையாடும் குழந்தைக்கு விண்வெளிக் கனவு

எந்த ஒரு தாயும் தனது குழந்தை பிற்காலத்தில் மிகப் பெரிய சாதனையாளராக உருவாக வேண்டுமென்று கனவு காண்பது இயல்புதான். படத்தில் தனது மகனை விண்வெளி வீரர் உடையில் நிற்க வைத்து புகைப்படம் எடுக்கும் இந்த தென் கொரியப் பெண்ணும் அதே வகைதான். தென்கொரியாவின் சியோல் நகரில் நடைபெற்ற விண்வெளி கண்காட்சியில் தான் இந்த புகைப்பட உற்சவம். தென்கொரியா, அடுத்த ஆண்டு ரஷ்யாவின் சோயுஸ் விண்கலத்தில் ஒரு ரோபோ தொழில் நுட்ப வல்லுநரை சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்ப இருக்கிறது. 30 வயதாகும் அந்த வல்லுநர்தான் விண்வெளிக்குச் செல்லும் முதல் தென்கொரியர் என்கிறது அந்தநாடு.

## வாழை மீனல்ல வாள் மீன்

சோமாலியா நாட்டின் கடல்பகுதிகளில் இப்போது மீன் சீசன். சமீப காலமாக மீனவர்களின் வலையில் விதவிதமான மீன்கள் சிக்குகின்றன. இங்கே ஒரு மீனவர் தலைமீது வாழைமரத்தின் சைஸில் தூக்கிச் செல்வது வாளை மீனல்ல, போர் வாளைப் போலிருக்கும் இது வாள் மீன் 'ஸ்வார்ட் பிஷ்' என்று ஆங்கிலத்தில் இதனை அழைக்கின்றனர். வாளைப் போலவே பளபள என்று ஜொலிக்கும் மீனைப் பிடித்தவருக்கு வாழ்வு தான்.






நி.சங்கவி,
மீசாலை.

கேள்வி: பித்துமாமா! அரசியல்வாதிகளை எவற்றுடன் ஒப்பிடலாம் என்று சொல்லுங்கள்?

பதில்: கொசுவுக்கு ஒப்பிடலாம். இரண்டும் அப்பாவி மக்களின் இரத்தத்தை உறிஞ்சித்தான் பிழைப்பு நடத்துகின்றன.

கனகராஜ்,
பத்தனை.

கேள்வி: புகைத்தல் உடல் நலத்துக்கு கேடு என்று சிகரெட் பெட்டிகளில் போடப்பட்டுள்ளதே, சிகரெட் குடித்தால் கான்சர் வருமா?

பதில்:



என்னைப் பார்த்தால் ‘டாக்குத்தர்’ மாதிரியா தெரியுது? என்றாலும் பரவாயில்லை. என்னுடைய பாணியில் பதில் தருகின்றேன். கான்சர் வருமோ என்னமோ? நான் குடித்தேன். புகை மட்டும்தான்யா வருகிறது.

முருகானந்தன்,
கல்கிசை.

கேள்வி: பித்தா! நான் ஒரு பெண்ணை மிகவும் காதலிக்கிறேன். அவளிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?



பதில்: பூவைப்போல நேசிக்கணும்; புல்லாங்குழல் போல வாசிக்கணும்.

கார்த்திகேசு தயாளினி,
வவுனியா.

கேள்வி: இன்று பால்மாவின் விலை அதிகரிப்பால் பச்சைக் குழந்தைகளின் வயிற்றில் அடிக்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்த இடம் இல்லையா?

பதில்: பால்மாக்களின் விலை அதிகரிப்பு, குழந்தைகளின் வயிற்றை விட அம்மாக்களின் வயிற்றில் தான் அதிகமாக அடித்துள்ளது. குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க மறுக்கும் பெண்கள் அதிகமாக உள்ள நம் நாட்டில், பெற்றோர்களின் பெயரைக் கேட்டால் உம்பா... ஆஅஅ.. என்று கத்தி லக்ஸ்பிறே, நெக்ஸ்பிறே, அங்கர், லக்ரோஜன் என்பவற்றைக் குடிக்கும் குழந்தைகள் இனி அம்மா, அப்பா என்று சொல்வதைக் கேட்டு சந்தோஷமடையுங்கள்.

க.தனஞ்சயன்,
மட்டக்குளி.

கேள்வி: பித்தண்ணை! உலகில் ஆன்மீகம் பரவியுள்ள அளவுக்கு பகுத்தறிவு பரவவில்லையே. என்ன காரணம் சொல்லுங்கள்?



பதில்: இனிப்புக் கடைகள் இருக்கின்ற அளவுக்கு மருந்துக்கடைகள் இருப்பதில்லையே!

செந்தில்குமார்,
நுவரெலியா.

கேள்வி: ‘‘நான்தான் கப்டன். ஆட வருகிறவர் எல்லாம் ஆட வரலாம்’’ என்கிறாரே கப்டன் விஜயகாந்த். அவரது ஆட்டம் நிலைக்குமா பித்தா?




பதில்: ‘நான்தான் கப்டன் என்றதெல்லாம் பழைய கதை. காங்கிரஸ் கட்சியுடன் கப்டன் கூட்டணி சேர்ந்து தமிழகத்தில் புதிய அணி உருவாகவுள்ளதை நீர் அறியவில்லையா?

பிரேமரூபன்,
பரிஸ்.

கேள்வி: உடலிலுள்ள அங்கங்கள் அனைத்தும் தெரியும்படியாக உடை உடுத்தும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அவர்களை கடவுள்தான் காப்பாற்றணும்.

ஓர் இளம் சிங்கள தம்பதி தமது வீட்டு புதுமனைப்புகு விழாவுக்கு நான் வர வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களை எனக்கு தெரியாத போதிலும், கட்டாயத்துக்காகச் சென்றேன். வீட்டைக் கட்டுவதற்கு நிறைய செலவழித்திருக்க வேண்டும். முன்புறம் பூமரங்கள் கொண்ட நீண்ட அழகான பாதையைத் தாண்டி வீட்டை அடைய வேண்டியதாயிற்று.



‘‘முன் புறம் எவ்வளவு அழகாக இருக்கிறது மிசிஸ்குமார’’ என்று பாராட்டினேன்.

இதைக் கேட்டு பூரித்துப் போன அப்பெண்

‘‘இன்னும் பின்புறத்தைப் பார்க்கவில்லையே!’’ என்றாள்.

வாசகர்களிடமிருந்து ‘பித்தன் பதில்கள்’ களுக்கான வினாக்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்ப வேண்டிய முகவரி:
**‘பித்தன் பதில்கள்’**
**சுடர் ஒளி (வாரஇதழ்)**
**இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு- 14.**

# யயாதி...

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

‘‘ஆம் அந்த ஆசாமி இறந்துவிட்டார். நீங்கள் பயப்படாதீர்கள். சிகிச்சையின் போது மது அருந்தக்கூடாது என்று படித்துப் படித்துச் சொல்லி எழுதிவாங்கிக் கொண்டேன்! அதை மீறிவிட்டார். உட்கொண்ட மது என் மருந்துடன் நிகழ்த்திய இரசாயனப் போராட்டதில் அவர் விழுந்து விட்டார். அந்த மருந்தை அப்பொழுதே வீசி எறிந்துவிட்டேன். அது வேறு விஷயம்.!’’

ஆத்மா தம் மார்பைச் சொறிந்துகொண்டார். சிந்தனை பேதலிக்கும்போது அவர் அப்படிச் செய்வார்.

‘‘உங்கள் வயது?’’

‘‘அறுபது’’ என்றார் ஆத்மா.

‘‘அறுபதுக்கு அதிக நரை! அதிகத் தளர்ச்சி... கொஞ்சம் இருங்கள்.’’

டாக்டர் பலவித சாதனங்களைக் கொண்டு வந்து ஆத்மாவின் இரத்த அழுத்தம், சிறுநீர், இதயத்துடிப்பு, கண்கள், உணர்ச்சி, நரம்புகளின் இயக்கம் எல்லாவற்றையும் நிதானமாகப் பார்த்தார்.

‘‘இரத்த அழுத்தம் வயதுக்கு அதிகம். கிட்னி கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதயத்தில் கொஞ்சம் மர்மர் கேட்கிறது. இன்னும் நான்கு வருஷங்கள் தள்ளும்.’’

ஆத்மா திடுக்கிட்டார். மறுபடியும் மார்பைச் சொறிந்துகொண்டார்.

‘‘சிகிச்சை எடுத்துக்கொண்டால்?’’

‘‘ சொல்கிறேன் உங்களுக்கு எத்தனை வயசு வேண்டும்?’’

‘‘புரியவில்லை.’’

‘‘உங்கள் வாழ்வில் நீங்கள் எந்த வயசில் ஓர் உன்னத நிலையில் இருந்தீர்கள்? யோசித்துச் சொல்லுங்கள். எல்லா விதத்திலும்.. உடலில் உள்ளத்தில்...’’

ஆத்மா யோசித்தார். எட்டு வயது? ம்ஹூம். டைபாய்ட் காய்ச்சலில் படுத்திருந்தேன். பன்னிரண்டு? ம்ஹூம் ஒல்லியாக இருந்தேன். பதினெட்டு? கல்லூரியில் கடைசி பெஞ்சில் உட்கார்ந்திருந்தேன். இருபது முதல் வேலையில் இராப்பகலாக கண்விழித்திருந்தேன். முப்பது? கல்யாணம் செய்து கொண்டு விட்டேன். இருபத்தைந்து! ஆம், இருபத்தைந்து வயதில் தான் அளவான புத்தகங்கள் படித்திருக்கிறேன். கார் ஒன்று வாங்கியிருந்தேன். போதுமான பணம் இருந்தது. நித்தியா என்ற அந்தப் பெண்ணைச் சந்தித்தேன். இரண்டு மூன்று கவிதைகள் எழுதியிருந்தேன். வெளிநாடு சென்றிருந்தேன். விதவிதமான அனுபவ ஆரம்பங்களைத் தொட்டேன்.

‘‘இருபத்தைந்து! ’’என்றார் ஆத்மா.

‘‘நல்ல தேர்வு’’

‘‘அப்படி என்றால் என்னை இருபத்தைந்து வயதுக்கு மாற்றிவிட முடியுமா உங்களால்?’’

‘‘ஹ’’

‘‘ஹ என்றால்?’’

‘‘ஏன் முடியாது?’’ என்று கையைச் சொடுக்கி ‘‘முடியும், நிச்சயம் முடியும்’’ என்றார்.

‘‘ நம்ப முடியவில்லை..’’

‘‘நீங்கள் மருந்து சாப்பிட்டுவிட்டுப் பணம் கொடுங்கள். உத்தரவாதம் போதுமா?’’

‘‘நான் பணத்துக்கு சொல்லவில்லை எனக்கு இந்த தந்திர சிகிச்சை தான் புரியவில்லை.’’

‘‘தந்திரமில்லைஇது. கலப்படம் இல்லாத விஞ்ஞானம் . உங்கள் மெட்ட பாலிஸத்தையும் ம்யூடேஷனையும் தலைகீழாகக் கவிழ்த்து விடுகிறது என் மருந்து. உங்களுக்கு கெமிஸ்ரி வருமா?’’

‘‘வராது’’

‘‘சரி உங்களுக்கு எப்படி புரிய வைப்பது? ஒரு நிமிஷம்! கீழே வரும் போது ஒரு நாயைப் பார்த்தீர்கள் அல்லவா?’’

‘‘ஆம்.’’

‘‘இந்தப் போட்டோவைப் பாருங்கள்.’’

எதிரே மாட்டியிருந்த போட்டோக்கள் ஒன்றில் டாக்டர் சிரித்துக்கொண்டு நின்றிருக்க, அருகில் ஆளுயரக் கோம்பை நாய் ஒன்று நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்தது.

‘‘அதுதான் கீழே பார்த்த நாய்’’ என்றார் டாக்டர்.

‘‘நான் பார்த்தது குட்டி நாயல்லவா?’’

‘‘ இரண்டு வேளை மருந்து செய்த வேலை!’’ என்று கண் சிமிட்டடினார் டாக்டர்.

ஆத்மா அந்த வயதான டாக்டரைப் பார்த்தார். யார் இவர்? பொய் ஆசாமியா? இல்லை. இவர் என் உடம்பைப் பரிசோதித்து சொன்னது மற்ற டாக்டர் சொன்னதுடன் பொருந்துகிறதே. இருந்தும் இது சாத்தியமா? இந்தக் காலத்தில் என்னென்னவோ மாத்திரைகள் எல்லாம் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதுவும் சாத்தியமாக இருக்கலாமே!

ஒரு யுவதி இரண்டு கோப்பைகளில் பருகபானம் கொண்டு வந்தாள். மேசையின் மேல் வைத்துவிட்டுத் திரும்பினாள். ‘‘ சச்சு கொஞ்சம் இரு’’ என்றார் டாக்டர்.

‘‘இது யார் தெரியுமா, மிஸ்டர் ஆத்மா?’’

‘‘உங்கள் பேத்தியா?’’

பஹ்!’என்று சிரித்துவிட்டு, ‘‘இது என் மனைவி. ஆறுவேளை சாப்பிட்டிருக்கிறாள். சச்சு திரும்புடி’’ என்றார்.

ஆத்மாவைச் சவால் விடுவது போல் பார்த்த அந்தப் பெண்ணின் கன்னங்களில் ஆப்பிள் தெரிந்தது. உடலில் இளமை எழுதியிருந்தது.

‘‘எப்படி இருக்கிறாள், பாருங்கள், வில் மாதிரி விண் என்று.’’

‘‘போங்க அத்தான்’’ என்று அவள் அலட்சியமாக கூறிச் சென்றாள். ஆத்மாவின் மனதில் சற்று நேரம் அவள் பாக்கி இருந்தாள்.

‘‘என்னால் அவளைப் பார்க்கத்தான் முடியும். வேறு ஒன்றும் செய்யமுடியாது’’ என்றார் டாக்டர்.

‘‘டாக்டர், நீங்களே ஏன் மருந்து சாப்பிடவில்லை.?’’

‘‘ஹ்ம்! இந்தக் கேள்வி கேட்பீர்கள் என்று தெரியும். எனக்கு இன்னும் வேளை வரவில்லை. மற்றவர்களுக்காக நான் தியாகம் செய்து கொண்டிருக்கிறேன்! நான் மருந்து சாப்பிட்டு இளம் வயதை எய்திவிட்டால் நான் செய்த ஆராய்ச்சி எல்லாம் பாழ். இதன் ஃபார்முலா எல்லாம் (தலையை தொட்டு) இங்கே இருக்கிறது. எல்லாம் மறந்துவிட்டால் மறுபடியும் முதலிலிருந்து ஆரம்பிக்கவேண்டும்!’’

‘‘எழுதி வைத்துவிடுவதுதானே!’’

‘‘எழுதிக்கொண்டிருக்கிறேன், எழுதிக் கொண்டிருக்கிறேன்! ஒரு வேளை மருந்து தயாரிப்பதற்கே ஆறு மாதங்கள் ஆகிறது. தயாரிப்பு முறையை எழுதுவதற்கு வருடக் கணக்கில் ஆகும். எனக்கு ஒன்றும் அவசரமில்லை. உள்ளே வாருங்கள். உங்களை மன்மதன் மாதிரி மாற்றிவிடுகிறேன். உத்தரவாதம்....... யயாதி கதை தெரியுமா உங்களுக்கு?’’

‘‘புராண காலத்திலிருந்தே இளமைக்கு மருந்தைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்... காயகல்பங்களும்... அமிர்தங்களும் அதெல்லாம் கற்பனைகள். இது நிஜம். கொஞ்சம் படுத்துக் கொள்ளுங்கள். உங்கள் இரத்த அழுத்தத்தை மறுபடியும் சோதிக்க வேண்டும்.’’

அந்த மருந்து தங்கநிறத்தில் இருந்தது. தத்தளித்தது.

‘‘ வீட்டில் குளிர்பானப் பெட்டி இருக்கிறதல்லவா...? அதில் இந்த மருந்தை வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு நாளைக்கு ஒருவேளை சாப்பிடுங்கள். மயக்கம் வந்தால் பேசாமல் படுத்துக்கொள்ளுங்கள். ஒரு வாரத்துக்கு வீட்டை விட்டு வெளியே போகாதீர்கள். அதிகப் பேரைச் சந்திக்காதீர்கள். மார்க் பண்ணியிருக்கிற அளவுக்கு மேல் சாப்பிடாதீர்கள். பெண்ணுறவு, மாமிசம், மது எதுவும் கூடாது. மிகக் குறைந்த அளவு கோதுமைப் பண்டங்களைச் சாப்பிடுங்கள். உங்கள் விலாசத்தைக் கொடுத்துவிட்டு செல்லுங்கள். நான் வந்து மூன்று நாட்களில் உங்களைப் பார்க்கிறேன்.’’

‘‘பணம்?’’

‘‘ வருகிறேன் இன்றைக்கு என்ன தேதி? ஐந்து. 14ஆம் தேதியிட்டு எனக்கு ஒரு செக் எழுதிக்கொடுங்கள் போதும். அதற்குள் உங்களுக்கு ஒன்றும் நிகழவில்லை என்றால் உடனே நீங்கள் உங்கள் பாங்கிற்கு டெலிபோன் செய்து செக்கை ரத்து செய்துவிடலாம்..’’

‘‘நிகழ்ந்தால், மருந்து வேலை செய்தால்?’’

டாக்டர் சிரித்து ‘‘மிஸ்டர் ஆத்மா நீங்கள் இருபத்து ஐந்து வயதை எய்திவிடுவீர்கள். என்னைச் சந்தித்ததை, என்னிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டதை, எனக்குச் செக் எழுதிக்கொடுத்ததை எல்லாம் மறந்துவிடுவீர்கள்! அப்படி ஞாபகம் பாக்கி இருந்தாலும் இந்தத் தொகையை மனமுவந்து கொடுக்கத் தயங்க மாட்டீர்கள். இளமை விலையற்றது.’’

‘‘தொகை எவ்வளவு?’’

‘‘எழுபத்து ஐந்தாயிரம்.’’

‘‘அடேயப்பா! ஏறக்குறை என் வாழ்நாள் முழுவதும் சேர்த்து வைத்தது.’’

‘‘கிடைக்கபோவது மற்றொரு வாழ்நாள் மிஸ்டர் ஆத்மா?’’

நான்காவது தினம், ஆத்மாவின் விலாசத்தை வைத்துக்கொண்டு டாக்டர் மெதுவாக அந்த வீட்டின் வாசலை நெருங்கினார். துணுக்குற்றார்.

வீட்டு வாசலில் ஒரு சிறிய கூட்டம் இருந்தது. அமைதியாக ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு இருந்தார்கள். ஒரு பொலீஸ் தொப்பி தென்பட்டது.

‘‘ என்ன சேர் ஆச்சு ?’’

‘‘ இந்த வீட்டில் ஒரு வயதானவர் இருந்தார். ரொம்ப நல்ல மனுஷன்... தனியாகத்தான் இருந்தார்.’’

‘‘என்ன ஆச்சு அவருக்கு’’

‘‘காணமல் போயிட்டாரு! அதெல்லாம் ஆச்சரியம் இல்லை. அவர் எங்காவது ஊருக்கு கீருக்குப் போயிருக்கலாம். ஒருத்தரும் கவனிக்கவில்லை! ஆனால் பாருங்க, பெரியவரே! நேற்று ராத்திரி வீட்டுக்குள்ளே வ்ராட்டு வ்ராட்டுன்னு அழுகைச் சத்தம் கேக்குதாம். கதவு உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டிருந்தது. பக்கத்து வீட்டுக் காரங்க ஜன்னல் வழியா எட்டிப் பார்த்தா உள்ளே...’’

‘‘உள்ளே?’’

‘‘நீங்களே போய்ப் பாருங்களேன். ஒரே மர்மம்!’’

டாக்டர் தயக்கத்துடன் உள்ளே நுழைந்தார்.

‘‘ யார்யா நீ!’’ என்றார் ஒருபொலீஸ்காரர்.

‘‘ இந்த வீட்டுக்காரருக்குத் தெரிந்தவன்... எங்கே அவர்?’’

‘‘எங்கே அவர் என்று தெரிஞ்சா நாங்க ஏன் இங்கே இருக்கோம். இந்தக் குழந்தை யாருன்னு வேறு தெரியல்லை.’’

டாக்டரின் கண்கள் அலைந்தன. அந்த மருந்து போத்தல் அலமாரியில் இருந்தது. அது காலியாக இருந்தது. அடப்பாவி! இரண்டு நாளைக்கு ஒரு வேளைச் சாப்பிடச் சொன்னா, ஒரு நாளைக்கு இரண்டு வேளை சாப்பிட்டிருக்கிறானே! கட்டிலைப் பார்த்தார்.

பெரிய பனியனை அணிந்துகொண்டு சமீபத்திய கண்ணீருடன் படுக்கையில் உட்கார்ந்திருந்த அந்த ஒரு வயதுக் குழந்தை டாக்டரைப் பார்த்து மோஹனமாச் சிரித்தது.!

(நன்றி: சுஜாதா)

# குடாநாட்டில்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

புகைப்படங்களை எடுத்து கைகளினால் படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து வழங்கியபோது கிராம அலுவலர்கள் அவற்றைப் பெற்று, உரியவர்களுக்கு அனுப்பி மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர். படைத்தரப்பினரும் கூட அதனை கையேற்று உரிய நடவடிக்கைகளை, பதிவுகளை மேற்கொண்டு பொது மக் களுக்குக் கையளித்துள்ளார்கள். இதனை விடுத்து நடைமுறைகளை நாமே உருவாக்கிக் கொண்டு அதன்மூலம் அடுத்தவன் தலையில் பாரத்தைப் போடுவது எந்த வகையில் நியாயமானது?

வேதனையில் - பயத்தில் மூழ்கி என்னநடக்குமோ என்ற ஏக்கத்துடன் அன்றாடம் பொழுதைக் கழித்து வரும் குடாநாட்டு மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன் இவ்வாறான நடவடிக்கைகளை அமுல்படுத்தும் படைத்தரப்பினர் அதற்கான கட்டணங்களையும் அறிவித்து மக்களின் பொருளாதாரத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தால்போல மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளால் பாதிப்படைபவர்கள் சாதாரண பொதுமக்களே. அனைவரும் அதனை உணர்ந்தால் எல்லாம் நன்றே நடக்கும்.

# அதிகார வர்க்கத்தின்.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயணியாக வந்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு எல்லாம் சுற்றி அலைந்து, உண்மைகளை உளவுபார்த்துக் கண்டறிந்த சாறு ஹொக், இலங்கை இராஜதந்திரத் தரப்பின் கடும் எரிச்சலுக்கும் கோபத்துக்கும் உள்ளாகியிருக்கின்றார்.

சுற்றுலாப்பயணி என்று காட்டி விஸா பெற்ற ஒருவர் இத்தகைய செயல்களில் ஈடுபட்டமை தொடர்பாக அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை இராஜதந்திர வட்டாரங்கள் தீர்மானம் எடுத்து, அது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகளையும் ஆரம்பித்திருக்கின்றன.

ஆனால், சுற்றுலாப்பயணியாக வந்த ஒருவர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரை சென்று அவரைச் சந்திக்கவும் - அதுவும் தம்மை மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய ஆய்வாளர் என்பதை மறைக்காமல் அவர் அடையாளப்படுத்திய பின்னரும் நாட்டின் தலைவரோடு நேருக்குநேர் கலந்துரை யாடவும் - அனுமதித்துவிட்டு, இப்போது வந்து அவருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை என்று கொழும்பு நிர்வாகம் முனைவது பெரும் முட்டாள்தனமின்றி வேறில்லை.

தினசரி அப்பாவிகள் கொடூரமாகக் கொல்லப்படும் யாழ்.குடாநாட்டில் தொடங்கி, கருணாகுழுவினால் சிறுவர்கள் படைக்குப் பெருமளவில் திரட்டப்படும் அத்துமீறல் அரங்கேறுகின்ற கிழக்குவரை சாறு ஹொக் தாராளமாகச் சென்று வந்து நடமாடியிருக்கின்றார். (அரசுக்கு எதிராக) நாடகமாடியிருக்கின்றார்.

அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ முதல்கொண்டு அரசு - எதிரணிப் பிரமுகர்கள், இலங்கை இனப்பிரச்சினைக்கு அனுசரணையாளர்களாகச் செயற்படும் நோர்வேத் தூதரகத்தினர், 'உதயன்' - 'சுடர்ஒளி' நிர்வாகத்தினர் வரை பல தரப்பினரையும் ஆரவாரப்படுத்தாமல் சந்தித்து உண்மைகளைக் கண்டு,கேட்டு அறிந்து அவதானித்து லண்டன் மீண்ட சாறு ஹொக் அதையடுத்து தாம் கண்ட உண்மைகளை தமது அமைப்பின் விசேட அறிக்கை மூலம் ஓகஸ்ட் முற்பகுதியில் அம்பலப்படுத்தினார்.

'உதயன்', 'சுடர்ஒளி' ஆசிரியர் அரசுத் தலைவரின் சீற்றத்துக்கும் ஏச்சுக்கும் உள்ளான விவகாரம் வரை சகல விடயங்களையும் போட்டுடைத்தவர் சாறு ஹொக்தான்.

உரிமை கோரப்படாமல் தொடரும் கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல் போன்றவற்றின் பின்புலத்தில் செயற்படும் அதிகார வர்க்கத்தின் அரூபக் கரங்களை அவரின் ஆய்வைப் பின்னணியாகக் கொண்ட அறிக்கை தோலுரித்துக் காட்டத் தவறவில்லை.

மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் பல்வேறு நாடுகள் உட்பட்ட சர்வதேச சமூகம், ஐ.நா.போன்ற தரப்புகள் எல்லாம் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கொழும்பு அரசை ஒரு பிடிபிடிக்க இந்த அறிக்கையே பேருதவியாக - பேரூக்கியாக - அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாமல், இலங்கையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்படுகின்றமை குறித்து கடந்தவாரம் பிரஸல்ஸ் நகரில் ஐரோப்பிய ஒன்றியம் ஆராய்ந்த போது சாறு ஹொக்கே நேரடியாக ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்பாக ஆஜராகி, தமது அனுபவங்களை சாட்சியமாக ஒப்புவித்து, இலங்கைத் தரப்புக்கு ஆப்புவைத் திருக்கின்றார்.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடரிலும் இலங்கை பற்றிய விவகாரத்தை சர்வதேசம் ஆராய்வதற்கான அடித்தளமாக - இலங்கைகுறித்து ஒரு கருத்தியல் நிலைப்பர்ட்டை உருவாக்குவதற்கான தடமாக - சாறு ஹொக்கின் அறிக்கையே அமைகின்றது. இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறாமல் தவிர்க்கவேண்டுமானால் இங்கு, அத்தகைய மனித உரிமை மீறல்கள் குறித்து நேரடியாகக் கண்காணித்து, விசாரித்து, அறிக்கையிடக்கூடிய ஒரு சர்வதேச - சுயாதீன - கண்காணிப்பு பொறிமுறை நாட்டுக்குள் அனுமதிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை சர்வதேச மட்டத்தில் வலுத்து வருகின்றது. அதற்குத் தூண்டுகோலாக அமைந்தவை இலங்கைத் தீவுக்குள் புதைந்துகிடக்கும் கொடூரங்கள், குரூரச் செயற்பாடுகள் போன்றவை பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்திய சாறு ஹொக் போன்ற மனித உரிமைவாதிகளின் அறிக்கைகள்தாம்.

உயிரைத் துச்சமாக மதித்து, இத்தகைய திகில் பயணங்களை மரணங்கள் மலிந்த யுத்தபூமியில் மேற்கொண்டு, உண்மைகளை வெளிக்கொணரும் மனித உரிமை வாதிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 280

சொற்சிலம்பம் 280 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் செப்ரெம்பர் 23ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்டோபர் 07 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.278 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 278

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 யா | ■ | 3 ச | 4 ப | ர் | 5 ம | 6 தி |
| 7 சீ | ர் | 8 வ | ரி | சை | ■ | 9 து | மி |
| ர் | ■ | 10 ச | தை | ■ | 11 ஈ | ர | ல் |
| 12 வா | 13 ச | ம் | ■ | 14 பா | க | ம் | ■ |
| 15 த | ரை | ■ | 16 பி | ண | ம் | ■ | 17 ஊ |
| ம் | ■ | 18 கா | ர | ம் | ■ | 19 வி | தி |
| ■ | 20 போ | து | ம் | ■ | 21 ம | டி | ய |
| 22 ஏ | ர் | ■ | 23 பு | ண் | ணி | ய | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 278

1. ஐஷா யூனுஸ் பிலால் அப்துல் ரஹ்மான்,
   55/ஏ, நியூ கங்காணம் கொடைவீதி,
   சீனன் கோட்டை, பேருவளை.
2. நெல்சன் ஜெபத்துரை,
   இல.94, பிரதான வீதி,
   பண்டாரவளை.
3. திருமதி. ரஞ்சனி ஜெயரத்தினம்,
   21,3/3,
   1 ஆவது சப்பல் லேன்,
   வெள்ளவத்தை.

### பாராட்டுப் பெறுவோர்

1. செல்வி உருத்திரமூர்த்தி கீர்த்தனா, அம்பாந்தோட்டை.
2. எம்.ஏ.அத்தாஸ், மாத்தறை.
3. மு.விதுஷினி வவுனியா.
4. திருமதி பிறேமிளா சரவணபவன், புத்தளம்.
5. திருமதி சந்திரா ரவீந்திரன், ஹட்டன்.
6. க.கமால்தீன், ஏறாவூர் - 03.
7. டி.ஆர்.ஆன் டிலுக்ஷி, கொழும்பு - 13.
8. ஏ.ஆர்.எம்.இறுசாத், வெலிகாமம்.
9. திருமதி எஸ். ரெஜினோல்ட், பண்டாரவளை.
10. திருமதி ச.சொர்ணமலர், வவுனியா.
11. எம்.அஹ்மத், வெலிகாமம்.
12. அ.பத்மலோசனா, கொழும்பு-13.
13. க.நிரஞ்சன், தெகிவளை.
14. செல்வி எம்.எஸ்.பாத்திமா சிபானா, ஏறாவூர்-03.
15. திருமதி டி.பரமேஸ்வரன், கொழும்பு-06.

## சொற்சிலம்பம் போட்டி இல. 280

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | ■ | 13 | | ■ |
| ■ | 14 | | | | | ■ | 15 |
| 16 | | | | ■ | 17 | 18 | |
| 19 | | | ■ | 20 | | | |
| 21 | | ■ | 22 | | | | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல.280

### இடமிருந்து வலம்

1. (ஒருவரின்/ அல்லது ஒன்றின்) குணாம்சம்.
4. கூட/மிகை.
7. காய்ந்த, வாடிப்போனதை இப்படிக் கூறுவர்.
8. வழிநடத்துபவன்.
9. கூடிக் களித்து மகிழ்தல்.
11. ஒரு கிரகம்/ ஒரு கிழமையும் கூட.
12. சிரார்த்த தினம்.
13. தாங்கள்.
14. ஒரு வகையில் இது கஞ்சத்தனமும் கூட.
16. இடது, வலது, முன், பின் என்பன/ புத்தகத்தின் அங்கம்.
17. சச்சரவு/மோதல்
19. நலம்.
20. காலில் அணியும் அணிகலன்.
21. தூர அளவீட்டு அலகு.
22. ஒரு பாடல் வகை ஒன்று.


### மேலிருந்து கீழ்

1. மூச்சு விடும் செய்யல்.
2. பாடுவது இதை.
3. (ஒரு பிரதேசத்தில்) வலிந்து ஆதிக்கம் செலுத்தும் தன்மை.
4. கடற்கரையில் இது ஓயாது.
5. வருடத் திதி.
6. திருமணமாகா இளம் பெண்.
8. மறைவில் அடிப்பது/ தமது.
10. பத்துப்பாடல் கொண்ட ஒரு பிரபந்தம்.
13. வெற்றிலை தரிப்பது.
14. பிரச்சினை.
15. மாட்சிமை/ மேன்மை.
16. பசிய தன்மை.
18. ஓர் அரிசி ரகம்.
20. சின்ன.

# தமிழ் சஞ்சிகை வயல்பரப்பில் புதியதொரு துளிர் கருஞ்சட்டைத் தமிழர்

'கருஞ்சட்டைத் தமிழர்' எனும் பெயருடன் சமுதாய அரசியல் மாத இதழொன்று தமிழகத்தின் சஞ்சிகை வயல்பரப்பில் புதிதாக துளிர்விட்டுள்ளது. சு.ப.வீரபாண்டியன் இதன் ஆசிரியராகப் பணியாற்ற கோ.தினகரன் வெளியிடுகிறார்.

இந்திய அரசியல், உலக மற்றும் தமிழகம் சார்ந்த பல அம்சங்களுடன் 'ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமை என்னாட்சி?' 'தமிழகத்தில் போக்குரல் அதிர்ச்சியில் ராஜபக்ஷ', 'தமிழர் வரலாறு இந்தியவரலாற்றின் முக்கியமான அம்சங்களில் ஒன்று' எனக் குறிப்பிடும் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் நேர்காணல், 'புகலிடத் தமிழர் முகாம்களுக்கு ஒரு நாடகப் பயணம்' என்ற தலைப்புகளிலான இலங்கையர் சார்ந்த சுவையான அம்சங்களும் உள்ளடக்கமாகியிருப்பதால் அவதானிப்புக்குரியதாகின்றது.




''கடந்த ஐம்பது ஆண்டு காலப்பகுதியில், பரந்த தமிழ் இலக்கியப் பரப்பில், ஆழமாக ஈடுபட்டு பழந்தமிழ் இலக்கியம், நவீன இலக்கியம் ஆகிய இரு துறைகளிலும் ஆழ்ந்த ஞானம், ஆராய்ச்சி, விமர்சனம் என்று பல தளங்களில் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளவர்.தமிழ் இலக்கணம், இலக்கியம், விமர்சனம் என்ற துறைகளை அவற்றின் வரம்புகளுக்குள் மட்டும் நின்று நோக்காது, வரலாறு, அரசியல், பொருளியில், சமூகவியல், மானுடவியல் என்று பல்வேறு புலமைசார் துறைகளின் பின்புலத்தில் நின்று, தமிழியல் ஆய்வுக்கு ஒரு பன்னெறி ஆய்வுக் கலாசார அணுகுமுறையைப் பயன்படுத்தி, ஆய்வுத்துறையை செழுமைப்படுத்தி வருபவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள்'' என அறிமுகம் செய்கின்றது சஞ்சிகை.

பண்பாடு, தமிழ்ச் சமூகம், தென்னிந்திய நலவுரிமைச்சங்கம், பெரியார் வருகை, பெரியார் கட்டமைக்க விரும்பியது, கற்பு குறித்த விவாதம், தமிழர்களுக்கு வரலாறு இல்லை என்பது குறித்து, தமிழ்மாணவரிடையே தமிழார்வம், ஷோபா சக்தி, புஷ்பராஜா போன்றவர்களின் ஈழ படைப்புக்கள் குறித்த விமர்சனம், பேராசிரியர் கண்டறிந்த வாழ்வியல் விழுமியங்கள் என தொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பேராசிரியர் பதில் வழங்கியுள்ளார்.

தமிழர் போராட்டம், அதன் இலக்கியத்தின் மீதான தாக்கம் என்பன இன்றைய காலகட்டத்தின் மிக முக்கியமான கேள்விகளும் பதில்களுமாகும். அதற்கான கேள்வி குறைபாடுகளின் காரணமாக பதில்களும் இல்லாமல் போய்விட்டன. இது பெரியதொரு குறைபாடாக சஞ்சிகையில் வெளித்தோற்றம் பெறுகின்றபோதும் பல முக்கியமான பிரச்சினைகள் கேள்விகளாகவும், பதில்களாகவும் உறைந்துள்ளன.

வாழ்க்கை எனும் நெடிய பயணத்தில் பேராசிரியர் கண்டறிந்த வாழ்வியல் அனுபவங்கள் குறித்து பேராசிரியர் பேசியுள்ளார்.

''அனுபவங்கள் எனக்கு நிறைய உண்டு. இல்லை என்று சொல்லவில்லை ஆனால், எனக்குக் கிடைத்த சிறப்புகளுக்கு நான் மட்டும் காரணம் அல்ல. நல்ல நண்பர்களும், ஆசிரியர்களும் எனக்கு வாய்த்தார்கள். அது மிகப் பெரிய விசயம். சிவப்பிரகாசம், றஜீஸ், கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்யானந்தன், தாம்சன், கைலாசபதி, சிவலிங்கம் என்று சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், நான் ஒன்று சொல்வேன். உனக்குள்ளே ஒரு தேடல் இருந்தால் அதை நீ தேடணும், நீ தேடவே வேணும். ஆங்கிலத்தில் ஒன்று சொல்வார்கள் 'மற்றவர்கள் தூங்கிக்கொண்டிருந்த வேளையில் அவன் தன்னுடைய அந்த இரவு நேர




எண்ணையை எரித்துக்கொண்டிருந்தான் என்று அந்த உண்மையான தேடல் இருக்குமேயானால் திருவள்ளுவர் சொல்லிவிட்டாரே...முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும். நீ ஓர் ஆராய்ச்சியாளன் என்று சொன்னால் ஆராய்ச்சியாளன்தான். சாப்பிடுகின்றபோது, பெண்சார்தியோடு இருக்கின்றபோது, எங்கேயும் எந்தநேரத்திலம் தேடு. உண்மையான தேடல் இருக்குமேயானால் தொடர்ந்து தேடணும், அது நிச்சயமாகப் பலன்தரும். என் சொந்த வாழ்க்கையில் நான் கண்டது இதுதான். இதற்குமேல் என் வாழ்க்கையைப் பற்றிச்சொல்ல ஏதுமில்லை. நான் பெருசாய் சாதிச்சது ஒன்றுமில்லை. நான் என்னுடைய ஆசிரியன் தோளிலிருந்து பார்க்கிறேன். அவனுக்கு தெரிந்த தூரத்திலும் பார்க்க எனக்கு அதிக தூரம் தெரிகிறது. என் மாணவன் என் தோளிலிருந்து பார்க்கிறான். அவனுக்கு நான் கண்ட தூரத்திலும் பார்க்க அதிக தூரம் தெரியும். இதுதான் புலமை வளர்ச்சியின் நியதி. முந்தி வந்த அறிவைப் பயன்படுத்தி, மேலே மேலே செல்லவேண்டும்'' என்ற பேராசிரியரின் கூற்று மிக மிக நீண்ட காலத்திற்கு எமது இதயங்களில் ஓர் வழிகாட்டிச் சுடராகவே ஒளிரப்போகின்றது.

சண்முகராஜா ஒரு நடிகர். விருமாண்டி படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகிற்கு அறிமுகமானவர். ஆற்றல்மிகு நாடகக் கலைஞரான இவரும் சகாக்களும் புகலிடத் தமிழர் முகாம்கள் தோறும் சென்று விழிப்புணர்வு நாடகங்களை நடத்திவருகின்றனர். அவை பற்றி அவர் பகிர்ந்துகொள்ளும் அனுபவங்கள் 'புகலிடத் தமிழர் முகாம்களுக்கு ஒரு நாடகப் பயணம்' எனும் சுவையான கட்டுரையாக மலர்ந்துள்ளது. தமிழக நாட்டார் வழக்காறுகளை, பண்புகளை புகலிடத்தமிழர்கள் தரிசிக்கும் விதமாகவும் தங்களுடைய அனுபவங்களை பரிமாறிக்கொள்ளும்படியாகவும் அது அமைந்திருப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

கருங்சட்டை என்பது எதற்காக என்ற கேள்வி மனக்குருத்தில் அதிர்வுகளை ஏற்படுத்தியபோது அதற்கான பதிலை ஆசிரியர் சு.ப.வீ. கடைசிப்பக்கத்தில் தந்திருக்கிறார்.

''கறுப்பு என்பது இழிவையும் துக்கத்தையும் மட்டும் காண்பிப்பதற்காக மட்டுமல்ல அந்த இழிவை துடைக்க எங்களை நாங்களே ஒப்படைத்துக் கொள்கிறோம் எனும் தியாகத்திற்கும் வீரத்திற்கும் கூட அடையாளமாகும்''என்கிறார் சு.ப.வீ.

''1945 இல் தமிழ்நாட்டில் கருஞ்சட்டைப்படை எழுந்தது! ஆதிக்கத்தை, அறியாமையை, மூடநம்பிக்கையை எதிர்த்துப் புறப்பட்ட கருஞ்சட்டைக்கு இன்னும் இந்த மண்ணில் வேலை இருக்கத்தானே செய்கிறது'' என்ற அவர் கூற்றின் மூலம் கருஞ்சட்டை தமிழர் சஞ்சிகையின் பின்புலம் என்னவென்பதை தரிசிக்கமுடிகிறது. ஒரு நல்ல சஞ்சிகையை வாசித்த உணர்வு நெஞ்சை நிறைக்கிறது.

**-கே.வி-**




## ரத்தத்தின் ரத்தத்திற்கு அர்த்தம் சொன்னவரே நம்ம ரத்தம்தான்

''இலங்கை இலக்கியத்துக்கு தொழிலாளர் சங்கங்களே ரொம்பவும் பங்களிப்புச் செய்திருக்கு, ஆனா, நம்ம விமர்சகர்களும், சரித்திரம் சொல்றவங்களும் அதைக் கண்டு பாராட்டுரதைக் காணோம்னு மூத்த தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் ரொம்பவும் வருத்தப்பட்டிருக்காரு''

''ஐயோ பிள்ளையாரப்பா, அது நெசம்தானுங்களா?''

''ஆமாப்பா! எல்லாத்தையும் ரெட்டடிப்புச் செய்ரதே நம்ம ஆளுகளுக்கு பொழப்பா போச்சு, ஆலமரத்து முனியாண்டி சும்மா உடுவானா...?''

''அடிசக்கை, அதைத்தானே இப்ப நம்ம தலைவர் உருவத்திலே கேட்டிருக்கானோ?''

''தொழிலாளர் சங்கங்கள், நடத்துன போராட்டங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் நடத்தி அரசியலையும் இலக்கியத்தையும் ஊட்டி தொழிலாளர்களை வளர்த்த சமாச்சாரங்களை எல்லாம் மூட்டைகட்டிவைச் சுட்டு, தொழிலாளர்களை காட்டிக்கொடுத்திட்டாங்க, காட்டிக்கொடுத்துட்டாங் க'ன்னு ஒப்பாரி வைக்கிறதை தவிர எப்பத்தான் நல்லதைச் சொல்லிப் பாராட்டுறாங்க. நம்ம பத்திரிகை காரங்க, அரசியல்வாதிக இப்புடித் தானே சொல்ராங்க''

''அடப்பாவமே!''

''சும்மா சொல்லப்படாது. அப்புடி ஆளுகளும் தொழிலாளர் சங்கத் தலைவர்களாக இருந்தாங்களே, அதுதானே வேண்டிக்கட்டிக்க வேண்டிக் கெடக்கு. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றைத் தானே நம்ம சனம் பதம் பாக்குது.''

''அது என்னங்க ஞாயம்?''

''நியாயமோ! அநியாயமோ. நம்ம தொழிற்சங்கத் தலைவரு ஓ.ஏ. நல்லவொரு சமாச்சாரம் சொல்லுராரு கேளு. தீப்பொறின்னு ஒரு பத்திரிகை வந்துதே ஞாபகம் இருக்கா. அடுக்கு மொழியிலே தலைப்புப் போட்டு சம்பந்தப்பட்ட ஆளுங்க தலையை பிய்க்க வைப்பாரே அந்தனிசில் அவர் நடத்துன பத்திரிகை. நம்ம தொழிற்சங்கத் தலைவரு கொஞ்ச காலம் தீப்பொறியை நடத்திக்கிட்டிருந்தாரு. அந்த பத்திரிகையிலே ரத்தத்துக்கு ரத்தமின்னு ஒரு பாடலை போட்டிருந்தாரு. 1970ஆம் வருஷம் பதுளை கீரைக்கொல்லைத் தோட்டத்திலே பொலிஸ்காரங்க சுட்டதுல அழகர் சாமி, ராமையான்னு ரெண்டு பேர் அநியாயமா செத்துப் போனாங்க. அவங்களைப் பத்துன பாட்டுத்தான் அது.''

''தொர அசத்துட்டாரு.''

''1971ஆம் வருஷம் ஏப்ரல் கிளர்ச்சி நடந்தது தானே! அப்ப நம்ம தலைவரையும் பொலிஸ்காரங்க புடிச்சி கம்பிக்கு பின்னாலே போட்டுட்டாங்க.''

''அடப்பாவிங்களா''

''இந்த பாட்டு மேலே பொலிஸ்காரங்களுக்கு சந்தேகம். ஏலே! ஆரு இதை எழுதினான்னு மெரட்டினாங்க. நான்தான்னு தலைவரு சொன்னாங்க. அவங்க நம்பல, அவுங்க மறுபடியும் மெரட்டுனாங்க. தலைவரு தலையை சொறிஞ்சுகிட் டாரு. என்னடா இது ஒரு தமிழ் பாட்டுக்கு அர்த்தம் கண்டு புடிச்சு அதை எழுதுன பாட்டுக்காரனு தடு சிங்கள பொலிஸ்காரன் தேடிக்கிட்டிருக்கான் னானா அது லேசுப்பட்ட சமாச்சாரமா இல்லியா?''

''இருக்காதா பின்னே? அது சரி நைனா இந்த சிங்களப் பொலிஸ்காரன் எப்புடி தமிழ் பாட்டுக்கு அர்த்தம் கண்டு புடிச்சான்?''

''அப்புடிப்போடு. அங்கதான நம்ம மகாதமியமே கெடக்கு. இந்த தமிழ் பாட்டை வாசிச்சு காட்டி, அதுக்கு அர்த்தம் சொல்லிக் கொடுத்தவரே நம்ம தொழிலாளர் சங்கத் தலைவர் ஒருவர்தானாம்.''

''கிழிஞ்சுதுபோ...!''

## "ஐயோ எங்களிண்ட கலைஞர்கள்!"

''கலைஞன் என்பவன் முத்து. அவன் இந்த நாட்டு சொத்து...''

''அம்மான்! என்ன எலெக்ஷனுக்கு நிக்கப் போரியலே! மாநகரசபையோ இல்லே ஏதாவது இலக்கிய தமிழ்ச் சங்கமோ?''

''ஹக் ஹக் ஹக்கா! நல்ல பகிடிதான். சரியாத்தான் கேட்டுப் போட்டியல். முத்து எங்கள் சொத்து என்றெல்லாம் கலைஞர்கள் பத்தி மேடைகளிலே பேசுரவங்களுக்கு குறைவில்லை. என்றாலும் எங்கள்ண்ட கலைஞர்கள் பாடு எல்லா விசயத்திலேயும் திண்டாட்டமாகத்தான் கிடக்கு''.

''என்ட தம்புரானே! அதேன் அப்புடி. எதைச் சொல்லுரியல்?''

''இலக்கிய சங்கங்களிலே என்றாலும் அரச மட்டத்திலே என்றாலும் எங்களின்ட தமிழ்க் கலைஞர்கள் பாடு திண்டாட்டம் தான்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டப் போரனான் என்று ஸ்டாலின் துரை முரண்டு பிடிச்சாப் போல எங்கள் தமிழ்கலைஞர்களை முடக்கி விடுவதிலே கொஞ்சம் பேர் முனைப்பாக நிக்கினம்.''

''துரைமார் என்றால் அப்புடித்தான்''

''நல்ல கதை''

''சொல்லுங்கோவன்''

''தமிழ் சங்கத்துலே எனுவல் கூட்டம் நடந்ததல்லே, அப்ப நடந்தவொரு அடைமொழி நீக்க புராணம் பற்றிய சமாச்சாரம்.''

''அதென்ன புராணம் அம்மான்?''

''எல்லாம் எங்களின்ட ஸ்டாலின் துரைமார் திருவிளையாடல்தான். இந்த சங்கத்துலே நீண்ட காலம் பணியாற்றி வார ஒரு கலைஞரையும் ஒரு கவிஞரையும் எலெக்ஷன் நேரத்துலே மணகவ்வச் செய்து போட்டாங்கள்''.

''அதென்னென்று அம்மான் ''

''அதைத்தான் திருவிளையாடல் என்று சொல்றனான்.இப்ப பாருங்கோ நம்ம கலைஞர்கள் கொஞ்சம்பேர் புனைபெயர்களால்தான் இலக்கிய ஆர்வலரிட்ட நிலைச்சு நிக்கினம்.''

''ஒரு கதைக்கு சோக்கல்லோ சண்முகநாதன். இல்லே வேண்டாம். மாவைவரோதயன் என்று வையுங்கோருக்கவன். இவையின்ட அழைப்பு மொழியான சோக்கல்லோ இல்லை மாவை வரோதயன் என்பவைகளை இரவோடு இரவா நீக்கிப் போட்டு வெறுமனே சண்முகநாதன், சத்தியசீலன் என்று வோட்டுச் சீட்டிலே திருநாமத்தைப் பதிஞ்சால், எந்த சனத்துக்கு விளங்கப் போவுது அப்பு. வோட்டுப் பேட வந்த உறுப்பினரும் இவையல் ஆரென்றே தெரியாமல் வோட்டைப் போடாமல் விட்டிட்டினம்.''

''எண்ட தம்புரானே!''

''உந்தக் கதை இப்புடி என்றால் அரச மட்டத்துலே எடுக்கப்பட்ட சில நல்ல நடவடிக்கைகள் எங்களிண்ட அகதிகள் சமாச்சாரம் போல அப்புடி தேங்கிப் போய் அல்லே கிடக்குது.''

''அதென்ன அம்மான்?''

''எங்களிண்ட தமிழ்க்கலைஞர்கள் பற்றியதொரு விபரமான ஆவணம் தேவையென்று சிங்கள கலைஞர்கள் கேட்டவையாம்.''

''அடிசக்கை''

'' நான் புருடா விடேயில்லை அப்பு. எங்களிண்ட உடுவை மகராசன் தில்லை ஐயா, நாடகக் குழுவிலே நடராஜானாக விருந்த காலத்துலே இது சம்பந்த மாக முடிவெடுக்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டதாம். அப்புறம் கலைக்கேசெல்வனார் அதை சாஸ்ட்டாங்கமாக நல்ல மனசோட வாங்கிக்கொண்டாராம். நிறைய கலைச்சேவை செய்த அவரும் இப்பே இதை அம்போன்னு விட்டுட்டு போட்டாராம்.''

''பிறகென்ன அம்மான் நடந்தது?''

''பிறகென்ன?! அதுவும் காணாமல் போனோர் பட்டியலில் அடங்கிக் கிடக்குது.''

''ஐயோ கதிர்மலையானே எங்களிண்ட கலைஞர்களை நீதான் காப்பாத்த வேணும்.''

''வேண்டுதல் சரிதான். தயாரிக்கப்பட்ட விபரக் கோவையை கடத்திப் போன வங்கள் கப்பம் கேட்டாலும் கேட்பினம்.''

# கவிதைப் புனல்

தயாரிப்பு: யூ.எல்.எம்.அஸ்மினா




## சொந்த மண்ணா?



கண் விழித்த ஒரு
அதிகாலைப் பொழுது
கசக்கி விழி சுருக்கி இமை
படலையைத் திறந்து பார்க்கிறேன்.
வரிகளிட்ட ஒரு உடுப்புருவம்
தெரிகிறது.
'படை'யினனொருவனைப்
பறை சாற்றியது உள்மனம்
சகுனமே சரியில்லையெனச்
சங்கடப்பட்ட படி படலையை
மீண்டுஞ் சாத்திவிட்டுத் திரும்பினேன்.
ஏன் பார்த்துவிட்டுப் போனாய்
என்னை என்று கேட்டால் போல்
வேட்டொன்று கேட்டது.....
கையிரண்டு முயர்த்தி
குப்புற விழுந்து படுத்தேன்
''குண்டிருக்கா'' குளறினான் படை
''இல்லை'' எனக்
கும்பிட்டெழுந்திருந்தேன்.
போய்விட்டான்....
தப்பேதுமுண்டோ திறந்ததில்?
என்வீடு என்படலை- என்றாலும்
இந்த மண் எங்களின்
சொந்தமண்ணா...?
சற்றேனும் புரியவில்லை.

■நல்லூர் சுபா

## உத்தமராய் அழைப்பீரோ?



ஈழப் பூங்காவில்
இரத்தம் மலிந்ததுவாய்
வாழ முடியாமல் மடிந்து
வீழ்ந்தன குடிகள்.

மலிந்தோடும் இரத்தத்தில்
மடிந்திடும் உயிர்களில்
இனமத பால் பேதமின்றி
இளசுகளும் அடங்கினவே


உயிர்கள் மடிகையிலும்
இனவாதம் பேசி நின்று
போர் முரசு கொட்டுகிறார்.
பசிக்கோர் உணவில்லை.

உணர்ந்திட்டே போலிகளை
உடைத்தெறிந்து வெளியேறி
உண்மையான அமைதிக்கு
உத்தமராய் அழைப்பீரோ?

பேசி நிற்கும் இனவாதம்
போலி என்றுஉணர்ந்து
பேச்சு வார்த்தைக்கு
பூக்களாய் தழுவிடுவீர்!

■ச.முருகானந்தன்

## நியூட்டனின் ஏர்ப்புவிதி



நான் ஏர்ப்புவிதியை
உணர்ந்தது இரண்டில்.
ஒன்று- காந்தத்தில்.
மற்றது உன் கண்களில்.

பெண்கள் சிரிப்பது கூட
இரண்டுவகையில் தான்.
பாவப்பட்டு, பார்க்கப்பட்டு.
நிச்சயமாய் சொல்.
நீ எந்தவகை?

கணித பாடத்தில்- நீ
கெட்டிக்காரி.
சந்தேகம் கேட்பதற்காகவே
உன்னிடம்
முட்டாளாக முயற்சிக்கிறேன்.

தமிழ்ப் பாடத்தில்
கவிதை கேட்டபோது
நீண்டதாகச் சமர்ப்பித்தாய்.
என்னைக் கேட்டால்
உன் பெயரே போதும்.!
உனக்கு பிடித்த கலர்
நீலமாமோ?
அப்பாடா!
இதிலாவது ஒத்துப்போகிறதே!

எனக்குப் பிடித்தவர்களின்
பட்டியலில்
முதலாவதாய் நீதான்.
உனக்குப் பிடித்தவர்களின்
பட்டியலில்
கடைசியாவது நானுண்டா?

■மன்னார் ஸர்வேஸ்வரன்.

## வருங்காலம்



வாழ்க்கையின் அர்த்தம்
'வாழ்தலே' என்றிருந்த
காலங்களில்
வாழ்க்கையை
வாழப்பிடித்தது!
வாழ்க்கையின் அர்த்தம்
'வாழ்தலில்லை' என்றுணர்ந்தபோது
காலம் தொலைந்து
காலமானது!
வாழும் காலம்- இனியும்
புலரும் என்ற
நப்பாசையில் காத்திருக்கின்றேன்!
தவறவிடப்பட்டவைகளால்
தலை குனிந்தபோதிலும்
தளராது.
தலை நிமிர்ந்து...!
தணல் கொட்டும் நெஞ்சோடு,
தண்மைமுட்டும் விழியோடு,
எனக்கும் இங்கொரு
வாழ்க்கை இருந்தது- என்று
நாளையாவது சொல்வேன்.

■வல்வை நெற்கொழுதாசன்

## குடியைக் குடிக்கும் குடிகள்!



குடித்து குடித்து
குடியை அழிக்கும்
குடிகாரக் குடிமகனே!
இன்னுமின்னும் குடி 'கள்'!

மதுவை நீ குடித்துக் கொள்கிறாய்
மது உன்னையோ குடித்துக் கொல்கிறது!
கோவலனே! - நீ
தொட்டுக்கட்டிய தாலியை கழற்றி
எறிந்து விட்டாள் உன் கண்ணகி...
வங்கியிலே அது
வடிவாய்த்துயில்கிறது!

சமைந்துவிட்ட உன் மகளுக்கு
சமூகம் கொடுத்த
சன்மானம்...
நீ வாங்கிக் கொடுத்த தங்கப்பதக்கம்
ஏதுதெரியுமா?
'குடிகாரன் மகள்'...
அநாதை முத்திரையும்- விதவைப்பட்டமும்
பெற்றுத் துடிக்கும் அவர்களுக்காய்? நீ
உயிரோடிருந்தும் என்ன செய்வதாய்
உத்தேசம்???
உத்தம போர்வைக்குள் ?
உண்மையை நிலைநாட்ட....
சத்தியத்தோடு வாழ சபதமெடு
இந்த யுகத்தில்....
மனிதனாய் நீ!

■தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா

## விரல் சூப்பும் சிறுவனும் வறுத்த கச்சானும்



நட்சத்திரங்களும் சடையாக பூத்து
நிலாவும் காயும் இரவினில்
இந்த வறுத்தகச்சான் சுருள்களை
ஏந்தியபடி கடற்கரை வெளியில்
சலிப்புற்றலையும் இன்னேரம்
அம்மாவின் மடியில் தலைவைத்து உறங்கியிருப்பேன்
பேய்க்கதைகள் கேட்டபடியாக

அரிச்சுவடிகளில் சித்திரங்கள் மேயும்
எனதின் பிஞ்சி விரல்களானது
இந்த வறுத்தகச்சான் சுருள்களை காவும்படியான
சாபக்கேட்டை கலவரம் ஒன்றுதான் திணித்தது எனக்கும்
என் அப்பாவை செமித்த கணத்தோடு .

எனக்கும் மிகுந்த ஆவல்தான்
அதோ அந்தக் குட்டி நட்டிகளாட்டம்
நிலா பழுத்து வெடித்த பின்னாட்களில்
கடலலைகளில் கால்கழுவி பன்னல் கிண்டி
கச்சான்கொட்டையும் சப்பி
காற்றுவாக்கில் அகலவிரித்துறங்குவதற்கு

ஆனால் அவர்கள் உடைத்தெறியும்
கச்சான்கொட்டை கோதுகள்மாதிரி
என் கனவுகளும் ஆசைகளும்
இந்தக்கடற்கரை வெளியில் ஒவ்வொருஇரவும்
உப்புக்காற்றில் அரிந்தபடியாக

என் அம்மாவிற்கும் தம்பிக்குமாக
இந்த வறுத்தகச்சான் சுருள்களை ஏந்தியபடி
கடற்கரை வெளியை உழவித் திரிந்த
அந்தப் பளிங்கு இரவுகளை மீட்கையில்
பட்டாம்பூச்சிகள் சிறகடித்துப் பறப்பதுபோலான
ஒரு அலாதியான மகிழ்வுதான் எனக்கு.

■ரகுமான் ஏ.ஜமீல்



## நீ மட்டும் தான்...



எத்தனை ஜென்மங்கள்
தான் பிறப்பேனோ! உன்னை
அம்மா என்று அழைக்க
அத்தனை ஜென்மங்களும்
தாயே நீ வேண்டும் - உன்
சேய் தழைக்க!

மலை அளவு புகழ் வந்தாலும்
மடி நிறைய பொருள் சேர்ந்தாலும்
தாயே உன்னை வணங்கமறப்பேனோ?
நோய் வந்து நீ பாய் மீது
கிடந்தாலும்...
தலையணை மந்திரம்
போட்டாலும்
போ என்று உன்னை வெறுப்பேனோ?

எத்தனை மாற்றங்கள் வந்தாலும்
தாயே நீ வேண்டும்- எனக்கு
உறவு என்று சொல்ல
உரிமையுள்ள செல்வம்
நீமட்டும் தான்!

■ யாழ்.வி.தமிழ்நிலவன்

## யாப்பறிந்து பாப்புனையும் வல்லான்!- இன்று யாருண்டு? சஜிதரனே உள்ளான்!

■ கவிஞர் தவசஜிதரன்

பாட்டுப் பாம்புக்கு பால் வார்ப்பவர்கள் அதன் பல்லைப்பிடுங்கி பையில் வைக்காது பண்டிதர்கள் நாங்களென்று பறையடிப்பதற்காய் அதற்கு, மகுடி ஊதி ஊதியே மாண்டு போனார்கள் என்று 'புதுக்கவிதைகள்' புலம்பிக் கொள்ள; முன்னோடிகளில் இறங்கி முக்குளிக்காது முண்டங்களைத் தயார் செய்யும் 'மூக்கோடிகள்' தாம் அங்கும் இங்கும் பொறுக்கி எடுக்கும் துண்டு துக்கடாக்களை ஒய்யாரக் கவிதை என்று ஒப்பாரி வைக்கிறார்கள். அவர்களின் அழுகுரல்கள் அகிலத்தை வென்று ஆர்ப்பரிக்காது பாவம்! அவர்களுள்ளே அடங்கிப் போய்விடும்.




கன்னித் தமிழை கற்பழித்ததுமல்லாது சங்கக்கவிக்கு சங்கூதும் அவர்களை கழுதைகள் கூட கணக்கில் எடுக்காது. காலவெள்ளத்தில் அவர் கப்பல் கவிழ்ந்து போய்விடும் என்று 'மரபுக் கவிதைகள்' மல்லுக்கு நிற்க, இவர்களின் சக்களத்திச் சண்டைக்கு மத்தியிலே சமாதானப் பாலமாய் வீச்சு மிக்க கவிதை படைக்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய இளவல்கள் இருபத்தோராம் நூற்றாண்டிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் காலத்தை வென்று இருந்துகொண்டே இருப்பார்கள்.

எப்போதும் இடைவெளிகள் தோன்றும்போது காலம் கவட்டுக்குள் கைவைத்துக் கொண்டு கண்ணுறங்கிக் கொள்வதில்லை. தகுதியானவர்களை தாபித்து தங்கத் தமிழின் தாகம் தீர்க்கும். அந்த வகையில் மரபுப்பாக் களுக்கு மாலை சூடினாலும் புதுமைப் பூக்களோடும் புணர்ந்து கொள்ளும் வருங்காலக் கவியுலகின் வரப்பிரசாதம்தான் கவிஞர் தவசஜிதரன்.

யாழ் மண்ணிலே கறுப்பு ஜுலையில் இல்லை! இல்லை! அந்த நெருப்பு ஜுலையில் கருத்தரித்தாலும் அதில் கருகிப்போகாமல் காலமாடிய கால்பந்தாட்டத்தில் தனது ஏழு வயதில் மாத்தளை மண்ணிலே போய் விழுந்து விருட்சமாய் இன்று எழுந்து வியாபித்து நிற்கிறார்.

'இளைய தோளில் முதிய தலைகள்' என்ற அல்லாமா இக்பாலின் கூற்றை உண்மைப்படுத்தும் கவிஞர் சஜிதரன் தனது பத்து வயதிலிருந்து பதின்மூன்று வருடங் களாக கவிதைத் தளத்தில் பயணிப்பவர். இவர் ஈழத்தின் மரபுக் கவிதை எழுதும் விரல் விட்டு எண்ணக் கூடிய இளைய தலைமுறையினரில் மிக முக்கியமானவர். புதுக் கவிதையிலும் அளப்பரிய ஆற்றல் மிக்கவர். யாப்பை பிசிறில்லாமல் கையாளத் தெரிந்தவர்.

*''தோன்றாப் புள்ளியொன்றில் சுரந்து இருதயத்தின் வழி பிரவகிக்கும் பெருநதி கவிதை. தனது சர்வகால ஓட்டத்தால் மாறாத நித்திய அழகைக் கவிதை கொண்டிருக்கிறது என்றாலும் அது எந்தப் புள்ளியிலும் தரித்து நிற்பதில்லை. மாறாக, காட்டாறாய் கணந்தோறும் மாற்றங்களுக்கு உட்பட்டு பாய்ந்தோடுகிறது கவிஞனுக்குள்.''* என்று கவிதை பற்றிக் கூறும் இவர் *''இற்றைத் தினம் மட்டிலான எனது வாழ்வின் முக்கிய கணம் எதனையும் அம்மாவிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. அம்மாவைப் பற்றிச் சொல்ல நேரும்போதெல்லாம் சொற்களின் பொலிவுப் போதாமையை வெகுவாக உணர்கிறேன். எனதும் எனது கவிதைகளினதும் உயிர்ப்புக்கு அவர் மூலம்''* என்று தன் தாயைப் பற்றி 'அழுதுகிறார்'.

*''கவிதையைத் கருதும்போது தமிழகத்தில் சிலபல காரணங்களுக்காக தற்போது வாழ்ந்து வரும் அப்பா கண்முன் நிற்கிறார். நான் மிக சிறுவனாக இருந்தபோதே என்னைக் கவிஞனாகக் கனவு கண்டவர் அவர். அவரது பிரயத்தனங்களால் இள வயதிலேயே எனக்குக் கிட்டிய அறிஞர் அறிமுகங்கள், இலக்கிய மேடைகளில் வாய்ப்புக்கள், பெரியவர்களின் வாழ்த்துக்கள், உற்சாகமூட்டல்கள் அனைத்தும் அபரிமிதமான தன்னம்பிக்கைளை என்னுள் வளர்த் திருந்தன.''* என்று தான் கவிஞனாக உருவானதைப் பற்றி உருவகிக்கிறார்.

பொன்னான விளக்கு என்றாலும் தூண்டுகோல் ஒன்றின் துணை இல்லாதுவிட்டால் அதனால் இருளை விலக்க முடியாது. தந்தையின் அனுசரணையும் அறிஞர்களின் ஆற்றுப்படுத்தலும் இந்த இளம் கவிஞரை கவியுலகம் வியக்க வைக்குமளவுக்கு ஆளாக்கி இருக்கிறது.

இந்திராணி தவயோகநாதன்-வேலுப்பிள்ளை தவயோகநாதன் தம்பதிகளுக்கு 1983-10-07 இல் பிறந்த புதுமைப் புதல்வனான சஜிதரன் மகாகவி பாரதியின் மீது மானசீகமான அன்பு கொண்டவர்.

''முற்பிறப்பில் மூண்டதொரு பிணைப்பென் றெண்ணி
முனிவனவன் பாரதியைத் தொழுது வாழும்
அற்புதத்தில் விளைவதெந்தன் கவிதை! அன்றி
அடியேனேன் கொண்டதிறம் ஏது மில்லை!''

என்று பாரதியின் கவிதா ஆளுமையின் மீது கொண்ட காதலால் கசிந்துருகுகிறார். இவரது 'ஒளியின் மழலைகள்' கவிதைத் தொகுதிக்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி கவிஞர் எம்.ஏ.நுஃமான் ''பாரதியின் பக்திப் பாடல்களை படிப்பது போன்ற ஒரு பிரமையை கவிஞர் சஜிதரனின் சில யாப்பு வழிக் கவிதைகள் நம்முள் ஏற்படுத்துகின்றன'' என்று குறிப்பிடுகின்றார். பாரதிக்கு அடுத்ததாக தன்னைக் கவர்ந்த கவிஞர்களாக சேரன், பிரேம் ரமேஷ், எஸ்போஸ் ஆகியவர்களைக் அடுக்குகிறார்.

மாத்தளை இந்துக் கல்லூரியில் உயர்தரம் கணிதப் பிரிவில் கல்வி கற்ற சஜிதரன் 'சண்டே ஒப்சேவரில்' இரண்டு வருடம் பத்திரிகையாளராகக் கடமையாற்றிவிட்டு தற்போது 'லக்பிம' ஆங்கிலப்பத்திரிகையில் கடமையரற்றுகின்றார். இவரது கவிதைகள் இலங்கைத் தேசிய பத்திரிகைகள் மற்றும். சஞ்சிகைகளின் கவிதா தாகத்தை தீர்த்துள்ளன. இணையத்திலும் உலாவருகின்றன.

மரபுச் சால்வை அலுத்துப் போய்விட்டதென்று புதுக்கவிதையை பொன்னாடையாகப் போர்த்திக் கொண்ட கவிஞர்களான வைரமுத்து, அப்துல் ரகுமான், மேத்தா, வாலி, சிற்பி, ஈழத்தில் மகாகவி, நீலாவணன், அண்ணல், அ.ந.கந்தசாமி இன்னும் பெயர் குறிப்பிட மறந்தவர்கள் எல்லோருமே மரபுக் கவிதையில் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர்கள். அவர்கள் உருவாக்கிய புதுக்கவிதையில் உருவான ஓட்டைகளின் வழியாக சில புல்லு ருவிகள் புகுந்து வசனமே கவிதை என்று வம்புக்கு இழுத்து வாய்ச்சவடால் விடுகின்றனர். அதனால் தடுக்கி விழுந்தால் கவிஞர் ஒருவரில்தான் விழவேண்டுமென்ற ஈனநிலை ஈழத்துக் கவிதை இலக்கியத்தில் தோன்றிவிட்டது. அதனால் 'முதலாளித்துவவாதிகள்' ஏன் 'பொதுவுடைமை' ஏற்படுத்தினோம் என்று புழுங்கிக் கொள்கிறார்கள். இவர்களின் புலம்பல் புண்ணுக்கு மருந்தாக ஆளுமை மிக்க புதிய தலை முறையினர் புறப்பட்டிருப்பது ஈழத்து இலக்கியத்தின் எதிர்காலத்தை கட்டியம் கூறுகின்றது.

மரபுக் கவிதை என்பது புலவர்களின் 'சொத்து' என்ற சொல்லாடலை கட்டுடைத்து சஜிதரன் போன்ற இளம் படைப்பாளிகள் [வயதில்] தோன்றியிருப்பது ஈழத்து கவிதை உலகின் வளமான வசந்தமாகும்.

# குழப்பத்தில் பாகிஸ்தான்

ஏழுவருடகாலம் சவூதி அரேபியாவில் அஞ்ஞாதவாசம் செய்துவிட்டு நாடு திரும்பிய முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் [illegible] திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம்- [illegible] கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோ லண்டனில் இருந்து நாடு திரும்பி ஜனாதிபதி பெர்வெஸ் முஷாரப்புடன் அதிகாரப் பகிர்வு செய்யப்போகிறார் என்று வெளியாகி வரும் [illegible]-

[illegible]

ஆகியவை காரணமாக சர்வதேச கவனம் இவ்வாரம் ஈராக்கில் இருந்து சற்று விடுபட்டு பாகிஸ்தான் பக்கம் திரும்பி உள்ளது.

1999ஆம் ஆண்டு நவாஸ் ஷெரீப்பை பதவி நீக்கம் செய்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிய முஷாரப் தனக்கு நாட்டில் அதிகரித்துவரும் எதிர்ப்புக்கு மத்தியில் வருட இறுதியில் பொதுத்தேர்தலை எதிர் நோக்குகின்றார். பெனாஸிர் பூட்டோவுடன் அதிகாரப் பகிர்வு உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டு மேலும் ஐந்து வருடகாலம் பதவியில் நீடிக்க முஷாரப் திட்டமிடுகிறார்.

[illegible] பாகிஸ்தானின் [illegible] மீது படையினர் தாக்குதல் நடத்தியதை ஆதரித்தது மூலமும், தலிபான்களுக்கு எதிராக பகிரங்கமாகவே அறிக்கைகளை வெளியிட்டு வருவது மூலமும் அமெரிக்காவினதும் மேற்குலகினதும் நம்பிக்கையை பெற்றுள்ள பெனாஸிர் பூட்டோவுடன் அதிகாரப் பகிர்வு செய்து கொள்வது தனது அரசியல் நோக்கங்களை அடைய பெரிதும் உதவும் என்பது முஷாரப்பின் நம்பிக்கை.

ஏற்கனவே டுபாயில் முஷாரப்பின் பிரதிநிதிகளுடன் பெனாஸிர் பூட்டோ பேச்சு நடத்தி உள்ளார். பாகிஸ்தானில் ஜனநாயகத்தை மீண்டும் ஏற்படுத்துவதே தமது அதிகாரப் பகிர்வின் நோக்கம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் நவாஸ் ஷெரீப்பை திருப்பி அனுப்பிய சம்பவம் ஜனநாயகத்துக்கு முரணானது என்பதால் அது முஷாரப்புடன் அதிகாரப் பகிர்வு செய்து கொள்ளப்போகும் பெனாஸிர் பூட்டோவுக்கு பெரும் பின்னடைவு என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். வருட இறுதியில் பாகிஸ்தானில் பொதுத்தேர்தல் நடைபெற இருப்பதால் பெனாஸிர் பூட்டோவின் உதவியுடன் மேலும் ஐந்து வருடங்கள் பதவி நீடிக்க முஷாரப் திட்டமிடுகிறார்.

1947ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்து தனிநாடாகிய நாளில் இருந்தே அரசியல் ஸ்திரமின்மையை எதிர்நோக்கி வருகிறது. பாகிஸ்தானில் இருந்து பிரிந்த பங்களாதேஷிலும் இதே நிலைமைதான். மக்களால் தெரிவு செய்யப்படும் அரசாங்கங்கள் இராணுவத்தினரால் கவிழ்க்கப்படுவதும், ஆட்சியாளர்கள் மீது தேச விரோத குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவர்கள் சிறையில் அடைக்கப்படுவதும் இந்த நாடுகளில் சகஜமாக இடம் பெற்று வருகிறது.

1999இல் பதவி நீக்கம் செய்யப்பட்ட நவாஸ் ஷெரீப் மீது வரி ஏய்ப்பு, தேசத் துரோகம் ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் சவூதி அரேபியாவின் தலையீடு காரணமாக அவர் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து அவரை விடுவித்து சவூதி அரேபியாவுக்கு நாடு கடத்த முஷாரப் இணங்கினார். அடுத்த பத்து வருடகாலம் பாகிஸ்தான் திரும்பக்கூடாது, அரசியலில் ஈடுபடக் கூடாது என்ற உறுதிமொழியின் பெயரிலேயே நவாஸ் ஷெரீப் மீதான குற்றச்சாட்டுக்கள் மன்னிக்கப்பட்டு அவர் சவூதி அரேபியாவுக்கு நாடுகடத்தப்பட்டிருந்தார். எனினும் கடந்த ஆகஸ்ட் மாதம் பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைக் காரணம் காட்டி நவாஸ் ஷெரீப் கடந்த திங்களன்று நாடு திரும்பி இருந்தார். வருட இறுதியில் பாகிஸ்தானில் தேர்தல் நடைபெற இருப்பதால் கட்சியின் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட நவாஸ் ஷெரீப் நாடு திரும்ப அனுமதிக்க வேண்டும் என்று கட்சி ஆதரவாளர்கள் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். பத்து வருடத்துக்கு நாடு திரும்பப் போவதில்லை என்று நவாஸ் ஷெரீப் உறுதி அளித்திருப்பதால் அவர் நாடு திரும்புவதைத் தடை செய்யும்படி முஷாரப் சார்பில் நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது. ஆனால் இந்த உறுதிமொழி தொடர்பான எழுத்து மூல ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முஷாரப் சார்பு வழக்கறிஞர்கள் தவறி இருந்தனர். இதனாலேயே நவாஸ் ஷெரீப் நாடு திரும்ப எதுவித தடங்கலும் இல்லை என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருந்தது.

நவாஸ் ஷெரீப் நாடு திரும்பும் பட்சத்தில் கைது செய்யப்படுவார் என்றே முதலில் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அவர் கைது செய்யப்பட்டிருந்தால் மீண்டும் முஷாரப் பாகிஸ்தானின் நீதித் துறையுடன் மோதும் பெரும் சவாலை எதிர்நோக்க வேண்டியதாக இருந்திருக்கும். ஏற்கனவே உயர்நீதிமன்ற பிரதம நீதியரசர் இப்திகார் சௌத்திரிக்கும் முஷாரப்புக்கும் இடையில் மோதல்கள் இருந்து வருகின்றன. இப்திகார் சௌத்திரியை கடந்த மார்ச் மாதம் முஷாரப் பதவியில் இருந்து இடைநிறுத்தி இருந்தார். எனினும் உயர்நீதிமன்றம் கடந்த ஜூலையில கூடி அவரை பதவியில் மீண்டும் அமர்த்தியது. தற்பொழுது நவாஸ் ஷெரீப் திருப்பி அனுப்பப்பட்டதற்கு எதிராகவும் உயர்நீதிமன்றத்தில் அவரது ஆதரவாளர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் தீர்ப்பு முஷாரப்புக்கு மற்றொரு சட்ட நெருக்கடியை ஏற்படுத்தலாம்.

2003 ஆகஸ்டில் முஷாரப் ஓய்வுபெறும் வயதை அடைந்தபோது சட்டப்படி இராணுவத்தின் பிரதம தளபதி என்ற வகையில் அவரது பதவிக்காலம் முடிவடைந்திருந்தது. எனினும் அப்பொழுது நாடாளுமன்றத்தில் விசேட சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு 2007 நவம்பர் 15ஆம் திகதி வரை அவர் ஜனாதிபதியாகவும் இராணுவப் பிரதம தளபதியாகவும் பதவி வகிக்க வழி வகுக்கப்பட்டது.

ஆகவே, இன்னும் இரண்டு மாதகாலமே முஷாரப்புக்கு இருக்கிறது. அதே சமயம் வருட இறுதியில் நாடாளுமன்ற, மாகாண தேர்தல்களும் நடைபெற இருக்கின்றன. இதனால்தான் நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்பு தேர்தல்களை நடத்துவதற்கும் பெனாஸிர் பூட்டோவுடன் பேச்சு நடத்தி அதிகாரப் பகிர்வு செய்து கொள்வதற்கும் முஷாரப் முனைகிறார். இந்தப் பேச்சுக்கள் வெற்றி அளிக்குமானால் முஷாரப் மேலும் 5 வருடகாலம் ஜனாதிபதி பதவியில் நீடிக்கவும், பெனாஸிர் பூட்டோ மூன்றாவது தடவையாக பிரதமர் பதவியை ஏற்கவும் வாய்ப்பு ஏற்படும். இந்த அதிகாரப் பகிர்வுக்கு அமெரிக்காவினதும், மேற்குலகினதும் ஆதரவு இருப்பதாக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். பெனாஸிர் பூட்டோவின் இந்த அதிகாரப் பகிர்வு, பாகிஸ்தான் மக்கள் மத்தியில் அவரது கட்சிக்கு உள்ள ஆதரவை பெருமளவு குறைக்கும் என்று நம்பப்படுகின்றது. ஏற்கனவே செல்வாக்கு இழந்துள்ள முஷாரப்பையும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று கூறிக்கொண்டு இஸ்லாமிய உலகுக்கு எதிராக வெறியாட்டம் நடத்தும் புஷ்ஷையும் பகிரங்கமாக ஆதரித்துக்கொண்டு பாகிஸ்தான் மக்களின் உள்ளங்களைப் ஒருபோதும் வெல்லமுடியாது. அமெரிக்காவைப் பொறுத்தவரை அது தனது பயங்கரவாதத்துக்கு எதிரான போரை தற்போதைக்கு நிறுத்தப் போவதில்லை. இதற்கு பாகிஸ்தானின் உதவி அதற்கு கட்டாயம் தேவை.

உலக வர்த்தக மையம் மீது அல்கைதா இயக்கத்தினால் தாக்குதல் நடத்தப்பட்டு ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் அமெரிக்கா இன்னும் பயங்கரவாதத் தாக்குதல் ஆபத்தை எதிர் நோக்கியிருப்பதாக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சுத் தலைவர் மைக்கல் செர்டோப் கருத்து வெளியிட்டுள்ளார். "பயங்கரவாதிகள் சும்மா இருக்கவில்லை. அவர்கள் தமது உத்திகளை மீளாய்வு செய்கிறார்கள். தமது மூலோபாயங்களையும் திறமைகளையும் வளர்த்து வருகிறார்கள்" என்றும் அவர் கூறுகின்றார். ஆகவே, பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவைப் பொறுத்த வரை பாகிஸ்தான் முக்கியமான ஒரு நாடாகக் கருதப்படுகின்றது. அமெரிக்கா 1000 கோடி டொலர்களை பாகிஸ்தானுக்கு இராணுவ பொருளாதார உதவியாக வழங்கி உள்ளது. அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனின் விசேட நிதியில் இருந்தே இப்பெரும் தொகை பெறப்பட்டுள்ளது. அமெரிக்காவையும், மேற்குலகையும் திருப்திப்படுத்த தாமும் இஸ்லாமிய தீவிர வாதத்துக்கு எதிரானவர் என்று நவாஸ் ஷெரீப் கூறி வருகிறார். ஆனால் பெனாஸிர் பூட்டோவையும் முஷாரப்பையும் நம்பும் அளவுக்கு நவாஸ் ஷெரீப்பை அமெரிக்கா நம்புவதில்லை. பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் முஷாரப், தனது ஒரு முக்கிய சகாவாக அமெரிக்காவினால் நம்பப்படுகின்றார்.

-சஞ்சாரன்-








மை வெளிச்சம்

நோய், குடும்பப் பிரச்சினை, வெளிநாட்டு பிரயாணம், விவாக விவகாரம் தீர்த்து வைக்கப் படும். பிறந்த திகதி, மாதம், வருடம் கொண்டு வரவும். நேரம் 9- 5 வரை.

ஈஸ்வரி

Dr. P. Thiyagaraja(J.P.Hons)
21-1/1, ஜம்பட்டா வீதி, கொழும்பு- 13.
தொலைபேசி: 2440606
Fax:0094- 1-2440606
www.eswari.com

வெளிநாட்டில் உள்ளவர்கள் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளவும். மேலதிக கட்டணமின்றி நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

# வஞ்சம் தீர்த்தான்...

(20பக்கத் தொடர்ச்சி)

பிரமையாக்கும் என்று ரிச்சர்ட் நினைத்தான்.

ஏனெனில், ஒருநொடியில் அந்தக் காட்சி மறைந்துவிட்டது.

ரயில்வே ஸ்டேசனை நோக்கி அந்த சரளைக் கற்பாதை வீதியினூடாக ஜீப் விரைந்தது. திருப்பத்தில் வேகம் குறைந்து மெதுவாக நகர்ந்தது.

ரிச்சர்ட் தகவல்பரிமாற்றக் கருவியை கையிலெடுத்தான்.

"ஹலோ! ஹலோ! 140! 140"

பதில் இல்லை.

சிறிய பிரயாணிகள் ரயிலொன்று நின்றிருந்தது. அது புறப்படுவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தது.

அப்போது -

ஒரு நடுத்தர வயதான மனிதன் அதில் ஏறுவதற்கு தண்டவாளத்தின் அருகாமையில் ஓடிவந்துகொண்டிருந்தான். ரிச்சர்ட்டின் கழுகுக் கண்கள் அவனைக் கண்டுவிட்டன. முதலில் அதைப் பெரிதாக நினைக்காத ரிச்சர்ட் திடீரென என்ன நினைத்தானோ தெரியவில்லை. அந்த மனிதனை நோக்கி ஜீப்பைச் செலுத்தினான்.

ஜீப் தன்னை குறிவைத்து வருவதைக் கண்டதும் அந்த மனிதனின் ஓட்டத்தில் பதற்றம் ஏற்பட்டது. மெதுவாக நகர்ந்துகொண்டிருந்த ரயிலைப் பிடிக்க அவனால் முடியவில்லை. தடுமாறி விழுந்துவிட்டான்.

ஜீப் நின்றது.

ரிச்சர்ட் இறங்கினான்.

"உங்களுக்கு நான் உதவமுடியுமா?"

"நன்றி, இல்லை... வேண்டாம். நான் ரயிலை பிடிக்கவேண்டும் அவசரம் அவசரம்"

அவன் எழும்பி ஓடி ரயில் பெட்டியில் தொங்கி உள்ளே நுழைந்துவிட்டான். ரயிலும் வேகமாக ஓடத்தொடங்கிவிட்டது. அப்போது கண்ட ஒருகாட்சியால் ரிச்சர்ட் திகிலடைந்து போனான்.

அந்த மனிதன் விழுந்த இடத்திலிருந்து சில அடிகளுக்கு முன்னால் - ஒரு கைத்துப்பாக்கி கிடந்தது.

அந்த மனிதன் கீழே விழுந்தபோது அவனுடைய இடுப்பிலிருந்தாவது பாக்கெட்டிலிருந்தாவது அந்தத் துப்பாக்கி கீழே விழுந்திருக் கக்கூடும்.

ஜீப்பின் முன் விளக்கின் வெளிச்சத்தில் தெரிந்த துப்பாக்கியை ரிச்சர்ட் கையிலெடுத்தான்.

அவன் நிமிர்ந்து பார்த்தபோது, ரயில் வெகு தொலைவுக்குச் சென்றுவிட்டது.

***

தென்ன மரத்தோட்டத்திலிருந்து மூன்று சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. ரோந்து பொலிஸ்காரன் ரொபினும் இரண்டு நீக்கிரோக்களும் அங்கு சடலமாகக் கிடந்தார்கள். அவர்களது நெஞ்சிலும் மார்பிலும் சன்னங்கள் பாய்ந்திருந்தன.

இரண்டு வருடங்களின் பின்னரே துப்பாக்கி மனிதன் கண்டுபிடிக்கப்பட்டான். மூன்று பேரையும் அவன்தான் கொன்றிருந்தான்.

மிஸ்டர் இமானுவேல் என்றழைக்கப்படும் அந்த நபர் முன்னாள் இராணுவ வீரன். அவனுடைய மனைவி திருமதி மோலின் ஒரு பியானோ டீச்சர். மிகவும் வசீகரமான பெண். தனது மகளுக்கு பியானோ கற்றுக்கொடுக்கவேண்டும் என ரொபின் அவளை அழைத்துவந்து இரண்டு முரட்டுத்தனமான நீக்ரோக்களிடம் அவளை ஒப்படைத்துவிட்டான். அவர்கள் அவளைப் பதம் பார்த்ததுடன் மட்டுமல்லாமல் பரலோகமும் அனுப்பிவிட்டார்கள்.

இதனை அறிந்துகொண்ட இமானுவேல் தனது மனைவியை கொலை செய்தவர்களை பழிவாங்க புறப்பட்டுவந்துவிட்டான்.

இமானுவேலுக்கு பெண்குரலில் பேசும் வல்லமை உண்டு. அவ்வாறு பேசி அவர்களிடம் தொடர்புகொண்டு தென்னந்தோப்புக்கு அழைத்து தனது வஞ்சகத்தைத் தீர்த்துக் கொண்டான்.

அவனுக்கு 10வருடகால சிறைத்தண்டனை கிடைத்தது. அவனுக்காக வாதாடிய வழக்கறிஞர் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே இமானுவேல் சுட்டான் என்றவாறு வழக்கை ஜோடித்துவிட்டார்.

# கணவனுக்கு...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்மேலும் சொன்னதாவது: "கணவன் ... தங்கள் மனதில ஏற்கனவே உள்ள தேவையற்ற சிந்தனை களை நீக்குவது அவசியம். இருவரும் எந்தவருக்குத் தங்கள் கடந்தகால சுகப்புகளிலிருந்து விடுபடமுடியும் என்னோடு எந்தவருக்கு புதிய சமரச சிந்தனைகளை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். இந்த விஷயத்தில் துணைவருக்கு ஆறுதல் சொல்லி உளவியல் பூர்வமாக அவரது நம்பிக்கையைப் பெறுவது விரும்பத்தக்கது. இது தேவையற்ற சிந்தனைகள் கொஞ்சம் மனதிலிருந்து விலகிச்செல்ல உதவியாக இருக்கும்" என்றார்.

### பெரும் மாற்றம்

இன்று ஆண் - பெண் என்ற பாகுபாட்டில் பெரும் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. வேலைக்குப் போகும் பெண்கள் அதிகரித்துள்ள இந்தக் காலத்தில் ஆண்களுடன் பெண்கள் நெருங்கிப் பழக வேண்டியிருக்கிறது. இதை ஒரு சமுதாய மாற்றமாகப் பார்க்கும் பெண்கள், கணவன் மீது சந்தேகப்படுவதில்லை. மாறாக, இதை ஒர் ஆரோக்கியமான உறவாக, நிலைமையைக் கருத்தில் கொண்டு ஏற்றுக்கொள்கின்றனர்.

### பிரச்சினைக்குத் தீர்வு சாத்தியமே

கணவன் இதர பெண்களுடன் சிரித்துப் பேசுவது மனைவிக்கு ஏன் கோபத்தை ஏற்படுத்தவேண்டும்? இந்தச் சூழ்நிலையில் மனைவி உண்மையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? இதோ சில உபயோகமான குறிப்புகள்:

✱ பொறாமை உணர்வுக்கு இடம் தராமல் மனத்தைரியத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். சகிப்புத்தன்மையும் பரந்த மனப்பான்மையும் உறவுகளை மேலும் ஆழமாக்கும்.

✱ கணவரின் சமூக அந்தஸ்தைப் புரிந்துகொண்டு அவர் அதை பேணுவதற்கு அவருக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்.

✱ கணவரின் பெண் நண்பர்களிடம் நாகரிகமாக நடந்துகொள்ளுங்கள். வீட்டு விசேஷங்களின்போது அவர்களை வரவேற்று மனம் விட்டுப் பேசுங்கள். நீங்களும் அவர்கள் வீட்டுக்குச் சென்று வாருங்கள்.

✱ முக்கிய ஆதாரமின்றி கணவரைச் சந்தேகிக்கவேண்டாம். மற்றவர்களின் கிசுகிசுக்களை நம்பாமல், அறிவுபூர்வமாக யோசித்துச் செயல் படுங்கள்.

✱ நேர்மறை எண்ணத்தைக் கொண்டிருங்கள். நேரிய சிந்தனை இருந்தால், உங்கள் நடத்தையும் நன்றாக இருக்கும். எதிர்மறைச் சிந்தனை அதேபோன்ற சூழ்நிலைகளைத்தான் உருவாக்கும்.

✱ உங்கள் துணைவரின் பழக்க வழக்கங்கள் மற்றும் கலாசாரம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுங்கள். உங்களுக்கு ஆட்சேபணை இருக்கும் விஷயங்களை ஒவ்வொன்றாக இடைவெளி விட்டு மாற்ற முயற்சிசெய்யுங்கள்.

✱ ஒருபோதும் துணைவரின் விஷயங்களில் வரம்புமீறி தலையை நுழைக்காதீர்கள். கணவன் - மனைவி என்றபோதிலும் அவரவருக்கு என தனி சுதந்திரம் இருக்கவே செய்கிறது.

✱ உங்கள் பழக்கங்களைப் பட்டியலிடுங்கள். உங்களை நீங்களே ஆத்மவிசாரணை செய்யுங்கள். நான் ஏன் ஒன்றுமில்லாத விஷயத்துக்கெல்லாம் பயப்படுகிறேன்? சாதாரண விஷயத்துக்கு ஏன் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறேன்? என்பது போன்ற ஆத்மவிசாரணை உங்களை உயர்த்திக்கொள்ள உதவும்.

### கணவரின் தோழிகளினால் உண்டாகும் நன்மைகள்

✱ ஆண்-பெண் நட்பில் பரஸ்பரம் உள்ள சாதக மற்றும் பாதக மனப்பாங்கை புரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதனால், அவர்கள் அலுவலக மற்றும் குடும்பச் சூழ்நிலையை இனிமையானதாக மாற்றிக் கொள்ள முடியும்.

✱ இதரப் பெண்களுடன் மனைவியை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் கணவனுக்கு, தான் இதுவரை புறக்கணித்துவந்த மனைவியின் குணாதிசயங்கள் தெரியவரும். 'ஐயோ என் மனைவி இவளை விட எவ்வளவோ மேல்' என்று திருப்தி அடைவார்கள்.

✱ குடும்பப் பிரச்சினைகள் மற்றும் இதர சிக்கல்களின்போது மனைவியின் கண்ணோட்டத்தைப் புரிந்துகொள்ள இது உதவியாக இருக்கும்.

✱ மனைவியால் கணவனுக்குத் தரப்படும் இடைவெளியால் கணவன் மனைவிக்கு இடையிலான அன்பு மற்றும் நம்பிக்கை அதிகரிக்கும்.

✱ பெண்கள் மீதான கூச்ச உணர்வு கணவனிடமிருந்து விலகும். பரிச்சயமில்லாத பெண்களுடனும் சகஜமாகப் பேச, அறிமுகம் செய்து கொள்ளுமளவுக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

✱ கடுமையான சூழ்நிலைகளில் உடன் பிறந்தவர்களும் உறவினர்களும் கூட துணைக்கு வருவதில்லை. ஆனால், நண்பர்கள் அவர்கள் பெண்களாகவே இருந்தாலும் துணை நிற்பார்கள்.

✱ சமூகத்துடன் உள்ள தொடர்பு வலுப்படும். சமூகத் தொடர்பின் எல்லை விரிவடையும்.

✱ அலுவலகம் மற்றும் குடும்பச் சூழலில் உள்ள வேலைப்பளுவுக்கு மத்தியில் சிரித்து மகிழ்வதன் மூலம் மன இறுக்கமற்ற சூழ் நிலையை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

✱ பெண்களிடம் சிரித்துப்பேசும் உற்சாகமான மனப்பாங்கு கணவனுக்கு வந்துசேரும்.

✱ பெண்களை மரியாதையுடன் நடத்தவேண்டும் என்ற நற்பண்பு ஆண்களுக்கு ஏற்படும். இது அலுவலக தொழில்திறமையை அதிகரிப்பதுடன் குடும்ப உறவுகளையும் சீராகப் பராமரிக்க உதவியாக இருக்கும்.

# ராசி பலன்

**17-09-2007 முதல் 23-09-2007**

பெர்.சந்திரலிங்கம்

## மேடம்

**அச்சுவினி, பரணி,கார்த்திகை 1**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமைய லாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். பகை விலகும். உடல்நலமுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு.

## இடபம்

**கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம்1, 2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். தாய் நல மில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## மிதுனம்

**மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1, 2, 3**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவுவர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். பகைவரால் தொல்லையுண்டு. உடல்நலம் பாதிக்கலாம். திருமண வரய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் தொல்லையுண்டு.

## கடகம்

**புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர் பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## சிம்மம்

**மகம், பூரம், உத்தராடம் 1**

காரியத்தடை இருக்கும். பணம் வரும் செலவாகும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி குறையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். பகைவரால் தொல்லையுண்டு. உடல்நலம் பாதிக்கலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## கன்னி

**உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்காலம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## துலாம்

**சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3**

காரியத்தடையுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். பகை விலகும். உடல் நலமுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## விருச்சிகம்

**விசாகம் 4, அனுசம், கேட்டை**

காரியத்தடையுண்டு. பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1**

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## மகரம்

**உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம்1,2**

காரியத்தடையுண்டு. பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் அன்பு பாராட்டுவர். தாய்நலம். தந்தை நலமில்லை. நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## கும்பம்

**அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

காரியத்தடையுண்டு. பணப்பற்றாக் குறை நிலவும் உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர்நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம் அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறைலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறைலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்கள் பகைகொள்ளக் கூடும்.

## மீனம்

**பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி**

காரியசித்திஉண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறைநிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

# எரியும் பூமிப்பந்து!



உலகின் பல நாடுகளை புயலும், மழையும் சமீப காலமாக மாறி மாறி சேதப்படுத்தின. இதில் நூற்றுக்கணக்கானோர் பலியாயினர். பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் நாசமடைந்துள்ளன.

இப்படி வெயில், மழை என இயற்கை மாறி மாறி மனிதர்களைப் பந்தாடுவதற்கான காரணம்தான் என்ன?

மனிதன் தன் சுய இலாபத்துக்காக இயற்கையை சீரழித்ததுதான் காரணம். தொழிற்புரட்சி தொடங்கியபோதே இயற்கைச் சீரழிவும் ஆரம்பமாகிவிட்டது. உலகில் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் இருந்து அதிகளவில் கார்பன்டை ஒக்சைட் ,மெதேன், நைட்ரஜன் ஒக்சைட் போன்ற வாயுக்கள் வெளியேறுகின்றன. இதனால் பூமி வேகமாக வெப்பமடைகின்றது.



தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் வாயுக்களின் அளவு அதிகரிப்பதால் காற்றின் சமச்சீர் அளவு மாறுபடுகிறது. சுயஇலாபத்துக்காக காடுகளை அழித்து, மரங்களை வெட்டுகிறார்கள். அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் நகரின் பரப்பளவுக்கு இணையான மழைக்காடுகள் ஆபிரிக்காக் கண்டத்தில் மட்டும் தினமும் அழிக்கப்படுகின்றன.

காடுகளும் மரங்களும் வெட்டப்பட்டதால் மனிதர்களுக்கும் உயிர் இனங்களுக்கும் தேவையான ஒக்சிஜனில் பற்றாக்குறை ஏற்படுகின்றது. காற்றில் உள்ள வாயுக்களின் அளவும் மாறுபடுகின்றது.

சூரிய வெப்பம் நம்மை நேரடியாகத் தாக்காமல் இருப்பதற்காக, ஓசோன் மண்டலம் என்ற அற்புதமான போர்வையை பூமிப் பந்தின் மீது இயற்கை போர்த்தியுள்ளது. ஆனால், பேராசை கொண்ட மனிதன், ஓசோன் மண்டலத்திலும் ஓட்டையை ஏற்படுத்திவிட்டான். இதனால், சூரியனின் புற ஊதாக்கதிர்கள் நேரடியாகத் தாக்கி, பூமியின் வெப்பம் அதிகரிக்கின்றது. இதன் காரணமாக மனிதர்களை பல்வேறு நோய்கள் தாக்குகின்றன.



மனிதன் அவசியத் தேவைகளுக்காகப் பயன்படுத்தத் தொடங்கிய வாகனங்கள் இப்போது வசதியின் அடையாளமாகக் கருதப்படுகின்றன. தினமும் கோடிக்கணக்கான வாகனங்கள் வீதிகளில் பயணம் செய்கின்றன. இந்த வாகனங்களில் இருந்து வெளியேறும் புகையினால் பெருநகரங்களில் வாழ்வோர் மூச்சுத் திணறி வருகின்றனர். இவற்றில் இருந்து வெளியேறும் வாயுக்களால் பூமியின் வெப்பமும் அதிகரித்து வருகின்றது. இப்படி பூமியின் வெப்பம் அதிகரிப்பதற்கு பல காரணங்களைக் கூறிக் கொண்டே போகலாம். அதிகரிக்கும் வெப்பத்தால் சூறாவளி, புயல்போன்றவை கடல் பகுதிகளில் அதிகளவு தோன்றுகின்றன. இதனால் அளவுக்கு அதிகமான மழை பெய்து வருகிறது. இது குறித்து, உலகச் சுற்றுச் சூழல் அமைப்பு ஆள்வோருக்கும் மக்களுக்கும் பல்வேறு எச்சரிக்கைகளை விடுத்துள்ளது. ஆனால், இந்த எச்சரிக்கைகளை எவரும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. இதன் விளைவுகளை உடனடியாக மனிதர்கள் அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர்.

உலகின் மற்ற நாடுகளை விட பசிபிக் பெருங்கடலை ஒட்டி அமைந்துள்ள அமெரிக்காவைத்தான் அதிகளவில் சூறாவளிகளும் புயல்களும் தாக்கி, பேரழிவை ஏற்படுத்தி வருகின்றன. கடல் பரப்பில் வெப்பம் அதிகரிக்கும்போது காற்று ஆவியாகி, வெற்றிடம் ஏற்படுகின்றது. இந்த வெற்றிடத்தை நிரப்ப அருகில் உள்ள இடங்களில் இருந்து காற்று வேகமாக வருகின்றது. பூமியின் சுழற்சியால் இது சூறாவளியாக உருமாறுகின்றது. மிக நீண்ட கடல் பரப்பில் இது பயணம் செய்யும்போது பன்மடங்கு வீரியம் பெறுகின்றது. அதே வேகத்தில் அருகில் உள்ள நிலப்பரப்பை கடக்கும் போது ஏற்படுத்தும் சேதத்தைத்தான் 'கத்ரீனா', 'ரீட்டா' போன்ற சூறாவளிகள் எமக்கு உணர்த்தின.


புயல், மழை வெள்ளம் போன்றவை ஆசிய நாடுகளை அதிகம் பாதிக்கும் என்று உலக சுற்றுச் சூழல் அமைப்பு எச்சரித்துள்ளது. குறிப்பாக வங்கதேசம், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பாதிப்பு அதிகம் இருக்கும் என கருதப்படுகின்றது. அதன் ஆரம்பம் தான் சமீபத்தில் இந்தியாவின் வடமாநிலங்களை பாதித்த புயல், மழை வெள்ளச் சேதங்கள்.

கடந்த சில ஆண்டுகளாக பூமி வெப்பம், ஆண்டுக்கு 1.4 டிகிரி பாரன்ஹீட் அளவு அதிகரிப்பதாக அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி மையம் அறிவித் துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் பூமியில் வெப்பம் முன்னெப்போதும் இல்லாத அளவு அதிகரித்துள்ளது. துருவப் பிரதேசமான ஆர்டிக் பகுதியில் வெப்பம் இருமடங்கு அதிகரித்துள்ளது. அலாஸ்கா, மேற்கு கனடா, கிழக்கு ரஷ்யா ஆகிய பகுதிகளில் வெப்பம் அதிகரித்து வருவதால் ஆர்டிக் உறைபனி பிரதேசம் வேகமாக மறைந்து வருகிறது. இதேநிலை தொடர்ந்தால், 2040ஆம் ஆண்டில் ஆர்டிக் பிரதேசத்தில் பனியே இல்லாமல் போகலாம் எனவும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பல நூற்றாண்டுகளாக உறைந்துள்ள பனி வேகமாக உருகுவதால் இங்கிருந்து வெளியேறும் தண்ணீராலும் புயல்,மழையாலும் கடலின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகின்றது. இதனால் தான், கடலோரப் பகுதிகளில் திடீரென சீற்றம் ஏற்படுகின்றது. இப்போது ஆண்டுக்கு 3 அங்குலம் அளவுக்கு கடல் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. பூமியில் வெப்பம் அதிகரிக்க, அதிகரிக்க கடல் நீர் மட்டமும் வேகமாக அதிகரித்து விடும். இன்னும் சில ஆண்டுகளில் இப்போதைய கடல் நீர் மட்டத்தை விட 3அடி உயரத்துக்கு கடல் நீர்மட்டம் உயரலாம் என கருதப்படுகின்றது.



மக்கள் தொகை அதிகரிப்பதால் காடுகளும் விளைநிலங்களும் வேகமாகக் குறைந்து வருகின்றன. மழைக்காடுகள் அதிகளவு இருந்தால்தான் நாம் சுவாசிப்பதற்கு தேவையான ஒக்சிஜன் கிடைக்கும். அரியவகை வன விலங்குகள் உயிர்வாழ முடியும்.






இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2007, செப்.16 ஆம் திகதி வெளியிடப்ப